**கவனிக்க.-** *21.06.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *மற்றும் பகுதி* II *ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1817 - 2013 ජූනි මස 28 වැනි සිකුරාදා - 2013.06.28

*1817 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## *பகுதி IV(அ) - மாகாண சபைகள்*

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 1586 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1586 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | 1625 | | |


**கவனிக்க.-** (i) *கே.டீ.எம்.சந்திரா பண்டார சமுதாய சேவைகள் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *அக்குறனை ஜாமீ ஆ ரஹ்மானியா அரபுக் கல்லூரி (கூட்டிணைத்தல் ) சட்டமூலம் 2013,மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(iii) *கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, மே மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2013, யூலை மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூலை மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ.எச்.எல்.வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# மற்றைய நியமனங்களும் பிறவும்

**சப்பிரகமுவ மாகாண மாகாண சபை**

**சப்பிரகமுவ மாகாணத்தின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்**

நன்னடத்தை அலுவலர்களை நியமித்தல்

*1944 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க தவறாளர் நன்னடத்தை கட்டளைச் சட்டத்தின் 18 (3) ஆம் பிரிவின்கீழ் நிரல் I இல் குறிப்பிடப்பட்ட நன்னடத்தை உத்தியோகத்தர்களின் பெயர்களுக்கு எதிரேயுள்ள நிரல் II இல் குறிப்பிடப்பட்ட நீதிமன்றப் பிரிவுகளுக்கு நிரல் III இல் குறிப்பிடப்பட்ட திகதியிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதனை இத்தால் அறிவிக்கின்றேன்.*

**தரம் II இலுள்ள நன்னடத்தை உத்தியோகத்தர்கள்**

| தொடர் இல. | நிரல் I பெயர் | நிரல் II நீதிமன்றப் பிரிவு | நிரல் III திகதி |
|---|---|---|---|
| 01 | செல்வி எம். ஏ. பீ. யு. செனவிரத்ன | பலங்கொடை | 2013.01.15 |
| 02 | திருமதி எம். ஏ. யு. பிரியதர்ஸனி | எம்பிலிபிடிய | 2013.06.01 |

திலினி தர்மதாச,
நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு
சேவைகள் ஆணையாளர்,
சப்பிரகமுவ மாகாணம்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம்,
சப்பிரகமுவ மாகாண சபை,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2013, யூன் 13.

6-779/2

---

# மாகாண சபை அறிவித்தல்கள்

**சப்பிரகமுவ மாகாணத்தில் சட்டப் பிரச்சினைகளுக்கு ஆளாகும் சிறுவர்களுக்காக பராமரிப்பு இல்லமொன்றை (பெண்கள்) ஸ்தாபித்தல்**

*1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் பற்றிய கட்டளைச்சட்டத்தின் திருத்தச் சட்டமான 1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கச் சட்டத்தின் 52 ஆம் பிரிவின் 3 ஆம் உட்பிரிவினதும் 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 (1) "அ" பிரிவினதும் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சப்பிரகமுவ மாகாண சபையின் நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் தொடர்பான அமைச்சர் ரஞ்சித் பண்டார ஆகிய நான், 2013 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி தொடக்கம் செயற்படும் வகையில் சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தில் எஹெலியகொட பிரதேச செயலகப் பிரிவில் 140A ஆம் இலக்க வியலகொட கிராம உத்தியோகத்தர் பிரிவில் வியலகொட கிராமத்தில் சிறுவர் பராமரிப்பு இல்லமொன்று ஸ்தாபிக்கப்பட்டு நடத்திச் செல்லப்படுகிறது என்பதை தாழ்மையுடன் இத்தால் அறிவிக்கின்றேன்.*

ரஞ்சித் பண்டார,
சமூக நலன்புரி, நன்னடத்தைகள்
மற்றும் சிறுவர் பாதுகாப்பு,
கிராம அபிவிருத்தி மற்றும் கிராமியக்
கைத்தொழில் அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

2013, மே 02.

6-779/1

**மாநகர சபை அதிகாரப் பிரதேசங்களில் திண்மக் கழிவுப் பொருட்களை முகாமை செய்தல் தொடர்பான துணை விதி**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற (அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் என்ற வகையில் என்னால் ஒழுங்குசெய்யப்பட்ட கீழ்க்காட்டப்பட்டுள்ள வரைவுத் துணை விதிகள் மேற்கூறிய பிரிவின் கீழ் இவ்வாறு பிரகடனம் செய்யப்படுகிறது.*

*மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) 267 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 129 ஆம் பிரிவு மற்றும் 272 ஆம் பிரிவின் 5 ஆம் உட்பிரிவின் (அ), (இ) ஆகிய பந்திகளின் மூலம் திண்மக் கழிவுப்பொருட்களை முகாமை செய்தல் தொடர்பான விதிகளை விதிப்பதற்கு நகர சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகளை ஏற்றுக்கொள்வதற்காக சப்பிரகமுவ மாகாணத்தின் மாநகர சபைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.*

*மஹீபால ஹேரத்,*
*உள்ளூராட்சி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*2013.06.06.*

**பொது**

*1. இத்துணைவிதி திண்மக் கழிவுப்பொருட்களை முகாமை செய்தல் தொடர்பான துணைவிதி என அறிமுகப்படுத்தப்படும்.*

*2. மாநகர சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள பிரசித்திபெற்ற இடங்கள், பிரத்தியேக மனையிடங்கள் வீதிகள், பாதைகள், ஆகிய இடங்களில் சேரும் திண்மக் கழிவுப்பொருட்களைப் பிரித்தெடுத்தல், களஞ்சியப்படுத்தல், சேகரித்தல் கொண்டு செல்லல் அத்துடன் அவற்றை மாற்றும் இடங்களைச் செயற்படுத்தல் மற்றும் அவ்விடங்களை நடாத்திச் செல்லல், ஒழுங்கு செய்தல், செப்பமிடுதல் மற்றும் நீக்கம் செய்தல் ஆகிய செயல்கள் தொடர்பிலான ஒழுங்குமுறைகள், மேற்பார்வை சோதனை மற்றும் நிருவாகம் ஆகிய பணிகளுக்காக இத்துணை விதிகள் விதிக்கப்படுகின்றன.*

*3. மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள ஏதாவதொரு மனையிடத்தின் ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது அதில் வசிப்பவராலும் தமது சுற்றாடலை குப்பைக்கூளங்களற்ற சுகாதாரப் பாதுகாப்பான சிறந்த நிலையில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.*

*4. மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள ஏதாவதொரு மனையிடத்தின் உரிமையாளரால் அல்லது அதில் வசிப்பவரால் தமது மனையிடத்தில் உண்டாகும் கழிவுப் பொருட்களைச் சேகரித்தல், பிரித்தெடுத்தல், களஞ்சியப்படுத்தல் எடுத்துச் செல்லல் மற்றும் நீக்கம் செய்தல் ஆகிய பணிகளைச் செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாவிட்டால் இத்துணைவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்க அப்பணிகளைச் செய்விப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.*

*5. (i) மனையிடமொன்றின் ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது வசிப்பாளராலும் அவரது மனையிடத்தில் உண்டாகின்ற திண்மக் கழிவுப் பொருட்களை கூட்டித் துடைத்து அல்லது ஏனையவொரு முறையை உபயோகித்து தினந்தோறும் அல்லது அதனிலும் குறைந்த காலஎல்லையொன்றுக்குள் ஒன்றுசேர்க்கப்படல் வேண்டும்.*

*(ii) ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது வசிப்பாளராலும் மேற்கூறிய உட்பிரிவின்படி ஒன்றுசேர்க்கப்பட்ட கழிவுப்பொருட்கள் இலக்கம் 08 தொடக்கம் 20 வரையுள்ள துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க வெவ்வேறாகப் பிரிக்கப்படல் வேண்டும். இல்லாவிட்டால் அவ்வாறு செய்விப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.*

*(iii) உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் கழிவுப் பொருட்கள் களஞ்சியப்படுத்துவதற்காக உபயோகிக்கப்படும் ஏதாவதொரு பை உறை பாத்திரம் அல்லது ஏனையவொரு கொள்கலம் இலக்கம் 08 தொடக்கம் 20 வரையுள்ள ஏற்பாடுகளின்கீழ் ஒன்றுசேர்க்கப்படுவதற்காக சிறந்த முறையில் பேணிச் செல்லப்படல் வேண்டும். அவை கிழிந்து துவாரமேற்பட்டு உடைந்து அல்லது தொடர்ந்து ஈரலிப்பான நிலையில் இருப்பதன் காரணமாக நெகிழ்வடைந்து அல்லது வேறு ஏதாவதொரு காரணத்தினால் உடைந்து விழுந்துவிடக்கூடிய அல்லது பழுதடையக்கூடிய நிலையில் இருக்குமாயின் அது கழிவுப் பொருட்களைச் சேகரிப்பதற்கு உபயோகிக்கப்படாதிருத்தல் வேண்டும். நியாயமான முறையில் அதை உபயோகிக்கும்போது அவ்வாறு ஏற்பட்டிருந்தால் அதேபோன்று உரிமையாளர் அல்லது வசிப்பாளர் எதிர்ப்பார்ப்பவர்களாக இருப்பார்களாயின் சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் ஒரு பகுதி சலுகையாக அல்லது முழுமையாக சலுகை அடிப்படையில் அத்தகைய கொள்கலங்களை சபையினாலேயே வழங்கப்படலாம்.*

*(iv) 1 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒன்றுசேர்க்கப்பட்ட கழிவுப்பொருட்கள் சபையினால் காலத்துக்குக் காலம் அறிவித்தல் வெளியிடப்படும் வகையில் சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படுகின்ற கழிவுப் பொருட்களைச் சேகரிக்கும் முறைப்படிக்கும் நேரசூசிக்கும் இணங்கும் வகையில் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் கழிவுப் பொருட்கள் அகற்றப்படுதல் வேண்டும்.*

*(v) உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் வீட்டுவாசிகளின் விருந்தினர்களினதும் அயலவர்களினதும் சுகாதாரத்திற்கு அல்லது அப்பிரதேசத்தின் சுகாதாரப் பாதுகாப்பிற்குப் பங்கமேற்படும் வகையில் அல்லது அபாயகரமான முறையில் கழிவுப் பொருட்கள் ஒன்றுசேர்க்கப்படுதலோ களஞ்சியப்படுத்தப்படுதலோ அல்லது நீக்கம் செய்யப்படுதலோ கூடாது.*

6.(i) எந்தவொருவராலும் வீதியொன்றுக்கு, தெருவொன்றுக்கு, பாதையொன்றுக்கு, ஒடுக்கமான பாதையொன்றுக்கு அல்லது ஏனையவொரு பொது இடத்துக்கு அல்லது மனையிடமொன்றுக்கு அல்லது வடிகாலொன்றுக்கு அல்லது நீர்ப்பாதையொன்றுக்கு அல்லது நீர்தேக்கமொன்றுக்கு அல்லது கடலுக்கு கழிவுப் பொருட்கள் போடப்படாதிருத்தல் வேண்டும்.

(ii) எந்தவொருவராலும் சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் திறந்த நிலப்பரப்பொன்றில் வைத்து சுற்றாடலுக்குப் பங்கமேற்படும் வகையில் கழிவுப் பொருட்கள் எரிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(iii) எந்தவொரு உரிமையாளரும் அல்லது வசிப்பாளரும் 7ஆம் இலக்கத் துணைவிதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏதாவதொரு கழிவுப்பொருள் வர்க்கத்தை விடுவித்தல், செப்பமிடல், ஒழுங்குபடுத்தல் அல்லது நீக்கம் செய்தல் ஆகிய பணிகளுக்காக அனுமதியைப் பெற்றுக்கொள்ள நேரிடும் சந்தர்ப்பமொன்றில் அவ்வாறு அனுமதியைப்பெற இயலாதிருக்கும் போது அவர் அந்தக் கழிவுப் பொருட்களை உத்தரவுபெற்ற கழிவுப்பொருள் சேகரிக்கும் நபரொருவரிடம் கையளிக்கப்படலாம்.

(iv) 7ஆம் இலக்கத் துணைவிதியின்கீழ் ஒழுங்கு செய்தல், செப்பமிடுதல் அல்லது நீக்கம் செய்தல் என்பன செய்யப்படாத கழிவுப் பொருட்கள் மேலே (III) இன் ஏற்பாடுகளின்கீழ் எவரேனுமொரு உத்தரவுபெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பவரொருவரால் சேகரிக்கப்பட்ட ஏதாவதொரு கழிவுப்பொருள் வர்க்கத்தை 08 தொடக்கம் 20 வரையிலான இலக்கங்களைக் கொண்ட துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

7. (i) ஏதாவதொரு மனையிடத்தின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பிலேயே தவிர கழிவுப்பொருட்களை அந்த மனையிடத்திலேயே நீக்கம் செய்யப்படலாம்.:-

(அ) சபையினால் அத்தகைய கழிவுப்பொருட்கள் நீக்கம் செய்தலைத் தடைசெய்யப்பட்டுள்ள பிரதேசங்களில்
(ஆ) சபையினால் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள சில கழிவுப்பொருள் வர்க்கங்கள்

(ii) மனையிடமொன்றின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்குச் செயலாளரால் அனுமதியளிக்கப்பட்ட திட்டமொன்றிற்கும் தரத்திற்கும் இணங்க அமைக்கப்பட்ட தகன நிலையமொன்றில் அல்லது சூளையொன்றில் கழிவுப்பொருட்கள் எரிக்கப்படலாம். இல்லாவிட்டால் செயலாளரால் அனுமதியளிக்கப்பட்ட வகையில் கழிவுப் பொருட்களை செப்பமிடல், ஒழுங்கு செய்தல் அல்லது புதைத்து விடுதல் என்பன செய்யப்படலாம்.

(iii) எவரேனுமொரு உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் “கொம்போஸட் பாத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக செயலாளரிடம் விண்ணப்பிக்கப்பட்டால் அந்த உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு அந்தக் கொம்போஸ் பாத்திரங்களைப் பேணிச் செல்வதற்கு போதியளவு இடவசதிகள் இருக்குமாயின் செயலாளரால் அந்த கொம்போஸ்ட் பாத்திரங்களுக்கான மொத்தச் செலவின் ஒரு பகுதியை அல்லது முழுமையான சலுகை அடிப்படையில் அந்த கொம்போஸ் பாத்திரங்கள் உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு வழங்கப்படும்.

(iv) உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் தமது மனையிடத்தில் சேரும் வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்கள் இயன்றளவு தூரத்திற்கு செயலாளரால் அங்கீகரிக்கப்படக்கூடிய வகையில் ஒழுங்கு செய்வதற்கான அல்லது செப்பமிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதேபோன்று மேற்கூறிய கழிவுப்பொருட்களுள் ஏதும் எஞ்சியிருப்பின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் கழிவுப்பொருட்களின் தன்மையைக் கவனத்திற்கொண்டு சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்தி மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிப்பவரொருவருக்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.

(v) வீதியொன்றுக்கு அல்லது பாதையொன்றுக்கு அண்மையில் அமைந்துள்ள ஏதாவதொரு மரத்தை அல்லது அம்மரத்தின் ஒருபகுதியை வெட்டும் நபரொருவர் அதை வெட்டிய உடனே நீக்கம் செய்தல் வேண்டும். இல்லாவிட்டால் அதனை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் அவ்வாறு இல்லாவிட்டால் மாநகர சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் கட்டணமொன்றைச் செலுத்தி மாநகர சபையின் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(vi) எந்தவொருவரும் அவரது கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் ஏதாவதொரு விலங்கு, வீதியொன்றில் அல்லது பாதையொன்றில் அல்லது பொது இடமொன்றில் மலம் கழிப்பதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் அவ்வாறு மலம் கழித்தால் 08 தொடக்கம் 20 வரையிலான இலக்கங்களைக்கொண்ட துணைவிதிகளின்படி அதைச் சுத்தப்படுத்தி மலக்கழிவுகளை அகற்றுவது அந்நபரின் பொறுப்பாகும்.

(vii) எந்தவொருவராலும் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் எந்தவொரு வகையிலான கழிவுப்பொருளும் வாகனமொன்றிலிருந்து வீதியொன்றில் அல்லது பாதையொன்றில் அல்லது பொது இடமொன்றில் போடப்படாதிருத்தல் வேண்டும்.

(viii) வீடொன்றை அல்லது ஏதாவதொரு மனையிடத்தை நிர்மாணிப்பதற்காக அல்லது பழுதுபார்ப்பதற்காக விண்ணப்பிக்கும் ஒருவர் அவரது மனையிடத்தில் சேரும் திண்மக் கழிவுப்பொருட்கள் மற்றும் நீக்கம் செய்யும் கழிவுப்பொருட்கள் என்பனவற்றை செப்பமிடுகின்ற, ஒழுங்கு செய்கின்ற முறைகள் பற்றிய விபரங்களை அவரது விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

**வீட்டுச் சூழல்கள்**

8. (i) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது வசிப்பாளரும் கூட்டித்துடைப்பதன் மூலம் அல்லது ஏனையவொரு முறையில் சேகரிக்கும் கழிவுப்பொருட்களைப் பின்வருமாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;

(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) விலங்குகளின் சடலங்கள், சடலங்களின் பகுதிகள் மற்றும் மலம் ;
(உ) மனையிடத்தைக் கூட்டித்துடைக்கும்போது சேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்

(ii) ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது வசிப்பாளராலும் மேற்கூறியவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் வெவ்வேறாகப் பைகளிலும் பாத்திரங்களிலும் அல்லது ஏனைய கொள்கலன்களிலும் இடப்படுதல் வேண்டும். அத்துடன் அவற்றை நீக்கம் செய்யப்படும்வரை அதற்கென ஒதுக்கப்பட்டுள்ளவொரு இடத்தில் வைக்கப்படுதலும் வேண்டும். உணவுக்கழிவுப் பொருட்கள் மற்றும் நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் என்பன ஈரலிப்பு ஒழுகாத மூலப்பொருட்களைக்கொண்டு தயாரிக்கப்பட்ட அத்துடன் எலிகள், கிருமிகள் மற்றும் ஏனைய பிராணிகள் உட்செல்லாதவாறு முறைப்படி மூடக்கூடிய கொளல்கலன்களில் வைக்கப்படுதல் வேண்டும். விலங்குகளின் அழுகிய சடலப்பகுதிகள் அல்லது மலம் போன்ற கழிவுப்பொருட்கள் நீக்கப்படவேண்டிய கழிவுப் பொருட்கள் என்பனவற்றின் தன்மையைக் கவனத்திற்கொண்டு மாநகர சபையின் அதிகாரப்பிரதேசத்திற்காக காலத்துக்குக் காலம் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய கட்டணமொன்று ஆணையாளரிடம் செலுத்தப்படுவதன்மூலம் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிப்பவரொருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது வசிப்பாளராலும் (1) ஆம் பந்தியின் அ மற்றும் ஆ ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் உத்தரவுபெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரொருவரிடம் கையளிக்கப்படலாம். உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அவ்வாறு செய்யத் தவறும் சந்தர்ப்பத்தில் அவர் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்து ஏற்புடைய கழிவுப்பொருட்கள் மாநகர சபையின் அதிகாரப் பிரசேதத்தில் கழிவுப்பொருள் சேகரிக்கும் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். இல்லாவிட்டால் ஒவ்வொரு வகையிலான கழிவுப்பொருட்களுக்காகவும் மாநகர சபையினால் அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் அல்லது அத்தகைய கழிவுப்பொருட்களுக்காக சபையினால் வழங்கப்பட்டுள்ள தொட்டிகளில் அல்லது கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும்.

9. (i) வாடகை செலுத்திப் பல எண்ணிக்கையானோர்கள் வசிக்கும் பல்மாடிக் கட்டிடமொன்றின் ஒவ்வொரு உரிமையாளராலும் வசிப்பாளராலும் அவர்களது கழிவுப்பொருட்கள் பின்வருமாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) விலங்குகளின் சடலங்கள், சடலங்களின் பகுதிகள் மற்றும் மலம் ;
(உ) மனையிடத்தைக் கூட்டித்துடைக்கும்போது சேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்

(ii) (i) ஆம் பந்தியில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடமொன்றின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கும் அமைப்புக்களுக்கும் இணங்கும் வகையில் மூன்று வகைகளிலான பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன் அவை சுத்தமாகவும் சுகாதாரப் பாதுகாப்பான நிலையிலும் பேணப்படுதல் வேண்டும்.

(iii) (i) ஆம் உட்பிரிவில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடமொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் (ii) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தவறும் சந்தர்ப்பமொன்றில் செயலாளரால் அறிவிக்கப்படும் தினமொன்றில் அல்லது அதற்கு முன் ஏற்புடைய பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் வழங்குமாறு உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு பணிப்பிடுவதற்கான அதிகாரம் செயலாளருக்கு இருக்கும். செயலாளரின் பணிப்புகளின்படி செயல்புரிவது உரிமையாளரின் அல்லது வசிப்பாளரின் கடமையாகும்.

(iv) கட்டிடத் தரையொன்றின் அல்லது மாடியொன்றின் உரிமையாளரால் வசிப்பாளரால் தேர்ந்தெடுத்துப் பிரிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் அவற்றிற்காக வைக்கப்பட்டுள்ள பாத்திரமொன்றுக்கு அல்லது கொள்கலனொன்றுக்கு இடப்படுதல் வேண்டும்.

(v) இத்துணை விதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் நீக்கம் செய்யப்படுவது அதிகாரம்பெற்ற சேகரிப்பாளரொருவரின் பணியாகும். அவ்வாறு நீக்கம் செய்யப்படாத ஏதாவதொரு கழிவுப்பொருள் (இ) மற்றும் (ஈ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளும் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிக்கும் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும்.

10. (i) மாநகர சபையின் முன் அனுமதியைப் பெற்றுக்கொண்டு சேரிவாசிகளின் உபயோகத்திற்காக ஆணையாளரால் கழிவுப்பொருட் பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் இலவசமாக வழங்கப்படுவது சட்டரீதியானதாகும்.

(ii) ஒவ்வொரு சேரிவீட்டினதும் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் அவரது வசிப்பிடத்தில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வகையில் வெவ்வேறாகத் தேர்ந்தெடுத்து அவரது வசிப்பிடத்துக்குச் சமீபமாக வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்.

(iii) இத்துணைவிதியின் (ii) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை நீக்கம் செய்வதற்காக கழிவுப்பொருள் சேகரிக்கும் ஒருவருக்கு அனுமதியளிக்கும் அதிகாரம் ஆணையாளருக்கு இருக்கும்.

**சாப்புகள் மற்றும் அலுவலகங்கள்**

11. (i) சாப்பொன்றின் அல்லது அலுவலகமொன்றின் ஒவ்வொரு உரிமையாளராலும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களைப் பின்வருமாறு தேர்ந்து பிரித்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) விலங்குகளின் சடலங்கள், சடலங்களின் பகுதிகள் மற்றும மலம் ;
(உ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) தேர்ந்தெடுத்து வேறாக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் நீக்கம் செய்யப்படும்வரை வெவ்வேறாகப் பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இட்டுத் தகுந்த இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படுதல் வேண்டும்.

(iii) சாப்பொன்றில் அல்லது அலுவலகமொன்றில் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் இத்துணைவிதியின் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம்.

(iv) மாடிகள் சிலவற்றைக் கொண்ட அல்லது மாடித்தரைகள் சிலவற்றைக்கொண்ட சாப்புகளின் அல்லது அலுவலகத் தொகுதியொன்றின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால், ஆணையாளரால் அங்கீகரிக்கப்படும் தரங்களுக்கு ஏற்புடையதாக அந்தச் சாப்பிலிருந்து அல்லது அலுவலகத்திலிருந்து தேர்ந்தெடுத்து வெவ்வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் சேகரிப்பதற்காக அல்லது சேர்த்து வைப்பதற்காக ஒவ்வொரு சாப்புக்காகவும் அல்லது அலுவலகத்துக்காகவும் தேவைக்கேற்ற எண்ணிக்கையான கழிவுப்பொருட் பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

(v) இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள சாப்பொன்றின் அல்லது அலுவலகமொன்றின் உரிமையாளரால் தேர்ந்து வெவ்வேறாகப் பிரிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும். இத்துணைவிதியின் (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிப்பதற்கான உரிமை அனைத்து உரிமையாளர்களுக்கும் வசிப்பாளர்களுக்கும் இருக்கும்.

(vi) அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரால் சேகரிக்கப்படாத, இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளும் (ii) ஆம் உட்பிரிவில் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகையொன்று, சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடிய வகையில் கட்டணமொன்று ஆணையாளருக்குச் செலுத்துவதன் மூலம் ஏற்புடையவாறு உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் சபையின் அதிகாரப்பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம்.

(vii) அயலவர்களுக்கு அல்லது மேற்கூறிய சாப்பில் அல்லது அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் சுகாதாரத்திற்கு அல்லது சுகாதாரப் பாதுகாப்பிற்கு எவ்வித பங்கமும் ஏற்படாதவாறு கழிவுப்பொருள் அகற்றுதலும் இத்துணைவிதியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருட் பாத்திரங்கள் மற்றும் கொள்கலன்களைப் பேணுதலும் குறிப்பிடப்பட்ட சாப்பின் அல்லது அலுவலகத்தின் அனைத்து உரிமையாளர்களினதும் பொறுப்பாகும்.

(viii) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி,

"அலுவலகம்" என்பதற்கு 1954 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க சாப்புக்கள் மற்றும் அலுவலகச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பான சட்டத்தில் (129 ஆம் அத்தியாயம்) கொடுக்கப்பட்டுள்ள பொருளே உள்ளது.

"வசிப்பாளர்" என்னும் சொல் சாப்பொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அல்லது வியாபாரமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் பொறுப்பாளரைப் பொருட்படுத்தும்.

"சாப்பு" என்னும் சொல் தொகையாக அல்லது சில்லறையாக விற்பனை செய்வதற்காக பொருட்களை வைத்துள்ள இடமொன்றைப் பொருட்படுத்துவதுடன் உணவுப் பொருட்களை விற்பனைக்காக வைத்துள்ள இடமொன்றையும் முடிதிருத்துமிடமொன்றை அல்லது உடலழகூட்டும் சலூன் ஒன்றை நடாத்திச்செல்லும் இடமொன்றையும் பொருட்படுத்தும்.

**ஹோட்டல்கள்**

12. எவரேனுமொரு ஹோட்டல்காரரால் அல்லது அவரால் எழுத்துமூலமாக அதிகாரமளிக்கப்பட்ட நபரொருவரால் தமது சுற்றாடலில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுத்து வெவ்வேறாக வைக்கப்படல் வேண்டும். அல்லது அவ்வாறு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;

(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) ஒவ்வொரு ஹோட்டல்காரராலும் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒருவராலும் தேர்ந்து வெவ்வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் நீக்கம் செய்யப்படும்வரை வெவ்வேறாகப் பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இட்டு தகுந்த இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு ஹோட்டல்காரராலும் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரால், ஈக்கள், எலிகள் அல்லது ஏனைய பிராணிகள் உட்செல்லாதவாறு அனைத்து உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் பிளாஸ்டிக் அல்லது உலோகப் பொருட்களால் அமைக்கப்பட்ட அத்துடன் மூடியொன்றினால் பாதுகாப்பாக மூடப்பட்ட பாத்திரமொன்றில் அல்லது ஏனையவொரு கொள்கலனில் வைக்கப்படுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம்.

(v) இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவின்கீழ் கையளிக்கப்படாத எவையேனும் கழிவுப்பொருட்கள் மற்றும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் என்பனவற்றின் தன்மைகளைக் கவனத்திற்கொண்டு மாநகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் கட்டணமொன்று உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் ஆணையாளருக்குச் செலத்தப்படுவதன் மூலம் நகர சபையின் அதிகாரப்பிரதேசத்தில் கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் ஒருவரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

(vi) இத்துணைவிதிகளின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி, ஹோட்டல் என்பது நித்திரைகொள்ளும் வசதிகளுடனான அத்துடன் அத்தகைய வசதிகளின்றி பணம் செலுத்துவதன் மூலம் உபயோகத்திற்காக உணவுப்பொருட்கள் மற்றும் மதுபான வகைகளை வழங்கும் இடமொன்றைப் பொருட்படுத்தும். அதற்கு சிற்றுண்டிச்சாலை, விருந்தினர் விடுதி தங்குமிடம் வாடிவீடு யாத்திகளுக்கான ஓய்வு மண்டபம் சோற்றுக்கடை அல்லது ஹோட்டல் என்பனவற்றுள் ஒன்றுக்குச் சமனான வகையில் வியாபாரமொன்றை நடத்திச் செல்லும் ஏனைய ஏதாவதொரு நிறுவனமொன்றையும் பொருட்படுத்தும்.

**மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகள் விற்பனை நிலையங்கள்**

*13.* (i) மரக்கறி அல்லது பழவகைகளை விற்பனை செய்யும் ஒவ்வொரு விற்பனை நிலையத்தினதும் உரிமையாளரால் அல்லது அந்த விற்பனை நிலையத்தின் பொறுப்பாளரால்தனது மனையிடத்தில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுக்கப்பட்டு வெவ்வேறாக்கப்படுதல் வேண்டும்.

(அ) மனித உபயோகத்திற்கு உகந்த நிலையில் இல்லாத பழங்கள் மற்றும் ஏனைய கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் ஈரலிப்புப் பொசியாமல் இருக்கும் வகையில் பிளாஸ்டிக் அல்லது உலோகத்தினால் அமைக்கப்பட்ட வேறானவொரு கொள்கலனில் வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது ஏனைய பிராணிகள் அந்த கொள்கலனிற்குள் உட்செல்லாதவாறு அடைத்துப் பாதுகாப்பாக வைக்கப்படுதல் வேண்டும். ஏனைய கழிவுப்பொருட்கள் ஏதாவதொரு தகுந்த பாத்திரமொன்றில் அல்லது கொள்கலனொன்றில் இடப்படுதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வைககள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படல் வேண்டும். அவ்வாறு கையளிக்கப்படாத எவையேனும் கழிவுப்பொருள் இருப்பின் இத்துணைவிதியின். (i) ஆம் உட்பிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் சேர்த்து மாநகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் கட்டணமொன்றை ஆணையாளருக்குச் செலுத்தி மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி மரக்கறி மற்றும் பழவகை விற்பனை நிலையம் என்பது மரக்கறி வகைகள் மற்றும் பழ வகைகளை களஞ்சியப்படுத்தியுள்ள அல்லது விற்பனைக்காக வைத்துள்ள இடமொன்றைப் பொருட்படுத்தும்.

**இறைச்சி, மீன், கோழியிறைச்சி அல்லது முட்டை வியாபாரக் குடில்கள்**

*14.* (i) இப்பணிக்காக ஆணையாளரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கசாப்புக் கடைகள் சட்டத்தின்கீழ் அனுமதியளிக்கப்பட்டுள்ள விலங்குகள், பறவைகள் தவிர்ந்த ஏனையவொரு விலங்கையோ அல்லது பறவையையோ கொல்லப்படாதிருத்தல் வேண்டும்.

(ii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திலும் கொலைசெய்யப்படக்கூடிய விலங்கின் அல்லது பறவையின் வர்க்கம், கொலைக்களம் அமைக்கப்படவேண்டிய முறை, சுத்தப்படுத்துவதற்கான அத்துடன் மனித உபயோகத்திற்கு எடுக்கப்படாத இரத்தம் குடல் நடுமடிப்புகள் மற்றும் ஏனைய பகுதிகளை நீக்கம் செய்வதற்கான ஏற்புடைய நிபந்தனைகளும் மாநகர சபையினால் தகுந்ததெனக் கருதப்படும் ஏனைய நிபந்தனைகளும் விசேடமாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்காக மாநகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் கட்டணமொன்று ஆணையாளரால் அறவிடப்படுவதுடன் அக்கட்டணத்தை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் சந்தர்ப்பத்திலேயே செலுத்தல் வேண்டும்.

(iv) இறைச்சி கோழியிறைச்சி மீன் முட்டை என்பன விற்பனை செய்வதற்காகவுள்ள குடிலொன்றின் உரிமையாளர் அல்லது அவ்வியாபாரத்தை நடத்திச் செல்பவர்கள் அவர்களது கழிவுப்பொருட்களை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுத்து வெவ்வேறாக்குதல் வேண்டும்.

(அ) மனித உபயோகத்திற்கு உகந்த நிலையில் இல்லாத விலங்கு சடலங்கள் சடலப் பகுதிகள் அல்லது முட்டைகள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(v) வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது ஏனைய கொள்கலன்களில் வைக்கப்படுதல் வேண்டும். இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவின் (அ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்கள் ஈரலிப்பு கசியாதிருக்கும்படி கொள்கலனொன்றினுள் வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அக்கொள்கலனை ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது ஏனைய பிராணிகள் உட்செல்லாதவாறு நன்றாக மூடி பாதுகாப்பாக வைத்தல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவின்கீழ் (அ), (ஆ) மற்றும் (இ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம். அவ்வாறு கையளிக்கப்படாத ஏதாவதொரு கழிவுப்பொருள் வகையொன்று இருப்பின் இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்து மாநகர சபையினால் காலத்துக்காலம் தீர்மானிக்கப்படக்கூடிய கட்டணமொன்று செலுத்துவதன் மூலம் துர்நாற்றம் பரவுவதற்குமுன் மாமாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

(vii) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி இறைச்சி, மீன், கோழியிறைச்சி, முட்டை என்பனவற்றை விற்பனை செய்யும் வியாபாரக் குடில் என்பது இப்பொருட்களை விற்பனை செய்வதற்காக களஞ்சியப்படுத்தியுள்ள அல்லது விற்பனை செய்வதற்காக வைத்துள்ள அல்லது திறந்து வைத்துள்ள இடமொன்றைப் பொருட்படுத்தும்.

**நடை பாதை வியாபாரம்**

*15.* (i) கழிவுப்பொருட்கள் ஒன்றுசேரும் வியாபாரமொன்றை நடத்திச் செல்லும் வியாபாரியொருவர், ஆணையாளரால் அங்கீகரிக்கப்படும் தரங்களுக்கு ஏற்புடையதாக கழிவுப்பொருட்களை வைப்பதற்காக பாத்திரமொன்றை அல்லது கொள்கலனொன்றை வைத்திருத்தல் வேண்டும். அத்தகைய எந்தவொரு வகையிலான கழிவுப்பொருளும் நடைப்பாதையில் அல்லது பெருந்தெருவில் அல்லது பொது இடமொன்றில் போடப்படாதிருத்தல் வேண்டும் :-

(ii) நடைப்பாதை வியாபாரியொருவரால், வாகனங்கள் மற்றும் பாதசாரிகளின் போக்குவரத்துக்குத் தடைகள் ஏற்படும் வகையில் பாத்திரமொன்று அல்லது கொள்கலனொன்று வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(iii) நடைப்பாதை வியாபாரிகள் ஒவ்வொருவராலும் அவர்களது வியாபாரத்தின் காரணமாக ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) உணவுக்கழிவுப்பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப் பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோகிக்கத்தக்க மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்.

(iv) வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும். இத்துணைவிதியின் (ii) ஆம் உட்பிரிவின் (அ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கிருமிகள், எலிகள் அல்லது ஏனைய பிராணிகள் உண்ணக்கூடிய கழிவுப்பொருட்கள் பாதுகாப்பான கொள்கலனொன்றினுள் வைக்கப்படுதல் வேண்டும். மேலதிகக் கழிவுப்பொருட்களைப் போடுவதற்குத் தேவையாகும் சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் அவற்றை மூடி வைத்தல் வேண்டும்.

(v) நடைப்பாதை வியாபாரிகள் ஒவ்வொருவராலும் இத்துணைவிதியின் (iii) ஆம் உட்பிரிவின்கீழ் (அ), (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் அல்லது இத்துணைவிதியின் (iii) ஆம் உட்பிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் சேர்த்து நகர கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் தினந்தோறும் கையளிக்கப்படுதல் வேண்டும். வியாபாரம் நடத்தப்படாத சந்தர்ப்பங்களில் கழிவுப்பொருட் பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் நடைப்பாதையொன்றின் ஓரத்தில் அல்லது வீதியோரத்தில் வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(vi) ஒவ்வொரு நடைப்பாதை வியாபாரியும் கழிவுப்பொருட் பாத்திரங்களை அல்லது கழிவுப்பொருள் கொள்கலன்களை மாநகர கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிப்பதற்குமுன் மாநகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(vii) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி "நடைப்பாதை வியாபாரி" என்னும் சொற்கள் நடைப்பாதையில் அல்லது வீதியோரத்தில் பொருட்களை விற்பனை செய்கின்ற அல்லது சேவைகளை வழங்குகின்ற ஒருவரைப் பொருட்படுத்தும்.

**தொழிற்சாலைகள்**

16. ஒவ்வொரு தொழிற்சாலையினதும் உரிமையாளராலும் அல்லது உற்பத்தியாளராலும் தொழிற்சாலையின் சூழலில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களைச் சேகரித்து கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின்கீழ் (அ), (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம். அவ்வாறு கையளிக்கப்படாத எவையேனும் கழிவுப்பொருள் இருப்பின் அவற்றை மாநகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடிய கட்டணமொன்று ஆணையாளருக்குச் செலுத்தப்படுவதன் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iii) 1980 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின்கீழ் அவ்வியாபாரத்திற்காக வழங்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாப் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்களை நீக்குதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி "தொழிற்சாலை" என்பதற்கு 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளே ஏற்புடையதாக இருக்கும்.

**தோண்டுதல், அமைத்தல் மற்றும் உடைத்தல் என்பன**

17. (i) ஏதாவதொரு வீதியை, பாதையை அல்லது பொது இடத்தைத் தோண்டும்போது உருவாக்கும் கழிவுப்பொருட்களைத் தகுந்தவாறு அச்சுற்றாடலிலிருந்து நீக்கும்வரை அச்சுற்றாடலுக்குள் அல்லது ஆணையாளரால் அங்கீகரிக்கப்படும் இடமொன்றில் களஞ்சியப்படுத்தல் வேண்டும்.

(ii) இந்த துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்படுகின்ற கழிவுப்பொருட்கள் மாநகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற வகையில் கட்டணமொன்றை ஆணையாளருக்குச் செலுத்துவதன் மூலம் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iii) சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி ;

"இத்துணைவிதியின் பணிகளுக்காக தோண்டுதல், அமைத்தல் மற்றும் உடைத்தல் ஆகிய செயல்களில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களும்" என்பதற்கு தொழில் வழங்குபவரால் அந்தச் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள நபர்கள் எனப் பொருள்படும்.

"கழிவுப்பொருட்கள்" என்பது கட்டிடங்களை அமைக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கான மூலப்பொருட்களை உபயோகிக்கும்போது உண்டாகும் மண் சேறு தூசு மற்றும் கட்டிடமொன்றை உடைத்துவிடும்போது உண்டாகும் கழிவுப்பொருட்கள் என்பனவற்றையும் பொருட்படுத்தும்.

18. (i) வாயு, மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி வசதிகள் அல்லது ஏனைய பொதுவசதிகளை வழங்குவதற்காக ஏதாவதொரு வீதியை பாதையை அல்லது பொது இடமொன்றைத் தோண்டும்போது அப்பணியுடன் தொடர்புடைய எந்தவொரு நபரும் அப்பணிக்காக முன் அனுமதியை ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ii) மேலே (i) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதியளிப்பதற்குமுன் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக விண்ணப்பதாரியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் உத்தேச பணிமுடிவடைந்த பின்பு பாதையில் அல்லது பொது இடமென்றில் தற்காலிகமாக வைப்பதற்கு

நேரிடப்படக்கூடிய கழிவுப்பொருட்கள் அத்துடன் விண்ணப்பதாரி அக்கழிவுப் பொருட்களை அகற்றுவதைத் தாமதம் செய்தால் அவற்றை அகற்றுவதற்காகத் தேவைப்படும் செலவினங்கள் என்பன தொடர்பில் ஆணையாளர் கவனத்திற் கொள்ளல் வேண்டும். அனுமதியளிப்பதற்கு முன் விண்ணப்பதாரி மதிப்பீட்டுச் செலவினங்களுக்குச் சமனான பணத்தொகையை வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும்.

(iii) எவரேனுமொருவர் கழிவுப்பொருட்கள் முழு அளவையையும் அல்லது அதன் ஒருபகுதியை அகற்றுவதற்குத் தவறினால் அல்லது நீக்கம் செய்தலைத் தாமதப்படுத்தினால் செயலாளரால் தீர்மானிக்கப்படும் வகையில் மேற்கூறிய கழிவுப்பொருட்கள் நீக்கம் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் அப்பணிக்காக ஏற்படும் செலவினத்தை (ii) ஆம் உட்பிரிவின்கீழ் வைப்புச் செய்யப்படும் பணத்திற்குப் பிரதியீடு செய்தல் வேண்டும்.

**வைத்தியசாலைகள்**

19. (i) வைத்தியசாலையொன்றின் உரிமையாளரால் சுற்றாடலில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இவ்வுட்பிரிவின் (இ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வர்க்கங்கள் தவிர்ந்த ஏனைய கழிவுப்பொருட்கள்;
(ஈ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள் ;
(உ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆம் உட்பிரிவின்கீழ் (அ) மற்றும் (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை வெவ்வேறான கொள்கலன்களில் இட்டு அவற்றை நீக்கம் செய்யும்வரை தகுந்த இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். (i) ஆம் உட்பிரிவின்கீழ் (இ) மற்றும் (ஈ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளுக்காக விசேடமாக அமைக்கப்பட்டுள்ள பாத்திரமொன்றில் அல்லது கொள்கலனொன்றில் அக்கழிவுப்பொருட்கள் இடப்படுதல் வேண்டும். அத்துடன் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஓர் இடத்தில் வைக்கப்படுதலும் வேண்டும். 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் இந்த வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் அத்தகைய கழிவுப்பொருட்களை நீக்கம்செய்தல் வேண்டும்.

(iii) (i) ஆம் உட்பிரிவில் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம் பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் அல்லது மாநகர சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணமொன்று செலுத்தப்படுவதன் மூலம் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிக்கும் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியில் சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி ;

"வைத்தியசாலை" என்பது ஏதாவதொரு நோயினால் அல்லது பலவீனம் காரணமாக பீடிக்கப்பட்ட நபர்கள் அல்லத விலங்குகள் பொறுப்பேற்கப்பட்டு அந்நபர்களை அல்லது விலங்குகளை பேணிப்பராமரித்து சிகிச்சைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக உபயோகிக்கும் அல்லது உபயோகிப்பதற்கு எதிர்பார்க்கும் ஏதாவதொரு மனையிடத்தை (எவ்வகையில் விபரிக்கப்பட்டபோதிலும்) பொருட்படுத்துவதுடன் கவனிப்பு இல்லம், சிகிச்சை நிலையம் மகப்பேற்று இல்லம் மற்றும் விலங்கு வைத்தியசாலை/விலங்கு சிகிச்சை நிலையம் என்பனவற்றையும் பொருட்படுத்தும்.

"இடையூறு விளைவிக்கக்கூடிய பாதுகாப்புக் கழிவுப்பொருட்கள்" சிகிச்சை நிலையக் கழிவுப்பொருட்கள், உடல் உறுப்புப் பகுதிகள் தொப்புல்கொடிகள் பரவக்கூடிய மற்றும் மிகவும் பரவக்கூடிய கழிவுப்பொருட்கள் மற்றும் கூர்மையான முட்கள் என்பனவற்றைப் பொருட்படுத்தும்.

**ஏனைய மனையிடங்கள்**

20. (i) இல. 8 தொடக்கம் 19 வரையிலான துணைவிதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்படாத வியாபாரமொன்றை நடத்திச் செல்லுமொருவர் அல்லது பொதுமக்களின் ஒத்துழைப்புடன் பொது சமூக கலாசார அல்லது கல்விச் செயற்பாடொன்றை ஒழுங்கு செய்யும் அத்துடன் செயற்படுத்தும் எவரேனுமொரு நபர் அச்செயற்பாடு காரணமாக அல்லது அத்தகைய நிறுவனமொன்றை நடத்திச் செல்வதன் காரணமாக உண்டாகும் கழிவுப்பொருட்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுத்து வெவ்வேறாக வைக்கப்படுதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆம் உட்பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு செயற்பாட்டை ஒழுங்கு செய்யும் ஒருவர் அச்செயற்பாடு காரணமாக ஒன்றுசேரும் கழிவுப்பொட்களைச் சேகரிப்பதற்கு விசேடமாக வேலைத்திட்டமொன்றை மேற்கொள்வதற்காக அது தொடர்பில் நேரங்காலத்தோடு மாமாநகர சபைக்கு அறிவித்தல் வேண்டும் ;

(iii) தேர்ந்தெடுத்து வெவ்வேறாக வைக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் நீக்கம் செய்யப்படும்வரை வெவ்வேறாகக் கொள்கலன்களில் இட்டு தகுந்த இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும் ;

(iv) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் அல்லது (i) ஆம் உட்பிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் சேர்த்து மாநகர சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படுகின்ற வகையில் கட்டணமொன்று செலுத்துவதன் மூலம் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும்.

**வீதிகள் மற்றும் பொது இடங்கள்**

21. (i) ஆணையாளரால் நகர முதல்வருடன் கலந்தாலோசிக்கப்பட்டு சபையின் அனுமதிக்கு இணங்கும் வகையில் பின்வரும் பணிகளைச் செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நிருவகிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(அ) மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள் பாதைகள், பொது வடிகால்கள் நீர்ப்பாதைகள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பனவற்றைச் சுத்தமாகவும் சுகாதாரத்திற்கு பங்கமேற்படாதவாறும் நடத்திச்செல்லல்.

(ஆ) வீதிகள் மற்றும் பாதைகளின் இருபக்கங்களிலும் பொது இடங்களிலும் போதியளவு எண்ணிக்கையான தொட்டிகளை வழங்கி பொருத்துதல் மற்றும் பேணுதல்.

(இ) விழாக்கள் மற்றும் விசேட நிகழ்வுகள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அல்லது சபையினால் தீர்மானிக்கப்படும் நிகழ்வுச் சந்தர்ப்பங்களில் சபையினால் தீர்மானிக்கப்படும்போது அல்லது மேற்கூறிய விழாக்கள் அல்லது விசேட நிகழ்வுகள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அமைப்பாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க பொது இடங்களில் பாவனைக்காக நடமாடும் கழிவுப்பொருட் தொட்டிகளை வழங்குதல் வேண்டும்.

(ஈ) வதிவிடப் பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ள பொதுக் கழிவுப்பொருட் தொட்டிகள் அல்லது கொள்கலன்கள் சுகாதாரத்திற்குப் பங்கமேற்படாத வகையில் பேணுதல் மற்றும் அவற்றின் அருகில் வசிப்பவர்களுக்கு அத்தொட்டிகள் காரணமாக இடையூறு ஏற்படுவதற்குமுன் அந்தத் தொட்டிகளிலும் கொள்கலன்களிலும் உள்ள கழிவுப்பொருட்களை நீக்கம் செய்தல் வேண்டும்.

(உ) முன்கூறிய பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில் கிடைக்கப்பெறும் ஏதாவதொரு முறைப்பாட்டை எவ்வித தாமதமுமின்றி விசாரணை செய்து ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(ii) சபையினால் விசேடமாக கழிவுப்பொருட்களுக்காக வழங்கப்படும் ஏதாவதொரு தொட்டியில் ஈரலிப்பான, வியாபார, நிறுவன, தொழில்நுட்ப மற்றும் ஏனைய கழிவுப்பொருட்கள் எந்தவொருவராலும் இடப்படாதிருத்தல் வேண்டும்.

**மாநகர சபையின் கடமைகள்**

22. (i) ஆணையாளரால் நகர முதல்வருடன் கலந்தாலோசிக்கப்பட்டு சபையின் அனுமதிக்கிணங்க பின்வரும் பணிகளைத் திட்டமிடல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிருவகித்தல் என்பன செய்யப்படலாம்.

(அ) கழிவுப்பொருட்களை மீள உபயோகிப்பதற்கும் மீள்சுழற்சி செய்வதற்கும் பொதுமக்களை ஊக்குவித்தல்.

(ஆ) கழிவுப்பொருட்களை வெவ்வேறாகத் தேர்ந்தெடுத்தல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், விடுவித்தல் மற்றும் நீக்கம் செய்தல் என்பன தொடர்பில் அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் அல்லது தொடர்பு ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்தல்.

(இ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் சிறு தொழில் முயற்சியாளர்களுக்கும் வசதிகளை வழங்குதல்.

(ஈ) கழிவுப்பொருட்களைக் குறைக்கும், மீள, உபயோகிக்கும் அத்துடன் மீள்சுழற்சி செய்யும் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களுக்கு ஊக்கமளித்தல்.

(உ) கழிவுப்பொருட்களை நீக்கம் செய்யும் முறைகள் தொடர்பில் வித்தியாசமான படிவங்களை ஒழுங்கு செய்தல்.

(ஊ) மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அந்தந்தப் பிரதேசங்களில் சேரும் அந்தந்த வகையிலான கழிவுப்பொருட்களுக்காக சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் நாட்கள், நேரங்கள், முறைகள் மற்றும் கட்டணங்கள் எனபனவற்றைக் குறிப்பிட்டு கழிவுப்பொருள் சேகரிப்புப் பணித்திட்டக் குறிப்பொன்றை ஒழுங்கு செய்து அதில் அரசாங்க விடுமுறை நாட்களில் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கான நிபந்தனைகளையும் அதில் குறிப்பிடுதல் வேண்டும்.

(எ) அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் வேறாகக் கையளிக்கப்படாத எவையேனும் ஒதுக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் இருப்பின் அவற்றை பணித்திட்டக் குறிப்பிற்கிணங்க குறிப்பிட்ட நேரத்தில் சேகரித்தல்.

(ஏ) அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கப்படாத அபாயகரமான கழிவுப்பொருட்களும் ஏனைய ஏதாவதொரு கழிவுப்பொருளும் இருப்பின் அவற்றை சுகாதாரப் பாதுகாப்பு முறைகளுக்கிணங்கும் வகையில் எடுத்துச் செல்லல்.

(ஐ) அபாயகரமான கழிவுப்பொருட்கள் அல்லது ஆணையாளரால் தீர்மானிக்கப்படும் ஏனைய எவையேனும் கழிவுப்பொருட்கள் தவிர்ந்த வீதிகளைக் கூட்டித்துடைப்பதன் மூலமும் வடிகால்கள் மற்றும் பொது இடங்களைச் சுத்தம் செய்வதன் மூலமும் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களும் பொதுத் தொட்டிகளில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் மற்றும் சபையின் தொழிலாளர்களால் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களும் அதிகாரம் பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளித்தல்.

(ஒ) உணவு மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள், மீள்உபயோகிக்கத்தக்க கழிவுப்பொருட்கள் என்பவற்றைச் செயல்முறையில் இயன்றளவு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒழுங்கு செய்வதற்கும் செப்பமிடுவதற்கும் வேலைத்திட்டமொன்று உட்பட சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிப்பாளர்களால் சேகரிக்கப்படுகின்ற அத்துடன் வெவ்வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அந்த நடவடிக்கைகளிலிருந்து நிராகரிக்கப்படுகின்ற அத்துடன் அக்கழிவுப்பொருள் வகைகளின் ஏனைய மீதிக் கழிவுப்பொருட்கள் என்பன ஆணையாளரால் அங்கீகரிக்கப்படும் வகையில் நீக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

(ஓ) மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் கலந்துரையாடி ஆணையாளரால் அங்கீகரிக்கப்படும் வகையில் அபாயகரமான அணைத்துக் கழிவுப்பொருட்களையும் நீக்கம் செய்தல்.

(ஔ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரமொன்றை அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ளல் மற்றும் அந்த அனுமதிப்பத்திரத்தில் அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் கழிவுப்பொருட்களை எரித்தல் அல்லது சுகாதாரப் பாதுகாப்பான நில நிரப்பிடமொன்றை நடத்திச்செல்லல்.

(க) கழிவுப்பொருட்களை கூட்டித்துடைத்தல், சேகரித்தல், தேர்ந்தெடுத்து வகைப்படுத்தல், எடுத்துச்செல்லல், மாற்றுதல் மற்றும் நீக்கம் செய்தல் ஆகிய பணிகளில் ஈடுபடும் ஒவ்வொரு ஊழியருக்கும் தகுந்த உடைகள், கைப்பாதுகாப்பு உறைகள், வாயுறை மற்றும் பாதணிகள் என்பனவற்றை வழங்குதல்.

(ங) வீடொன்றை அல்லது ஏனைய மனையிடமொன்றை நிர்மாணிப்பதற்காக அல்லது சீர்த்திருத்துவதற்காக சபையிடம் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்துள்ள சந்தர்ப்பமொன்றில் அந்த நிர்மாணிப்பு அல்லது சீர்திருத்தம் காரணமாக உண்டாகும் திண்மக் கழிவுப்பொருட்களை நீக்கம் செய்யும் முறையையும், குறிப்பிட்ட வேலையைத் தொடங்கும் கட்டத்திலும் அவ்வேலையைச் செய்கையிலும் அவ்வேலை முடிவடையும் போதும் அத்துடன் துண்டுக் கற்களை களஞ்சியப்படுத்துகின்ற, ஒழுங்கு செய்கின்ற மற்றும் நீக்கம் செய்கின்ற முறைகள் தொடர்பில் சோதனை செய்தல் மற்றும் அங்கீகரித்தல்.

(ச) சபையின் மனையிடத்திற்காக உள்ளக கழிவுப்பொருள் முகாமைத் திட்டமொன்றை அமைத்தல்.

(ஞ) 2000 ஆம் ஆண்டின் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான தேசிய உபாயமுறை மற்றும் ஏற்புடைய சட்டத்திற்கிணங்க விபரமாக ஆகக்குறைந்தது ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டும் அடங்குகின்ற அத்துடன் இறுதியாக நீக்கம் செய்தல் தொடர்பில் எதிர்காலத்தில் 03 ஆண்டுகள் அடங்கும் வகையில் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத் திட்டமொன்றை ஒழுங்கு செய்தல் மற்றும் செயற்படுத்தல், அத்திட்டம் செயற்படும் கால எல்லைக்கிணங்க நிரந்தர அடிப்படையில் சபையினால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படும்.

(ட) (அ) தொடக்கம் (ஞ) வரை காட்டப்பட்டுள்ள பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் பாதிப்பொன்று தொடர்பில் ஏதாவதொரு முறைப்பாடு கிடைப்பின் அதை மூன்று நாட்களுக்குள்ளும் அந்த முறைப்பாடு ஏனையவொரு காரணம் தொடர்பிலாயின் பதினான்கு நாட்களுக்குள்ளும் விசாரணை செய்தல் மற்றும் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**அனுமதிப்பத்திரங்கள்**

23. (i) கழிவுப்பொருட்களை மீள உபயோகிக்கின்ற அத்துடன் மீள்சுழற்சி செய்கின்ற எவரேனுமொரு நபர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்வாராயின் அவருக்கு சபையினால் அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்படும்.

(அ) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகளின் பிரகாரம் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அல்லது ஏனைய உள்ளூராட்சி நிறுவனப் பிரதேசமொன்றில் வியாபாரமொன்றை நடத்திச் செல்லல்.

(ஆ) 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி வழங்கப்படும் சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று வைத்திருத்தல்.

(இ) சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களுக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கு ஏற்ற வகையில் அமைக்கப்படும் கழிவுப்பொருள் சேகரிப்பு நிலையங்களை வழங்குதல்.

(ஈ) சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் ஆணையாளரால் அங்கீகரிக்கப்படும் வகையிலும் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் சுகாதாரத்திற்குப் பங்கமேற்படாதவாறும் ஏற்றிச் செல்வதற்கான வாகனங்களை வழங்குதல்.

(உ) தொடர்புடைய மாநகர சபையின் எல்லைக்குள் நடத்திச் செல்லப்படும் சந்தர்ப்பமொன்றில் சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடிய வகையில் மேற்கூறிய கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கான கட்டணமொன்றை ஆணையாளருக்குச் செலுத்துவதன்

மூலம் கழிவுப்பொருட்களை ஒழுங்குபடுத்தும்போது அல்லது செப்பனிடும்போது எஞ்சுகின்ற அல்லது நிராகரிக்கப்படுகின்ற அல்லது துணை உற்பத்திகளாக உருவாக்கப்படும் கழிவுப்பொருட்கள் சபையினால் அங்கீகரிக்கப்படும் வகையில் சபையிடம் பொறுப்பளிப்பதற்கு இணக்கம் தெரிவித்தல்.

(ii) சபையினால் அனுமதிப் பத்திரமொன்று வழங்குதலை நிராகரிக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் அல்லது மறுக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் விண்ணப்பதாரியினால் அதற்கான காரணங்கள் கேட்கப்பட்டால், அவ்வாறு நிராகரிக்கப்படுவதற்கான அல்லது மறுக்கப்படுவதற்கான காரணங்களை அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பம் கிடைத்து 30 நாட்களுக்குள் எழுத்துமூலமாக விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

(iii) அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் கால எல்லைக்குள் சேகரிப்பதற்கு அனுமதியளிக்கப்படும் கழிவுப்பொருள் வகை அல்லது வகைகள் சேகரிப்பதற்கு அனுமதியளிக்கப்படும் பிரதேசங்களும் ஏனைய தகுந்த நிபந்தனைகளும் ஆணையாளரால் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்படி செயல்புரியாத சந்தர்ப்பமொன்றில் இத்துணைவிதியின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுதல் வேண்டும்.

(v) (iv) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிப்பத்திரமொன்று இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பமொன்றில் எந்தவொரு நபரினாலும் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படுதலோ அல்லது பெற்றுக்கொள்ளப்படுதலோ கூடாது. அத்தகைய சந்தர்ப்பமொன்றில் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதை பொதுமக்களுக்கு அறிந்து கொள்வதற்காக செயலாளரால் தொடர்பு ஊடகங்கள் மூலம் போதியளவு விளம்பரம் செய்யப்படல் வேண்டும்.

**கழிவுப்பொருள் நீக்கம் செய்யப்படும் பிரதேசங்கள்**

24. சபையினால் கழிவுப்பொருட்களை நீக்கம் செய்யும் பணிக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அனுமதி பெறாத நபர்கள் செல்லாமலும் அங்கு அலைந்து திரியாமலும் இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பிரதேசத்தில் ஏதாவதொரு பொருளை அல்லது நீக்கம் செய்யும் எதனையும் வைத்தல் குழப்புதல் நீக்கம் செய்தல் என்பன செய்யப்படாதிருத்தல் வேண்டும். விசேடமாக விதிக்கப்படும் நிபந்தனைகளின் கீழ் எந்தவொருவராலும் சபையினால் அனுமதியளிக்கப்பட்டாலன்றி சபையினால் காலத்துக்குக் காலம் தடையென விதிக்கப்படக்கூடிய ஏதாவதொரு கழிவுப்பொருள் வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

25. அங்கீகரிக்கப்படும் எவையேனும் நிபந்தனைகளுக்கிணங்க ஆணையாளரினதும் மத்திய சுற்றாடல் அதிகாரச் சபையினதும் எழுத்துமூலமான முன் அனுமதி பெற்றிருந்தால் மாத்திரமேயன்றி எந்தவொருவரும் மாநகர சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள ஏதாவதொரு காணியை அல்லது வசதியை, அதற்கு வெளியிடமொன்றில் உருவாகும் கழிவுப்பொருட்களை வைத்திருப்பதற்காக வழங்குதலோ அல்லது உபயோகித்தலோ கூடாது.

**ஏனைய**

26. (i) ஆணையாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவருக்கு நியாயமான அனைத்து நேரங்களிலும் ஏதாவதொரு மனையிடத்திற்கு உட்பிரவேசிப்பதற்கும் அதன் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அத்துணைவிதியின் ஏற்பாடுகளின்படி செயல்புரிகின்றாரா என்பதைப் பரிசோதிப்பதற்கு அதிகாரமிருக்கும்.

(ii) அந்த மனையிடத்தின் உரிமையாளரால், பொறுப்பாளரால், முகாமையாளரால் அல்லது அதில் வசிப்பவர்களால் அல்லது அதில் சேவையாற்றுகின்ற ஒருவரால் ஆணையாளரிடம் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடம் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் கீழ் ஆணையாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு தமது அதிகாரங்களை பிரயோகிக்கும்போது எந்தவொருவராலும் தடைகள் ஏற்படுத்தப்படாதிருத்தல் வேண்டும்.

27. சபையினால் காலத்துக்குக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களின்படி இத்துணைவிதிகளைச் செயற்படுத்தும் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு ஊக்குவிப்புப் படிகள் கொடுக்கப்படலாம்.

28. இத்துணைவிதியின் ஏதாவதொரு ஏற்பாட்டை மீறும் ஒருவர் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாவார்.

**பொருள் கூறல்**

26. இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி ;

"கழிவுப்பொருட்கள் அல்லது திண்மக் கழிவுப்பொருட்கள்" என்பது அவற்றை நீக்கம் செய்த நபருக்கு உபயோக மதிப்பற்ற பொருளொன்றைப் பொருட்படுத்துவதுடன் சருகுகள், குப்பைகள், பாதைகளைச் சுத்தப்படுத்தும்போது ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள், தூசு, மண், சேறு மற்றும் சாம்பல் ஆகியவற்றைப் பொருட்படுத்தும்.

"உணவுக் கழிவுப்பொருட்கள்" என்பது மனித உபயோகத்திற்குத் தகாத இறைச்சி, மீன், கோழியிறைச்சி, முட்டை, மரக்கறி, பழங்கள் மற்றும் ஏனைய உணவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள்" என்பது பொதுமக்களின் சுகாதாரத்திற்கு அல்லது சுற்றாடலுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய, விஷமுள்ள, எரியக்கூடிய, மீள்தாக்கம் ஏற்படுத்தக்கூடிய, நோய்களைப் பரப்பக்கூடிய, கதிர்வீச்சுத் தன்மை கொண்ட கழிவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"சேகரித்தல்" என்பது அதிகாரம் பெற்ற சேகரிப்பாளர் ஒருவரால் அல்லது மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் ஒருவரால் மீள்சுழற்சி செய்யப்படுதல், ஒழுங்கு செய்யப்படுதல், செப்பனிடப்படுதல் அல்லது நீக்கம் செய்யப்படும் வசதிகளுக்காக கொண்டு செல்வதற்கு கழிவுப்பொருட்களைச் சேகரித்தலைப் பொருட்படுத்தும்.

"கொம்போஸ்ட்" என்பது சேதனக் கழிவுப்பொருட்கள் நுண்ணுயிர்களின் சீரணிப்பிற்கு இலக்கான பின்பு கிடைக்கப்பெறும் இறுதி உற்பத்தியைப் பொருட்படுத்தும். அது மண்ணின் தரக்காப்பொன்றாக செயற்படக்கூடிய ஹியுமஸ் வகையொன்றாகும்.

"ஆணையாளர்" என்பது மாநகர சபையின் அதிகாரப் பிரதேசம் தொடர்பிலாகும்போது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் (அத்தியாயம் 252) அந்த மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்காக ஸ்தாபிக்கப்பட்ட மாநகர சபையின் ஆணையாளரைப் பொருட்படுத்துவதுடன் அந்த மாநகர சபையின் செயலாளர் தொடர்பில் பதில் கடமை புரிவதற்காக நியமனம் செய்யப்பட்ட நபரொருவரையும் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் ஆணையாளரின் அதிகாரங்கள், கடமைகள் அல்லது பணிகளைச் செயற்படுத்துவதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட மேற்கூறிய சபையின் எவரேனுமொரு உத்தியோகத்தரைப் பொருட்படுத்துவதுடன் அந்த உத்தியோகத்தருக்கு அந்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அளவுக்கு எனவும் பொருட்படுத்தும்.

"களஞ்சியப்படுத்தல்" ஓர் உரிமையாளரின் அல்லது வசிப்பாளரின் மனையிடத்திற்குள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொதுச்சேகரிப்பு நிலையமொன்றில் கழிவுப்பொருட்களை வைத்தல் சேமித்து வைத்தல் என்பனவற்றைப் பொருட்படுத்தும்.

"கட்டணம்" என்பது சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஏதாவதொரு கட்டணத்தைப் பொருட்படுத்தும்.

"வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்கள்" வீட்டுத் தோட்டமொன்றில் அமைந்துள்ள மரங்கள் செடி கொடிகளிலிருந்து நீங்கும் தாவரப் பகுதிகள் மற்றும் வீட்டுத் தோட்டத்திலிருந்து நீக்கம் செய்யப்படும் கல், மண் என்பனவற்றைப் பொருட்படுத்தும்.

"நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள்" என்பது நுண்ணுயிர்களால் உக்குவிக்கப்படக்கூடிய கழிவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"பொது இடம்" என்பது மைதானம், பொதுக் காணி, வீதியோரப் பாதுகாப்புக் காணி, விளையாட்டு மைதானம், பொதுக் கட்டிடம், மயானம், பஸ்நிலையம், புகையிரத நிலையம், ஆறு, ஓடை, சிறு ஓடை, சிறு குளம், நீர்த்தேக்கம், வாவி, தடாகம், கடலேரி, கிளையாறு, நீர்ப்பாதை, கடல் கடற்கரை அல்லது பொதுமக்களால் பொதுவில் உபயோகிக்கப்படுகின்ற இடமொன்றைப் பொருட்படுத்தும்.

"மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருட்கள்" மேலும் கழிவுப்பொருளாக அறிமுகப்படுத்திக்கொள்ள இயலாதவாறு அதன் உருவத்தை மாற்றியமைத்து புதிய உபயோகப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உபயோகிக்கக்கூடிய கழிவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"மீள் உபயோகிக்கூடிய கழிவுப்பொருட்கள்" என்பது கழுவுதல் மூலம், கிருமியளித்தல் மூலம் அல்லது ஏனையவொரு முறையில் சுத்தப்படுத்தப்பட்ட பின்பு உபயோகிக்கக்கூடிய கழிவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"ஏற்றிச் செல்லல்" என்பது மனித, விலங்கு அல்லது பொறியொன்றின் சக்தியைப் பயன்படுத்தி ஏதாவதொரு கொண்டு செல்லும் முறையை உபயோகித்து கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் இடத்திலிருந்து அவற்றை ஒழுங்கு செய்வதற்காக, செப்பமிடுவதற்காக அல்லது நீக்கம் செய்வதற்காக குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டு செல்வதைப் பொருட்படுத்தும்.

"தொட்டி/பாத்திரங்கள் அல்லது ஏனைய கொள்கலன்கள்" என்பது இத்துணைவிதியில் காட்டப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்கும் வகையில் கழிவுப்பொருட்களை களஞ்சியப்படுத்தல், நீக்கம் செய்தல், சேகரித்தல், ஏற்றிச் செல்லல் ஆகிய பணிகளுக்காக உபயோகிக்கும் ஏதாவதொரு தொட்டியை, பாத்திரத்தை, உறையை, பையொன்றை அல்லது ஏனையவொரு கொள்கலனைப் பொருட்படுத்தும்.

"அதிகாரம்பெற்ற சேகரிப்பாளர்" என்பது கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்காக அல்லது அவற்றைப் பெறுக்கொள்வதற்காக ஆணையாளரிடமிருந்து அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொண்டுள்ள நபரொருவரைப் பொருட்படுத்தும்.

"அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்" இத்துணைவிதியின் கீழான அரச பணிகளை நிறைவேற்றுவதற்காக அல்லது நடத்திச் செல்வதற்காக செயலாளரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கபப்படும் உத்தியோகத்தர் ஒருவரைப் பொருட்படுத்தும்.

"நீக்கம் செய்தல்" என்பது மீள உபயோகிக்கப்படாத, மீள்சுழற்சி செய்யப்படாத, ஒழுங்கு செய்யப்படாத, செப்பமிடப்படாத அனைத்து கழிவுப்பொருட்களும் நிரந்தரமாக வைத்திருப்பதற்குக் கருதப்படும் காணியொன்றின் மேற்பரப்பில் அல்லது உட்பரப்பில் வைத்தலைப் பொருட்படுத்தும்.

"மாற்று இடம்" என்பது சபையினால் இப்பணிக்காக விதித்துரைக்கப்படும் இடமொன்றைப் பொருட்படுத்துவதுடன் அவ்விடத்திலிருந்து மீள்சுழற்சி செய்யப்படுகின்ற ஒழுங்கு செய்யப்படுகிக்னற செப்பமிடப்படுகின்ற அல்லது நீக்கம் செய்யப்படுகின்ற ஏதாவதொரு வசதியைக் கொண்ட இடத்திற்குக் கழிவுப்பொருட்களைக் கொண்டு செல்லும் வினைதிறனை மேம்படுத்தும் பணிக்காக கழிவுப்பொருட்களை மிகச்சிறிய வாகனங்களிலிருந்து மிகப்பெரிய வாகனங்களுக்கு மாற்றம் செய்தலும் அங்கு நடைபெறும்.

"நபர்" என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத கம்பனியொன்றை அல்லது ஆட்கள் சங்கமொன்றை அல்லது ஆட்கள் குழுவொன்றைப் பொருட்படுத்தும்.

"மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர்" என்பது தொட்டிகளிலிருந்தும் கொள்கலன்களிலிருந்தும் கழிவுப்பொருட்களை கூட்டித் துடைத்துவிடுதல், சேகரித்தல், பெற்றுக்கொள்ளல் அல்லது நீக்கம் செய்தல் ஆகிய பணிகளுக்காக சபையினால் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஓர் ஊழியரை அல்லது இப்பணியை நிறைவேற்றுவதற்காகச் சபையுடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள ஒருவரைப் பொருட்படுத்தும்.

"வெவ்வேறாக்குதல்" என்பது இத்துணைவிதியில் பிரயோகித்துள்ள வர்க்கங்களின்படி கழிவுப்பொருட்களை வெவ்வேறாகத் தேர்ந்தெடுத்தலைப் பொருட்படுத்தும்.

"ஒழுங்குபடுத்தல்" என்பது கழிவுப்பொருட்களை பிரயோசனமானவொரு உற்பத்திப் பொருளாக மாற்றும் செயற்பாட்டைப் பொருட்படுத்தும்.

"சபை" என்பது ............................ மாநகர சபையைப் பொருட்படுத்தும்.

"நகர அதிகாரப் பிரதேசம்" என்பது மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) அதிகாரத்தின்கீழ் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசத்தைப் பொருட்படுத்தும்.

"சுகாதாரப் பாதுகாப்பான நில நிரப்பல்" அதனுடன் சார்ந்த சமூக, சுகாதார மற்றும் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைவடையச் செய்வதற்காக இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கு இணங்கும் வகையில் கழிவுப்பொருட்களை இறுதியாக நிலப்பரப்பொன்றிற்கு நீக்கம் செய்தலைப் பொருட்படுத்தும்.

"உரிமையாளர் அல்லது வசிப்பாளர்" என்பது மனையிடத்தின் உரிமையாளர் அல்லது உரிமையாளருக்குப் பதிலாக அட்டோர்னி அதிகாரம் பெற்றவொருவரை அல்லது உரிமையாளரால் தமது தொழிலை அல்லது தொழிற்சாலையை அல்லது தோட்டத்தை முகாமைத்துவம் செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதியொருவரை அல்லது பொறுப்பாளரை அல்லது கூலி அடிப்படையில் பெற்றுக்கொண்ட ஒருவரைப் பொருட்படுத்துவதுடன் ஏனையவொரு நபரின் பணிப்புகளின்கீழ் செயல்புரியும் முகாமையாளர் ஒருவரையும் பொருட்படுத்தும்.

6-772

---

**நகர சபை அதிகாரப் பிரதேசங்களில் திண்மக் கழிவுப் பொருட்களை முகாமை செய்தல் தொடர்பான துணை விதி**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற (அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் என்ற வகையில் என்னால் ஒழுங்குசெய்யப்பட்ட கீழ்காட்டப்பட்டுள்ள வரைவுத் துணை விதிகள் மேற்கூறிய பிரிவின் கீழ் இவ்வாறு பிரகடனம் செய்யப்படுகிறது.

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) 153 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 118 ஆம் பிரிவு மற்றும் 157 ஆம் பிரிவின் 9 ஆம் உட்பிரிவின் (அ), (இ) ஆகிய பந்திகளின் மூலம் திண்மக் கழிவுப்பொருட்களை முகாமை செய்தல் தொடர்பான துணைவிதிகளை விதிப்பதற்கு நகர சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகளை ஏற்றுக்கொள்வதற்காக சப்பிரகமுவ மாகாணத்தின் நகர சபைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

2013.06.06.

**பொது**

1. இத்துணைவிதி திண்மக் கழிவுப்பொருட்களை முகாமை செய்தல் தொடர்பான துணைவிதி என அறிமுகப்படுத்தப்படும்.

2. நகர சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள பிரசித்திபெற்ற இடங்கள், பிரத்தியேக மனையிடங்கள் வீதிகள், பாதைகள், ஆகிய இடங்களில் சேரும் திண்மக் கழிவுப்பொருட்களைப் பிரித்தெடுத்தல், களஞ்சியப்படுத்தல், சேகரித்தல் கொண்டு செல்லல் அத்துடன் அவற்றை மாற்றும் இடங்களைச் செயற்படுத்தல் மற்றும் அவ்விடங்களை நடாத்திச் செல்லல், ஒழுங்கு செய்தல், செப்பமிடுதல் மற்றும் நீக்கம் செய்தல் ஆகிய செயல்கள் தொடர்பிலான ஒழுங்குமுறைகள், மேற்பார்வை சோதனை மற்றும் நிருவாகம் ஆகிய பணிகளுக்காக இத்துணை விதிகள் விதிக்கப்படுகின்றன.

3. நகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள ஏதாவதொரு மனையிடத்தின் ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது அதில் வசிப்பவராலும் தமது சுற்றாடலை குப்பைகூளங்களற்ற சுகாதாரப் பாதுகாப்பான சிறந்த நிலையில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

4. நகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள ஏதாவதொரு மனையிடத்தின் உரிமையாளரால் அல்லது அதில் வசிப்பவரால் தமது மனையிடத்தில் உண்டாகும் கழிவுப் பொருட்களைச் சேகரித்தல், பிரித்தெடுத்தல், களஞ்சியப்படுத்தல் எடுத்துச் செல்லல் மற்றும் நீக்கம் செய்தல் ஆகிய பணிகளைச் செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாவிட்டால் இத்துணைவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்க அப்பணிகளைச் செய்விப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5. (i) மனையிடமொன்றின் ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது வசிப்பாளராலும் அவரது/அவளது மனையிடத்தில் உண்டாகின்ற திண்மக் கழிவுப் பொருட்களை கூட்டித் துடைத்து அல்லது ஏனையவொரு முறையை உபயோகித்து தினந்தோறும் அல்லது அதனிலும் குறைந்த காலஎல்லையொன்றுக்குள் ஒன்றுசேர்க்கப்படல் வேண்டும்.

(ii) ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது வசிப்பாளராலும் மேற்கூறிய உட்பிரிவின்படி ஒன்றுசேர்க்கப்பட்ட கழிவுப்பொருட்கள் இலக்கம் 08 தொடக்கம் 20 வரையுள்ள துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க வெவ்வேறாகப் பிரிக்கப்படல் வேண்டும். இல்லாவிட்டால் அவ்வாறு செய்விப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(iii) உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் கழிவுப் பொருட்கள் களஞ்சியப்படுத்துவதற்காக உபயோகிக்கப்படும் ஏதாவதொரு பை உறை பாத்திரம் அல்லது ஏனையவொரு கொள்கலம் இலக்கம் 08 தொடக்கம் 20 வரையுள்ள ஏற்பாடுகளின்கீழ் ஒன்றுசேர்க்கப்படுவதற்காக சிறந்த முறையில் பேணிச் செல்லப்படல் வேண்டும். அவை கிழிந்து துவாரமேற்பட்டு உடைந்து அல்லது தொடர்ந்து ஈரலிப்பான நிலையில் இருப்பதன் காரணமாக நெகிழ்வடைந்து அல்லது வேறு ஏதாவதொரு காரணத்தினால் உடைந்து விழுந்துவிடக்கூடிய அல்லது பழுதடையக்கூடிய நிலையில் இருக்குமாயின் அது கழிவுப் பொருட்களைச் சேகரிப்பதற்கு உபயோகிக்கப்படாதிருத்தல் வேண்டும். நியாயமான முறையில் அதை உபயோகிக்கும்போது அவ்வாறு ஏற்பட்டிருந்தால் அதேபோன்று உரிமையாளர் அல்லது வசிப்பாளர் எதிர்ப்பார்ப்பவர்களாக இருப்பார்களாயின் சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் ஒரு பகுதி சலுகையாக அல்லது முழுமையாக சலுகை அடிப்படையில் அத்தகைய கொள்கலங்களை சபையினாலேயே வழங்கப்படலாம்.

(iv) 1 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒன்றுசேர்க்கப்பட்ட கழிவுப்பொருட்கள் சபையினால் காலத்துக்குக் காலம் அறிவித்தல் வெளியிடப்படும் வகையில் சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படுகின்ற கழிவுப் பொருட்களைச் சேகரிக்கும் முறைப்படிக்கும் நேரசூசிக்கும் இணங்கும் வகையில் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் கழிவுப் பொருட்கள் அகற்றப்படுதல் வேண்டும்.

(v) உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் வீட்டுவாசிகளின் விருந்தினர்களினதும் அயலவர்களினதும் சுகாதாரத்திற்கு அல்லது அப்பிரதேசத்தின் சுகாதாரப் பாதுகாப்பிற்குப் பங்கமேற்படும் வகையில் அல்லது அபாயகரமான முறையில் கழிவுப் பொருட்கள் ஒன்றுசேர்க்கப்படுதலோ களஞ்சியப்படுத்தப்படுதலோ அல்லது நீக்கம் செய்யப்படுதலோ கூடாது.

6. (i) எந்தவொருவராலும் வீதியொன்றுக்கு, தெருவொன்றுக்கு, பாதையொன்றுக்கு, ஒடுக்கமான பாதையொன்றுக்கு அல்லது ஏனையவொரு பொது இடத்துக்கு அல்லது மனையிடமொன்றுக்கு அல்லது வடிகாலொன்றுக்கு அல்லது நீர்ப்பாதையொன்றுக்கு அல்லது நீர்தேக்கமொன்றுக்கு அல்லது கடலுக்கு கழிவுப் பொருட்கள் போடப்படாதிருத்தல் வேண்டும்.

(ii) எந்தவொருவராலும் சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் திறந்த நிலப்பரப்பொன்றில் வைத்து சுற்றாடலுக்குப் பங்கமேற்படும் வகையில் கழிவுப் பொருட்கள் எரிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(iii) எந்தவொரு உரிமையாளரும் அல்லது வசிப்பாளரும் 7ஆம் இலக்கத் துணைவிதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏதாவதொரு கழிவுப்பொருள் வர்க்கத்தை விடுவித்தல், செப்பமிடல், ஒழுங்குபடுத்தல் அல்லது நீக்கம் செய்தல் ஆகிய பணிகளுக்காக அனுமதியைப் பெற்றுக்கொள்ள நேரிடும் சந்தர்ப்பமொன்றில் அவ்வாறு அனுமதியைப்பெற இயலாதிருக்கும் போது அவர்/அவள் அந்தக் கழிவுப் பொருட்களை உத்தரவுபெற்ற கழிவுப்பொருள் சேகரிக்கும் நபரொருவரிடம் கையளிக்கப்படலாம்.

(iv) 7ஆம் இலக்கத் துணைவிதியின்கீழ் ஒழுங்கு செய்தல், செப்பமிடுதல் அல்லது நீக்கம் செய்தல் என்பன செய்யப்படாத கழிவுப் பொருட்கள் மேலே (III) இன் ஏற்பாடுகளின்கீழ் எவரேனுமொரு உத்தரவுபெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பவரொருவரால் சேகரிக்கப்பட்ட ஏதாவதொரு கழிவுப்பொருள் வர்க்கத்தை 08 தொடக்கம் 20 வரையிலான இலக்கங்களைக் கொண்ட துணைவிதகிளின் ஏற்பாடுகளுக்கிணங்க நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

7. (i) ஏதாவதொரு மனையிடத்தின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பிலேயே தவிர கழிவுப்பொருட்களை அந்த மனையிடத்திலேயே நீக்கம் செய்யப்படலாம்.:-

(அ) சபையினால் அத்தகைய கழிவுப்பொருட்கள் நீக்கம் செய்தலைத் தடைசெய்யப்பட்டுள்ள பிரதேசங்களில்

(ஆ) சபையினால் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள சில கழிவுப்பொருள் வர்க்கங்கள்

(ii) மனையிடமொன்றின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்குச் செயலாளரால் அனுமதியளிக்கப்பட்ட திட்டமொன்றிற்கும் தரத்திற்கும் இணங்க அமைக்கப்பட்ட தகன நிலையமொன்றில் அல்லது சூளையொன்றில் கழிவுப்பொருட்கள் எரிக்கப்படலாம். இல்லாவிட்டால் செயலாளரால் அனுமதியளிக்கப்பட்ட வகையில் கழிவுப் பொருட்களை செப்பமிடல், ஒழுங்கு செய்தல் அல்லது புதைத்து விடுதல் என்பன செய்யப்படலாம்.

(iii) எவரேனுமொரு உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் "கொம்போஸ்ட் பாத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக செயலாளரிடம் விண்ணப்பிக்கப்பட்டால் அந்த உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு அந்தக் கொம்போஸ் பாத்திரங்களைப் பேணிச் செல்வதற்கு போதியளவு

இடவசதிகள் இருக்குமாயின் செயலாளரால் அந்த கொம்போஸ்ட் பாத்திரங்களுக்கான மொத்தச் செலவின் ஒருபகுதியை அல்லது முழுமையான சலுகை அடிப்படையில் அந்த கொம்போஸ் பாத்திரங்கள் உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு வழங்கப்படும்.

(iv) உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் தமது மனையிடத்தில் சேரும் வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்கள் இயன்றளவு தூரத்திற்கு செயலாளரால் அங்கீகரிக்கப்படக்கூடிய வகையில் ஒழுங்கு செய்வதற்கான அல்லது செப்பமிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதேபோன்று மேற்கூறிய கழிவுப்பொருட்களுள் ஏதும் எஞ்சியிருப்பின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் கழிவுப்பொருட்களின் தன்மையைக் கவனத்திற்கொண்டு சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்தி நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிப்பவரொருவருக்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.

(v) வீதியொன்றுக்கு அல்லது பாதையொன்றுக்கு அண்மையில் அமைந்துள்ள ஏதாவதொரு மரத்தை அல்லது அம்மரத்தின் ஒருபகுதியை வெட்டும் நபரொருவர் அதை வெட்டிய உடனே நீக்கம் செய்தல் வேண்டும். இல்லாவிட்டால் அதனை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் அவ்வாறு இல்லாவிட்டால் நகர சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் கட்டணமொன்றைச் செலுத்தி நகர சபையின் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(vi) எந்தவொருவரும் அவரது கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் ஏதாவதொரு விலங்கு வீதியொன்றில் அல்லது பாதையொன்றில் அல்லது பொது இடமொன்றில் மலம் கழிப்பதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் அவ்வாறு மலம் கழித்தால் 08 தொடக்கம் 20 வரையிலான இலக்கங்களைக்கொண்ட துணைவிதிகளின்படி அதைச் சுத்தப்படுத்தி மலக்கழிவுகளை அகற்றுவது அந்நபரின் பொறுப்பாகும்.

(vii) எந்தவொருவராலும் நகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் எந்தவொரு வகையிலான கழிவுப்பொருளும் வாகனமொன்றிலிருந்து வீதியொன்றில் அல்லது பாதையொன்றில் அல்லது பொது இடமொன்றில் போடப்படாதிருத்தல் வேண்டும்.

(viii) வீடொன்றை அல்லது ஏதாவதொரு மனையிடத்தை நிர்மாணிப்பதற்காக அல்லது பழுதுபார்ப்பதற்காக விண்ணப்பிக்கும் ஒருவர் அவரது/அவளது மனையிடத்தில் சேரும் திண்மக் கழிவுப்பொருட்கள் மற்றும் நீக்கம் செய்யும் கழிவுப்பொருட்கள் என்பனவற்றை செப்பமிடுகின்ற, ஒழுங்கு செய்கின்ற முறைகள் பற்றிய விபரங்களை அவரது விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

**வீட்டுச் சூழல்கள்**

8. (i) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது வசிப்பாளரும் கூட்டித்துடைப்பதன் மூலம் அல்லது ஏனையவொரு முறையில் சேகரிக்கும் கழிவுப்பொருட்களைப் பின்வருமாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) விலங்குகளின் சடலங்கள், சடலங்களின் பகுதிகள் மற்றும் மலம் ;
(உ) மனையிடத்தைக் கூட்டித்துடைக்கும்போது சேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்

(ii) ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது வசிப்பாளராலும் மேற்கூறியவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் வெவ்வேறாகப் பைகளிலும் பாத்திரங்களிலும் அல்லது ஏனைய கொள்கலன்களிலும் இடப்படுதல் வேண்டும். அத்துடன் அவற்றை நீக்கம் செய்யப்படும்வரை அதற்கென ஒதுக்கப்பட்டுள்ளவொரு இடத்தில் வைக்கப்படுதலும் வேண்டும். உணவுக்கழிவுப் பொருட்கள் மற்றும் நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் என்பன ஈரலிப்பு ஒழுகாத மூலப்பொருட்களைக்கொண்டு தயாரிக்கப்பட்ட அத்துடன் எலிகள், கிருமிகள் மற்றும் ஏனைய பிராணிகள் உட்செல்லாதவாறு முறைப்படி மூடக்கூடிய கொள்கலன்களில் வைக்கப்படுதல் வேண்டும். விலங்குகளின் அழுகிய சடலப்பகுதிகள் அல்லது மலம் போன்ற கழிவுப்பொருட்கள் நீக்கப்படவேண்டிய கழிவுப் பொருட்கள் என்பனவற்றின் தன்மையைக் கவனத்திற்கொண்டு நகர சபையின் அதிகாரப்பிரதேசத்திற்காக காலத்துக்குக் காலம் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடிய கட்டணமொன்று ஆணையாளரிடம் செலுத்தப்படுவதன்மூலம் நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிப்பவரொருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது வசிப்பாளராலும் (1) ஆம் பந்தியின் அ மற்றும் ஆ ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் உத்தரவுபெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரொருவரிடம் கையளிக்கப்படலாம். உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அவ்வாறு செய்யத் தவறும் சந்தர்ப்பத்தில் அவர் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்து ஏற்புடைய கழிவுப்பொருட்கள் நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழவுப்பொருள் சேகரிக்கும் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். இல்லாவிட்டால் ஒவ்வொரு வகையிலான கழிவுப்பொருட்களுக்காகவும் நகர சபையினால் அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் அல்லது அத்தகைய கழிவுப்பொருட்களுக்காக சபையினால் வழங்கப்பட்டுள்ள தொட்டிகளில் அல்லது கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும்.

9. (i) வாடகை செலுத்தப் பல எண்ணிக்கையானோர்கள் வசிக்கும் பல்மாடிக் கட்டிடமொன்றின் ஒவ்வொரு உரிமையாளராலும் வசிப்பாளராலும் அவர்களது கழிவுப்பொட்கள் பின்வருமாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;

(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) விலங்குகளின் சடலங்கள், சடலங்களின் பகுதிகள் மற்றும் மலம் ;
(உ) மனையிடத்தைக் கூட்டித்துடைக்கும்போது சேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்

(ii) (i) ஆம் பந்தியில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடமொன்றின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால், செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கும் அமைப்புக்களுக்கும் இணங்கும் வகையில் மூன்று வகைகளிலான பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன் அவற்றைச் சுத்தமாகவும் சுகாதாரப் பாதுகாப்பான நிலையிலும் பேணப்படுதல் வேண்டும்.

(iii) (i) ஆம் உட்பிரிவில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடமொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் (ii) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தவறும் சந்தர்ப்பமொன்றில் செயலாளரால் அறிவிக்கப்படும் தினமொன்றில் அல்லது அதற்கு முன் ஏற்புடைய பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் வழங்குமாறு உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு பணிப்பிடுவதற்கான அதிகாரம் செயலாளருக்கு இருக்கும். செயலாளரின் பணிப்புகளின்படி செயல்புரிவது உரிமையாளரின் அல்லது வசிப்பாளரின் கடமையாகும்.

(iv) கட்டிடத் தரையொன்றின் அல்லது மாடியொன்றின் உரிமையாளரால் வசிப்பாளரால் தேர்ந்தெடுத்துப் பிரிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் அவற்றிற்காக வைக்கப்பட்டுள்ள பாத்திரமொன்றுக்கு அல்லது கொள்கலனொன்றுக்கு இடப்படுதல் வேண்டும்.

(v) இத்துணை விதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் நீக்கம் செய்யப்படுவது அதிகாரம்பெற்ற சேகரிப்பாளரொருவரின் பணியாகும். அவ்வாறு நீக்கம் செய்யப்படாத ஏதாவதொரு கழிவுப்பொருள் (இ) மற்றும் (ஈ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளும் நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிக்கும் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும்.

10. (i) நகர சபையின் முன் அனுமதியைப் பெற்றுக்கொண்டு சேரிவாசிகளின் உபயோகத்திற்காக ஆணையாளரால் கழிவுப்பொருட் பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் இலவசமாக வழங்கப்படுவது சட்டரீதியானதாகும்.

(ii) ஒவ்வொரு சேரிவீட்டினதும் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் அவரது வசிப்பிடத்தில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வகையில் வெவ்வேறாகத் தேர்ந்தெடுத்து அவரது வசிப்பிடத்துக்குச் சமீபமாக வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்.

(iii) இத்துணைவிதியின் (ii) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை நீக்கம் செய்வதற்காக கழிவுப்பொருள் சேகரிக்கும் ஒருவருக்கு அனுமதியளிக்கும் அதிகாரம் செயலாளருக்கு இருக்கும்.

**சாப்புகள் மற்றும் அலுவலகங்கள்**

11. (i) சாப்பொன்றின் அல்லது அலுவலகமொன்றின் ஒவ்வொரு உரிமையாளராலும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களைப் பின்வருமாறு தேர்ந்து பிரித்தெடுக்கப்படுதல் வேண்டும் :-

(அ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) விலங்குகளின் சடலங்கள், சடலங்களின் பகுதிகள் மற்றும் மலம் ;
(உ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) தேர்ந்தெடுத்து வேறாக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் நீக்கம் செய்யப்படும்வரை வெவ்வேறாகப் பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இட்டுத் தகுந்த இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படுதல் வேண்டும்.

(iii) சாப்பொன்றின் அல்லது அலுவலகமொன்றின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் இத்துணைவிதியின் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம்.

(iv) மாடிகள் சிலவற்றைக் கொண்ட அல்லது மாடித்தரைகள் சிலவற்றைக்கொண்ட சாப்புகளின் அல்லது அலுவலகத் தொகுதியொன்றின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால், செயலாளரால் அங்கீகரிக்கப்படும் தரங்களுக்கு ஏற்புடையதாக அந்தச் சாப்பிலிருந்து அல்லது அலுவலகத்திலிருந்து தேர்ந்தெடுத்து வெவ்வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் சேகரிப்பதற்காக அல்லது சேர்த்து வைப்பதற்காக ஒவ்வொரு சாப்புக்காகவும் அல்லது அலுவலகத்துக்காகவும் தேவைக்கேற்ற எண்ணிக்கையான கழிவுப்பொருட் பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

(v) இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள சாப்பொன்றின் அல்லது அலுவலகமொன்றின் உரிமையாளரால் தேர்ந்து வெவ்வேறாகப் பிரிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்படுதல்

வேண்டும். இத்துணைவிதியின் (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிப்பதற்கான உரிமை அனைத்து உரிமையாளர்களுக்கும் வசிப்பாளர்களுக்கும் இருக்கும்.

(vi) அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரால் சேகரிக்கப்படாத, இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளும் (ii) ஆம் உட்பிரிவில் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகையொன்று, சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடிய வகையில் கட்டணமொன்று செயலாளருக்குச் செலுத்துவதன் மூலம் ஏற்புடையவாறு உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் நகர சபையின் அதிகாரப்பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம்.

(vii) அயலவர்களுக்கு அல்லது மேற்கூறிய சாப்பில் அல்லது அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் சுகாதாரத்திற்கு அல்லது சுகாதாரப் பாதுகாப்பிற்கு எவ்வித பங்கமும் ஏற்படாதவாறு கழிவுப்பொருள் அகற்றுதலும் இத்துணைவிதியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருட் பாத்திரங்கள் மற்றும் கொள்கலன்களைப் பேணுதலும் குறிப்பிடப்பட்ட சாப்பின் அல்லது அலுவலகத்தின் அனைத்து உரிமையாளர்களினதும் பொறுப்பாகும்.

(viii) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி,

"அலுவலகம்" என்பதற்கு 1954 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க சாப்புக்கள் மற்றும் அலுவலகச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பான சட்டத்தில் (129 ஆம் அத்தியாயம்) கொடுக்கப்பட்டுள்ள பொருளே உள்ளது.

"வசிப்பாளர்" என்னும் சொல் சாப்பொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அல்லது வியாபாரமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் பொறுப்பாளரைப் பொருட்படுத்தும்.

"சாப்பு" என்னும் சொல் தொகையாக அல்லது சில்லறையாக விற்பனை செய்வதற்காக பொருட்களை வைத்துள்ள இடமொன்றைப் பொருட்படுத்துவதுடன் உணவுப் பொருட்களை விற்பனைக்காக வைத்துள்ள இடமொன்றையும் முடிதிருத்துமிடமொன்றை அல்லது உடலழகூட்டும் செலுன் ஒன்றை நடாத்திச்செல்லும் இடமொன்றையும் பொருட்படுத்தும்.

**ஹோட்டல்கள்**

12. எவரேனுமொரு ஹோட்டல்காரரால் அல்லது அவரால் எழுத்துமூலமாக அதிபாரமளிக்கப்பட்ட நபரொருவரால் தமது சுற்றாடலில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுத்து வெவ்வேறாக வைக்கப்படல் வேண்டும். அல்லது அவ்வாறு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) ஒவ்வொரு ஹோட்டல்காரராலும் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒருவராலும் தேர்ந்து வெவ்வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் நீக்கம் செய்யப்படும்வரை வெவ்வேறாகப் பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இட்டு தகுந்த இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு ஹோட்டல்காரராலும் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரால், ஈக்கள், எலிகள் அல்லது ஏனைய பிராணிகள் உட்செல்லாதவாறு அனைத்து உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் பிளாஸ்டிக் அல்லது உலோகப் பொருட்களால் அமைக்கப்பட்ட அத்துடன் மூடியொன்றினால் பாதுகாப்பாக மூடப்பட்ட பாத்திரமொன்றில் அல்லது ஏனையவொரு கொள்கலனில் வைக்கப்படுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம்.

(v) இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவின்கீழ் கையளிக்கப்படாத எவையேனும் கழிவுப்பொருட்கள் மற்றும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் என்பனவற்றின் தன்மைகளைக் கவனத்திற்கொண்டு நகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் கட்டணமொன்று உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் செயலாளருக்குச் செலுத்தப்படுவதன் மூலம் நகர சபையின் அதிகாரப்பிரதேசத்தில் கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் ஒருவரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

(vi) இத்துணைவிதிகளின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி, ஹோட்டல் என்பது நித்திரைகொள்ளும் வசதிகளுடனான அத்துடன் அத்தகைய வசதிகளின்றி பணம் செலுத்துவதன் மூலம் உபயோகத்திற்காக உணவுப்பொருட்கள் மற்றும் மதுபான வகைகளை வழங்கும் இடமொன்றைப் பொருட்படுத்தும். அதற்கு சிற்றுண்டிச்சாலை, விருந்தினர் விடுதி தங்குமிடம் வாடிவீடு யாத்திரிகளுக்கான ஓய்வு மண்டபம் சோற்றுக்கடை அல்லது ஹோட்டல் என்பனவற்றுள் ஒன்றுக்குச் சமனான வகையில் வியாபாரமொன்றை நடத்திச் செல்லும் ஏனைய ஏதாவதொரு நிறுவனமொன்றையும் பொருட்படுத்தும்.

**மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகள் விற்பனை நிலையங்கள்**

13. (i) மரக்கறி அல்லது பழவகைகளை விற்பனை செய்யும் ஒவ்வொரு விற்பனை நிலையத்தினதும் உரிமையாளரால் அல்லது அந்த விற்பனை நிலையத்தின் பொறுப்பாளரால் தனது மனையிடத்தில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந் தெடுக்கப்பட்டு வெவ்வேறாக்கப்படுதல் வேண்டும்.

(அ) மனித உபயோகத்திற்கு உகந்த நிலையில் இல்லாத பழங்கள் மற்றும் ஏனைய கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் ஈரலிப்புப் பொசியாமல் இருக்கும் வகையில் பிளாஸ்டிக் அல்லது உலோகத்தினால் அமைக்கப்பட்ட வேறானவொரு கொள்கலனில் வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது ஏனைய பிராணிகள் அந்த கொள்கலனிற்குள் உட்செல்லாதவாறு அடைத்துப் பாதுகாப்பாக வைக்கப்படுதல் வேண்டும். ஏனைய கழிவுப்பொருட்கள் ஏதாவதொரு தகுந்த பாத்திரமொன்றில் அல்லது கொள்கலனொன்றில் இடப்படுதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படல் வேண்டும். அவ்வாறு கையளிக்கப்படாத எவையேனும் கழிவுப்பொருள் இருப்பின் இத்துணைவிதியின். (i) ஆம் உட்பிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் சேர்த்து மாநகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் கட்டணமொன்றை ஆணையாளருக்குச் செலுத்தி நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி மரக்கறி மற்றும் பழவகை விற்பனை நிலையம் என்பது மரக்கறி வகைகள் மற்றும் பழ வகைகளை களஞ்சியப்படுத்தியுள்ள அல்லது விற்பனைக்காக வைத்துள்ள இடமொன்றைப் பொருட்படுத்தும்.

**இறைச்சி, மீன், கோழியிறைச்சி அல்லது முட்டை வியாபாரக் குடில்கள்**

14. (i) இப்பணிக்காக செயலாளரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கசாப்புக் கடைகள் சட்டத்தின்கீழ் அனுமதியளிக்கப்பட்டுள்ள விலங்குகள், பறவைகள் தவிர்ந்த ஏனையவொரு விலங்கையோ அல்லது பறவையையோ கொல்லப்படாதிருத்தல் வேண்டும்.

(ii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திலும் கொலைசெய்யப்படக்கூடிய விலங்கின் அல்லது பறவையின் வர்க்கம், கொலைக்களம் அமைக்கப்படவேண்டிய முறை, சுத்தப்படுத்துவதற்கான அத்துடன் மனித உபயோகத்திற்கு எடுக்கப்படாத இரத்தம் குடல் நடுமடிப்புகள் மற்றும் ஏனைய பகுதிகளை நீக்கம் சய்வதற்கான ஏற்புடைய நிபந்தனைகளும் நகர சபையினால் தகுந்ததெனக் கருதப்படும் ஏனைய நிபந்தனைகளும் விசேடமாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்காக நகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் கட்டணமொன்று செயலாளரால் அறவிடப்படுவதுடன் அக்கட்டணத்தை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் சந்தர்ப்பத்திலேயே செலுத்தல் வேண்டும்.

(iv) இறைச்சி, கோழியிறைச்சி, மீன், முட்டை என்பன விற்பனை செய்வதற்காகவுள்ள குடிலொன்றின் உரிமையாளர் அல்லது அவ்வியாபாரத்தை நடத்திச் செல்பவர்கள் அவர்களது கழிவுப்பொருட்களை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுத்து வெவ்வேறாக்குதல் வேண்டும்.

(அ) மனித உபயோகத்திற்கு உகந்த நிலையில் இல்லாத விலங்கு சடலங்கள் சடலப் பகுதிகள் அல்லது முட்டைகள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(v) வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது ஏனைய கொள்கலன்களில் வைக்கப்படுதல் வேண்டும். இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவின் (அ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்கள் ஈரலிப்பு கசியாதிருக்கும்படி கொள்கலனொன்றினுள் வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அக்கொள்கலனை ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது ஏனைய பிராணிகள் உட்செல்லாதவாறு நன்றாக மூடி பாதுகாப்பாக வைத்தல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவின்கீழ் (அ), (ஆ) மற்றும் (இ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம். அவ்வாறு கையளிக்கப்படாத ஏதாவதொரு கழிவுப்பொருள் வகையொன்று இருப்பின் இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்து நகர சபையினால் காலத்துக்காலம் தீர்மானிக்கப்படக்கூடிய கட்டணமொன்று செலுத்துவதன் மூலம் துர்நாற்றம் பரவுவதற்குமுன் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

(vii) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி இறைச்சி, மீன், கோழியிறைச்சி, முட்டை என்பனவற்றை விற்பனை செய்யும் வியாபாரக் குடில் என்பது இப்பொருட்களை விற்பனை செய்வதற்காக களஞ்சியப்படுத்தியுள்ள அல்லது விற்பனை செய்வதற்காக வைத்துள்ள அல்லது திறந்து வைத்துள்ள இடமொன்றைப் பொருட்படுத்தும்.

**நடை பாதை வியாபாரம்**

15. (i) கழிவுப்பொருட்கள் ஒன்றுசேரும் வியாபாரமொன்றை நடத்திச் செல்லும் வியாபாரியொருவர், செயலாளரால் அங்கீகரிக்கப்படும் தரங்களுக்கு ஏற்புடையதாக கழிவுப்பொருட்களை வைப்பதற்காக பாத்திரமொன்றை அல்லது கொள்கலனொன்றை வைத்திருத்தல் வேண்டும். அத்தகைய எந்தவொரு வகையிலான கழிவுப்பொருளும் நடைபாதையில் அல்லது பெருந்தெருவில் அல்லது பொது இடமொன்றில் போடப்படாதிருத்தல் வேண்டும் :-

(ii) நடைபாதை வியாபாரியொருவரால், வாகனங்கள் மற்றும் பாதசாரிகளின் போக்குவரத்துக்குத் தடைகள் ஏற்படும் வகையில் பாத்திரமொன்று அல்லது கொள்கலனொன்று வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(iii) நடைபாதை வியாபாரிகள் ஒவ்வொருவராலும் அவர்களது வியாபாரத்தின் காரணமாக ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) உணவுக்கழிவுப்பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப் பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோகிக்கத்தக்க மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்.

(iv) வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும். இத்துணைவிதியின் (ii) ஆம் உட்பிரிவின் (அ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கிருமிகள், எலிகள் அல்லது ஏனைய பிராணிகள் உண்ணக்கூடிய கழிவுப்பொருட்கள் பாதுகாப்பான கொள்கலனொன்றினுள் வைக்கப்படுதல் வேண்டும். மேலதிகக் கழிவுப்பொருட்களைப் போடுவதற்குத் தேவையாகும் சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் அவற்றை மூடி வைத்தல் வேண்டும்.

(v) நடைபாதை வியாபாரிகள் ஒவ்வொருவராலும் இத்துணைவிதியின் (iii) ஆம் உட்பிரிவின்கீழ் (அ), (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் அல்லது இத்துணைவிதியின் (iii) ஆம் உட்பிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் சேர்த்து நகர கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் தினந்தோறும் கையளிக்கப்படுதல் வேண்டும். வியாபாரம் நடத்தப்படாத சந்தர்ப்பங்களில் கழிவுப்பொருட் பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் நடைபாதையொன்றின் ஓரத்தில் அல்லது வீதியோரத்தில் வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(vi) ஒவ்வொரு நடைபாதை வியாபாரியும் கழிவுப்பொருட் பாத்திரங்களை அல்லது கழிவுப்பொருள் கொள்கலன்களை நகர கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிப்பதற்குமுன் நகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(vii) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி "நடைபாதை வியாபாரி" என்னும் சொற்கள் நடைபாதையில் அல்லது வீதியோரத்தில் பொருட்களை விற்பனை செய்கின்ற அல்லது சேவைகளை வழங்குகின்ற ஒருவரைப் பொருட்படுத்தும்.

**தொழிற்சாலைகள்**

16. ஒவ்வொரு தொழிற்சாலையினதும் உரிமையாளராலும் அல்லது உற்பத்தியாளராலும் தொழிற்சாலையின் சூழலில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களைச் சேகரித்து கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின்கீழ் (அ), (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம். அவ்வாறு கையளிக்கப்படாத எவையேனும் கழிவுப்பொருள் இருப்பின் அவற்றை நகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடிய கட்டணமொன்று செயலாளருக்குச் செலுத்தப்படுவதன் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iii) 1980 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின்கீழ் அவ்வியாபாரத்திற்காக வழங்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாப் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்களை நீக்குதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி "தொழிற்சாலை" என்பதற்கு 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளே ஏற்புடையதாக இருக்கும்.

**தோண்டுதல், அமைத்தல் மற்றும் உடைத்தல் என்பன**

17. (i) ஏதாவதொரு வீதியை, பாதையை அல்லது பொது இடத்தைத் தோண்டும்போது உருவாகும் கழிவுப்பொருட்களைத் தகுந்தவாறு அச்சுற்றாடலிலிருந்து நீக்கும்வரை அச்சுற்றாடலுக்குள் அல்லது செயலாளரால் அங்கீகரிக்கப்படும் இடமொன்றில் களஞ்சியப்படுத்தல் வேண்டும்.

(ii) இந்த துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்படுகின்ற கழிவுப்பொருட்கள் நகர சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற வகையில் கட்டணமொன்றைச் செயலாளருக்குச் செலுத்துவதன் மூலம் நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iii) சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி ;

"இத்துணைவிதியின் பணிகளுக்காக தோண்டுதல், அமைத்தல் மற்றும் உடைத்தல் ஆகிய செயல்களில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களும்" என்பதற்கு தொழில் வழங்குபவரால் அந்தச் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள நபர்கள் எனப் பொருள்படும்.

"கழிவுப்பொருட்கள்" என்பது கட்டிடங்களை அமைக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கான மூலப்பொருட்களை உபயோகிக்கும்போது உண்டாகும் மண் சேறு தூசு மற்றும் கட்டிடமொன்றை உடைத்துவிடும்போது உண்டாகும் கழிவுப்பொருட்கள் என்பனவற்றையும் பொருட்படுத்தும்.

18. (i) வாயு, மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி வசதிகள் அல்லது ஏனைய பொதுவசதிகளை வழங்குவதற்காக ஏதாவதொரு வீதியை பாதையை அல்லது பொது இடமொன்றைத் தோண்டும்போது அப்பணியுடன் தொடர்புடைய எந்தவொரு நபரும் அப்பணிக்காக முன் அனுமதியைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ii) மேலே (i) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதியளிப்பதற்குமுன் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக விண்ணப்பதாரியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் உத்தேச பணிமுடிவடைந்த பின்பு பாதையில் அல்லது பொது இடமென்றில் தற்காலிகமாக வைப்பதற்கு நேரிடப்படக்கூடிய கழிவுப்பொருட்கள் அத்துடன் விண்ணப்பதாரி அக்கழிவுப் பொருட்களை அகற்றுவதைத் தாமதம் செய்தால் அவற்றை அகற்றுவதற்காகத் தேவைப்படும் செலவினங்கள் என்பன தொடர்பில் செயலாளர் கவனத்திற் கொள்ளல் வேண்டும். அனுமதியளிப்பதற்கு முன் விண்ணப்பதாரி மதிப்பீட்டுச் செலவினங்களுக்குச் சமனான பணத்தொகையை வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும்.

(iii) எவரேனுமொருவர் கழிவுப்பொருட்கள் முழு அளவையையும் அல்லது அதன் ஒருபகுதியை அகற்றுவதற்குத் தவறினால் அல்லது நீக்கம் செய்தலைத் தாமதப்படுத்தினால் செயலாளரால் தீர்மானிக்கப்படும் வகையில் மேற்கூறிய கழிவுப்பொருட்கள் நீக்கம் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் அப்பணிக்காக ஏற்படும் செலவினத்தை (ii) ஆம் உட்பிரிவின்கீழ் வைப்புச் செய்யப்படும் பணத்திற்குப் பிரதியீடு செய்தல் வேண்டும்.

**வைத்தியசாலைகள்**

19. (i) வைத்தியசாலையொன்றின் உரிமையாளரால் சுற்றாடலில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இவ்வுட்பிரிவின் (இ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வர்க்கங்கள் தவிர்ந்த ஏனைய கழிவுப்பொருட்கள்;
(ஈ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள் ;
(உ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆம் உட்பிரிவின்கீழ் (அ) மற்றும் (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை வெவ்வேறான கொள்கலன்களில் இட்டு அவற்றை நீக்கம் செய்யும்வரை தகுந்த இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். (i) ஆம் உட்பிரிவின்கீழ் (இ) மற்றும் (ஈ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளுக்காக விசேடமாக அமைக்கப்பட்டுள்ள பாத்திரமொன்றில் அல்லது கொள்கலனொன்றில் அக்கழிவுப்பொருட்கள் இடப்படுதல் வேண்டும். அத்துடன் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஓர் இடத்தில் வைக்கப்படுதலும் வேண்டும். 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் இந்த வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் அத்தகைய கழிவுப்பொருட்களை நீக்கம்செய்தல் வேண்டும்.

(iii) (i) ஆம் உட்பிரிவில் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம் பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் அல்லது நகர சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணமொன்று செலுத்தப்படுவதன் மூலம் நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிக்கும் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியில் சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி ;

"வைத்தியசாலை" என்பது ஏதாவதொரு நோயினால் அல்லது பலவீனம் காரணமாக பீடிக்கப்பட்ட நபர்கள் அல்லது விலங்குகள் பொறுப்பேற்கப்பட்டு அந்நபர்களை அல்லது விலங்குகளை பேணிப்பராமரித்து சிகிச்சைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக

உபயோகிக்கும் அல்லது உபயோகிப்பதற்கு எதிர்பார்க்கும் ஏதாவதொரு மனையிடத்தை (எவ்வகையில் விபரிக்கப்பட்டபோதிலும்) பொருட்படுத்துவதுடன் கவனிப்பு இல்லம், சிகிச்சை நிலையம் மகப்பேற்று இல்லம் மற்றும் விலங்கு வைத்தியசாலை/விலங்கு சிகிச்சை நிலையம் என்பனவற்றையும் பொருட்படுத்தும்.

"இடையூறு விளைவிக்கக்கூடிய பாதுகாப்புக் கழிவுப்பொருட்கள்" சிகிச்சை நிலையக் கழிவுப்பொருட்கள், உடல் உறுப்புப் பகுதிகள் தொப்புல்கொடிகள் பரவக்கூடிய மற்றும் மிகவும் பரவக்கூடிய கழிவுப்பொருட்கள் மற்றும் கூர்மையான முட்கள் என்பனவற்றைப் பொருட்படுத்தும்.

**ஏனைய மனையிடங்கள்**

20. (i) இல. 8 தொடக்கம் 19 வரையிலான துணைவிதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்படாத வியாபாரமொன்றை நடத்திச் செல்லுமொருவர் அல்லது பொதுமக்களின் ஒத்துழைப்புடன் பொது சமூக கலாசார அல்லது கல்விச் செயற்பாடொன்றை ஒழுங்கு செய்யும் அத்துடன் செயற்படுத்தும் எவரேனுமொரு நபர் அச்செயற்பாடு காரணமாக அல்லது அத்தகைய நிறுவனமொன்றை நடத்திச் செல்வதன் காரணமாக உண்டாகும் கழிவுப்பொருட்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுத்து வெவ்வேறாக வைக்கப்படுதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆம் உட்பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு செயற்பாட்டை ஒழுங்கு செய்யும் ஒருவர் அச்செயற்பாடு காரணமாக ஒன்றுசேரும் கழிவுப்பொட்களைச் சேகரிப்பதற்கு விசேடமாக வேலைத்திட்டமொன்றை மேற்கொள்வதற்காக அது தொடர்பில் நேரங்காலத்தோடு மாநகர சபைக்கு அறிவித்தல் வேண்டும் ;

(iii) தேர்ந்தெடுத்து வெவ்வேறாக வைக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் நீக்கம் செய்யப்படும்வரை வெவ்வேறாகக் கொள்கலன்களில் இட்டு தகுந்த இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும் ;

(iv) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் அல்லது (i) ஆம் உட்பிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் சேர்த்து நகர சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படுகின்ற வகையில் கட்டணமொன்று செலுத்துவதன் மூலம் நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும்.

**வீதிகள் மற்றும் பொது இடங்கள்**

21. (i) ஆணையாளரால் நகர முதல்வருடன் கலந்தாலோசிக்கப்பட்டு சபையின் அனுமதிக்கு இணங்கும் வகையில் பின்வரும் பணிகளைச் செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நிருவகிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(அ) நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள் பாதைகள், பொது வடிகால்கள் நீர்ப்பாதைகள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பனவற்றைச் சுத்தமாகவும் சுகாதாரத்திற்கு பங்கமேற்படாதவாறும் நடத்திச்செல்லல்.

(ஆ) வீதிகள் மற்றும் பாதைகளின் இருபக்கங்களிலும் பொத இடங்களிலும் போதியளவு எண்ணிக்கையான தொட்டிகளை வழங்கி பொருத்துதல் மற்றும் பேணுதல்.

(இ) விழாக்கள் மற்றும் விசேட நிகழ்வுகள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அல்லது சபையினால் தீர்மானிக்கப்படும் நிகழ்வுச் சந்தர்ப்பங்களில் சபையினால் தீர்மானிக்கப்படும்போது அல்லது மேற்கூறிய விழாக்கள் அல்லது விசேட நிகழ்வுகள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அமைப்பாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க பொது இடங்களில் பாவனைக்காக நடமாடும் கழிவுப்பொருட் தொட்டிகளை வழங்குதல் வேண்டும்.

(ஈ) வதிவிடப் பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ள பொதுக் கழிவுப்பொருட் தொட்டிகள் அல்லது கொள்கலன்கள் சுகாதாரத்திற்குப் பங்கமேற்படாத வகையில் பேணுதல் மற்றும் அவற்றின் அருகில் வசிப்பவர்களுக்கு அத்தொட்டிகள் காரணமாக இடையூறு ஏற்படுவதற்குமுன் அந்தத் தொட்டிகளிலும் கொள்கலன்களிலும் உள்ள கழிவுப்பொருட்களை நீக்கம் செய்தல் வேண்டும்.

(உ) முன்கூறிய பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில் கிடைக்கப்பெறும் ஏதாவதொரு முறைப்பாட்டை எவ்வித தாமதமுமின்றி விசாரணை செய்து ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(ii) சபையினால் விசேடமாக கழிவுப்பொருட்களுக்காக வழங்கப்படும் ஏதாவதொரு தொட்டியில் ஈரலிப்பான, வியாபார, நிறுவன, தொழில்நுட்ப மற்றும் ஏனைய கழிவுப்பொருட்கள் எந்தவொருவராலும் இடப்படாதிருத்தல் வேண்டும்.

**மாநகர சபையின் கடமைகள்**

22. (i) செயலாளரால் நகர தவிசாளருடன் கலந்தாலோசிக்கப்பட்டு சபையின் அனுமதிக்கிணங்க பின்வரும் பணிகளைத் திட்டமிடல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிருவகித்தல் என்பன செய்யப்படலாம்.

(அ) கழிவுப்பொருட்களை மீள உபயோகிப்பதற்கும் மீள்சுழற்சி செய்வதற்கும் பொதுமக்களை ஊக்குவித்தல்.

(ஆ) கழிவுப்பொருட்களை வெவ்வேறாகத் தேர்ந்தெடுத்தல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், விடுவித்தல் மற்றும் நீக்கம் செய்தல் என்பன தொடர்பில் அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் அல்லது தொடர்பு ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்தல்.

(இ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் சிறு தொழில் முயற்சியாளர்களுக்கும் வசதிகளை வழங்குதல்.

(ஈ) கழிவுப்பொருட்களைக் குறைக்கும், மீள உபயோகிக்கும் அத்துடன் மீள்சுழற்சி செய்யும் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களுக்கு ஊக்கமளித்தல்.

(உ) கழிவுப்பொருட்களை நீக்கம் செய்யும் முறைகள் தொடர்பில் வித்தியாசமான படிவங்களை ஒழுங்கு செய்தல்.

(ஊ) நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அந்தந்தப் பிரதேசங்களில் சேரும் அந்தந்த வகையிலான கழிவுப்பொருட்களுக்காக சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் நாட்கள், நேரங்கள், முறைகள் மற்றும் கட்டணங்கள் என்பனவற்றைக் குறிப்பிட்டு கழிவுப்பொருள் சேகரிப்புப் பணித்திட்டக் குறிப்பொன்றை ஒழுங்கு செய்து அதில் அரசாங்க விடுமுறை நாட்களில் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கான நிபந்தனைகளையும் அதில் குறிப்பிடுதல் வேண்டும்.

(எ) அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் வேறாகக் கையளிக்கப்படாத எவையேனும் ஒதுக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் இருப்பின் அவற்றை பணித்திட்டக் குறிப்பிற்கிணங்க குறிப்பிட்ட நேரத்தில் சேகரித்தல்.

(ஏ) அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கப்படாத அபாயகரமான கழிவுப்பொருட்களும் ஏனைய ஏதாவதொரு கழிவுப்பொருளும் இருப்பின் அவற்றை சுகாதாரப் பாதுகாப்பு முறைகளுக்கிணங்கும் வகையில் எடுத்துச் செல்லல்.

(ஐ) அபாயகரமான கழிவுப்பொருள் அல்லது செயலாளரால் தீர்மானிக்கப்படும் ஏனைய எவையேனும் கழிவுப்பொருட்கள் தவிர்ந்த வீதிகளைக் கூட்டித்துடைப்பதன் மூலமும் வடிகால்கள் மற்றும் பொது இடங்களைச் சுத்தம் செய்வதன் மூலமும் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களும் பொதுத் தொட்டிகளில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் மற்றும் சபையின் தொழிலாளர்களால் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களும் அதிகாரம் பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளித்தல்.

(ஒ) உணவு மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள், மீள்உபயோகிக்கத்தக்க கழிவுப்பொருட்கள் என்பவற்றைச் செயல்முறையில் இயன்றளவு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒழுங்கு செய்வதற்கும் செப்பமிடுவதற்கும் வேலைத்திட்டமொன்று உட்பட சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிப்பாளர்களால் சேகரிக்கப்படுகின்ற அத்துடன் வெவ்வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அந்த நடவடிக்கைகளிலிருந்து நிராகரிக்கப்படுகின்ற அத்துடன் அக்கழிவுப்பொருள் வகைகளின் ஏனைய மீதிக் கழிவுப்பொருட்கள் என்பன செயலாளரால் அங்கீகரிக்கப்படும் வகையில் நீக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

(ஓ) மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் கலந்துரையாடி செயலாளரால் அங்கீகரிக்கப்படும் வகையில் அபாயகரமான அனைத்துக் கழிவுப்பொருட்களையும் நீக்கம் செய்தல்.

(ஔ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரமொன்றை அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ளல் மற்றும் அந்த அனுமதிப்பத்திரத்தில் அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் கழிவுப்பொருட்களை எரித்தல் அல்லது சுகாதாரப் பாதுகாப்பான நில நிரப்பிடமொன்றை நடத்திச்செல்லல்.

(க) கழிவுப்பொருட்களை கூடடித்துடைத்தல், சேகரித்தல், தேர்ந்தெடுத்து வகைப்படுத்தல், எடுத்துச்செல்லல், மாற்றுதல் மற்றும் நீக்கம் செய்தல் ஆகிய பணிகளில் ஈடுபடும் ஒவ்வொரு ஊழியருக்கும் தகுந்த உடைகள், கைப்பாதுகாப்பு உறைகள், வாய்மூடிகள் மற்றும் பூட் பாதணிகள் என்பனவற்றை வழங்குதல்.

(ங) வீடொன்றை அல்லது ஏனைய மனையிடமொன்றை நிர்மாணிப்பதற்காக அல்லது சீர்த்திருத்துவதற்காக சபையிடம் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்துள்ள சந்தர்ப்பமொன்றில் அந்த நிர்மாணிப்பு அல்லது சீர்திருத்தம் காரணமாக உண்டாகும் திண்மக் கழிவுப்பொருட்களை நீக்கம் செய்யும் முறையையும், குறிப்பிட்ட வேலையைத் தொடங்கும் கட்டத்திலும் அவ்வேலையைச் செய்கையிலும் அவ்வேலை முடிவடையும் போதும் அத்துடன் துண்டுக் கற்களை களஞ்சியப்படுத்துகின்ற, ஒழுங்கு செய்கின்ற மற்றும் நீக்கம் செய்கின்ற முறைகள் தொடர்பில் சோதனை செய்தல் மற்றும் அங்கீகரித்தல்.

(ச) சபையின் மனையிடத்திற்காக உள்ளக கழிவுப்பொருள் முகாமைத் திட்டமொன்றை அமைத்தல்.

(ஞ) 2000 ஆம் ஆண்டின் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான தேசிய உபாயமுறை மற்றும் ஏற்புடைய சட்டத்திற்கிணங்க விபரமாக ஆகக்குறைந்தது ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டும் அடங்குகின்ற அத்துடன் இறுதியாக நீக்கம் செய்தல் தொடர்பில் எதிர்காலத்தில் 03 ஆண்டுகள் அடங்கும் வகையில் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத் திட்டமொன்றை ஒழுங்கு செய்தல் மற்றும் செயற்படுத்தல், அத்திட்டம் செயற்படும் கால எல்லைக்கிணங்க நிரந்தர அடிப்படையில் சபையினால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படும்.

(ட) (அ) தொடக்கம் (ஞ) வரை காட்டப்பட்டுள்ள பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் பாதிப்பொன்று தொடர்பில் ஏதாவதொரு முறைப்பாடு கிடைப்பின் அதை மூன்று நாட்களுக்குள்ளும் அந்த முறைப்பாடு ஏனையவொரு காரணம் தொடர்பிலாயின் பதினான்கு நாட்களுக்குள்ளும் விசாரணை செய்தல் மற்றும் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### அனுமதிப்பத்திரங்கள்

23. (i) கழிவுப்பொருட்களை மீள உபயோகிக்கின்ற அத்துடன் மீள்சுழற்சி செய்கின்ற எவரேனுமொரு நபர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்வாராயின் அவருக்கு சபையினால் அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்படும்.

(அ) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகளின் பிரகாரம் நகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அல்லது ஏனைய உள்ளூராட்சி நிறுவனப் பிரதேசமொன்றில் வியாபாரமொன்றை நடத்திச் செல்லல்.

(ஆ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி வழங்கப்படும் சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று வைத்திருத்தல்.

(இ) சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களுக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கு ஏற்ற வகையில் அமைக்கப்படும் கழிவுப்பொருள் சேகரிப்பு நிலையங்களை வழங்குதல்.

(ஈ) சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் செயலாளரால் அங்கீகரிக்கப்படும் வகையிலும் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் சுகாதாரத்திற்குப் பங்கமேற்படாதவாறும் ஏற்றிச் செல்வதற்கான வாகனங்களை வழங்குதல்.

(உ) தொடர்புடைய நகர சபையின் எல்லைக்குள் நடத்திச் செல்லப்படும் சந்தர்ப்பமொன்றில் சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடிய வகையில் மேற்கூறிய கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கான கட்டணமொன்றை செயலாளருக்குச் செலுத்துவதன் மூலம் கழிவுப்பொருட்களை ஒழுங்குபடுத்தும்போது அல்லது செப்பனிடும்போது எஞ்சுகின்ற அல்லது நிராகரிக்கப்படுகின்ற அல்லது துணை உற்பத்திகளாக உருவாக்கப்படும் கழிவுப்பொருட்கள் சபையினால் அங்கீகரிக்கப்படும் வகையில் சபையிடம் பொறுப்பளிப்பதற்கு இணக்கம் தெரிவித்தல்.

(ii) சபையினால் அனுமதிப் பத்திரமொன்று வழங்குதலை நிராகரிக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் அல்லது மறுக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் விண்ணப்பதாரியினால் அதற்கான காரணங்கள் கேட்கப்பட்டால், அவ்வாறு நிராகரிக்கப்படுவதற்கான அல்லது மறுக்கப்படுவதற்கான காரணங்களை அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பம் கிடைத்து 30 நாட்களுக்குள் எழுத்துமூலமாக விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

(iii) அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் கால எல்லைக்குள் சேகரிப்பதற்கு அனுமதியளிக்கப்படும் கழிவுப்பொருள் வகை அல்லது வகைகள் சேகரிப்பதற்கு அனுமதியளிக்கப்படும் பிரதேசங்களும் ஏனைய தகுந்த நிபந்தனைகளும் செயலாளரால் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்படி செயல்புரியாத சந்தர்ப்பமொன்றில் இத்துணைவிதியின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுதல் வேண்டும்.

(v) (iv) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிப்பத்திரமொன்று இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பமொன்றில் எந்தவொரு நபரினாலும் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படுதலோ அல்லது பெற்றுக்கொள்ளப்படுதலோ கூடாது. அத்தகைய சந்தர்ப்பமொன்றில் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதை பொதுமக்களுக்கு அறிந்து கொள்வதற்காக செயலாளரால் தொடர்பு ஊடகங்கள் மூலம் போதியளவு விளம்பரம் செய்யப்படல் வேண்டும்.

### கழிவுப்பொருள் நீக்கம் செய்யப்படும் பிரதேசங்கள்

24. சபையினால் கழிவுப்பொருட்களை நீக்கம் செய்யும் பணிக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அனுமதி பெறாத நபர்கள் செல்லாமலும் அங்கு அலைந்து திரியாமலும் இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பிரதேசத்தில் ஏதாவதொரு பொருளை அல்லது நீக்கம் செய்யும் எதனையும் வைத்தல் குழப்புதல் நீக்கம் செய்தல் என்பன செய்யப்படாதிருத்தல் வேண்டும். விசேடமாக விதிக்கப்படும் நிபந்தனைகளின் கீழ் எந்தவொருவராலும் சபையினால் அனுமதியளிக்கப்பட்டாலன்றி சபையினால் காலத்துக்குக் காலம் தடையென விதிக்கப்படக்கூடிய ஏதாவதொரு கழிவுப்பொருள் வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

25. அங்கீகரிக்கப்படும் எவையேனும் நிபந்தனைகளுக்கிணங்க செயலாளரினதும் மத்திய சுற்றாடல் அதிகாரச் சபையினதும் எழுத்துமூலமான முன் அனுமதி பெற்றிருந்தால் மாத்திரமேயன்றி எந்தவொருவரும் நகர சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள ஏதாவதொரு காணியை அல்லது வசதியை, அதற்கு வெளியிடமொன்றில் உருவாகும் கழிவுப்பொருட்களை வைத்திருப்பதற்காக வழங்குதலோ அல்லது உபயோகித்தலோ கூடாது.

**ஏனைய**

25. (i) செயலாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவருக்கு நியாயமான அனைத்து நேரங்களிலும் ஏதாவதொரு மனையிடத்திற்கு உட்பிரவேசிப்பதற்கும் அதன் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அத்துணைவிதியின் ஏற்பாடுகளின்படி செயல்புரிகின்றாரா என்பதைப் பரிசோதிப்பதற்கு அதிகாரமிருக்கும்.

(ii) அந்த மனையிடத்தின் உரிமையாளரால், பொறுப்பாளரால், முகாமையாளரால் அல்லது அதில் வசிப்பவர்களால் அல்லது அதில் சேவையாற்றுகின்ற ஒருவரால் செயலாளரிடம் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடம் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் கீழ் ஆணையாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு தமது அதிகாரங்களை பிரயோகிக்கும்போது எந்தவொருவராலும் தடைகள் ஏற்படுத்தப்படாதிருத்தல் வேண்டும்.

27. சபையினால் காலத்துக்குக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களின்படி இத்துணைவிதிகளைச் செயற்படுத்தும் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு ஊக்குவிப்புப் படிகள் கொடுக்கப்படலாம்.

28. இத்துணைவிதியின் ஏதாவதொரு ஏற்பாட்டை மீறும் ஒருவர் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாவார்.

**பொருள் கூறல்**

29. இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பாட்டலன்றி ;

"கழிவுப்பொருட்கள் அல்லது திண்மக் கழிவுப்பொருட்கள்" என்பது அவற்றை நீக்கம் செய்த நபருக்கு உபயோக மதிப்பற்ற பொருளொன்றைப் பொருட்படுத்துவதுடன் சருகுகள், குப்பைகள், பாதைகளைச் சுத்தப்படுத்தும்போது ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள், தூசு, மண், சேறு மற்றும் சாம்பல் ஆகியவற்றைப் பொருட்படுத்தும்.

"உணவுக் கழிவுப்பொருட்கள்" என்பது மனித உபயோகத்திற்குத் தகாத இறைச்சி, மீன், கோழியிறைச்சி, முட்டை, மரக்கறி, பழங்கள் மற்றும் ஏனைய உணவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள்" என்பது பொதுமக்களின் சுகாதாரத்திற்கு அல்லது சுற்றாடலுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய, விஷமுள்ள, எரியக்கூடிய, மீள்தாக்கம் ஏற்படுத்தக்கூடிய, நோய்களைப் பரப்பக்கூடிய, கதிர்வீச்சுத் தன்மை கொண்ட கழிவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"சேகரித்தல்" என்பது அதிகாரம் பெற்ற சேகரிப்பாளர் ஒருவரால் அல்லது நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் ஒருவரால் மீள்சுழற்சி செய்யப்படுதல், ஒழுங்கு செய்யப்படுதல், செப்பனிடப்படுதல் அல்லது நீக்கம் செய்யப்படும் வசதிகளுக்காக கொண்டு செல்வதற்கு கழிவுப்பொருட்களைச் சேகரித்தலைப் பொருட்படுத்தும்.

"கொம்போஸ்ட்" என்பது சேதனக் கழிவுப்பொருட்கள் நுண்ணுயிர்களின் சீரணிப்பிற்கு இலக்கான பின்பு கிடைக்கப்பெறும் இறுதி உற்பத்தியைப் பொருட்படுத்தும். அது மண்ணின் தரக்காப்பொன்றாக செயற்படக்கூடிய ஹியுமஸ் வகையொன்றாகும்.

"செயலாளர்" என்பது நகர சபையின் அதிகாரப் பிரதேசம் தொடர்பிலாகும்போது நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் அந்த நகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்காக ஸ்தாபிக்கப்பட்ட மாநகர சபையின் செயலாளரைப் பொருட்படுத்துவதுடன் அந்த நகர சபையின் செயலாளர் தொடர்பில் பதில் கடமை புரிவதற்காக நியமனம் செய்யப்பட்ட நபரொருவரையும் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் செயலளாரின் அதிகாரங்கள், கடமைகள் அல்லது பணிகளைச் செயற்படுத்துவதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட மேற்கூறிய சபையின் எவரேனுமொரு உத்தியோகத்தரைப் பொருட்படுத்துவதுடன் அந்த உத்தியோகத்தருக்கு அந்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அளவுக்கு எனவும் பொருட்படுத்தும்.

"களஞ்சியப்படுத்தல்" ஓர் உரிமையாளரின் அல்லது வசிப்பாளரின் மனையிடத்திற்குள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொதுச்சேகரிப்பு நிலையமொன்றில் கழிவுப்பொருட்களை வைத்தல் சேமித்து வைத்தல் என்பனவற்றைப் பொருட்படுத்தும்.

"கட்டணம்" என்பது சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஏதாவதொரு கட்டணத்தைப் பொருட்படுத்தும்.

"வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்கள்" வீட்டுத் தோட்டமொன்றில் அமைந்துள்ள மரங்கள் செடி கொடிகளிலிருந்து நீங்கும் தாவரப் பகுதிகள் மற்றும் வீட்டுத் தோட்டத்திலிருந்து நீக்கம் செய்யப்படும் கல், மண் என்பனவற்றைப் பொருட்படுத்தும்.

"நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள்" என்பது நுண்ணுயிர்களால் உக்குவிக்கப்படக்கூடிய கழிவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"பொது இடம்" என்பது மைதானம், பொதுக் காணி, வீதியோரப் பாதுகாப்புக் காணி, விளையாட்டு மைதானம், பொதுக் கட்டிடம், மயானம் பஸ்நிலையம், புகையிரத நிலையம், ஆறு, ஓடை, சிறு குளம், நீர்த்தேக்கம், வாவி, தடாகம், கடலேரி, கிளையாறு, நீர்ப்பாதை, கடல் கடற்கரை அல்லது பொதுமக்களால் பொதுவில் உபயோகிக்கப்படுகின்ற இடமொன்றைப் பொருட்படுத்தும்.

"மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருட்கள்" மேலும் கழிவுப்பொருளாக அறிமுகப்படுத்திக்கொள்ள இயலாதவாறு அதன் உருவத்தை மாற்றியமைத்து புதிய உபயோகப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உபயோகிக்கக்கூடிய கழிவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"மீள் உபயோகிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள்" என்பது கழுவுதல் மூலம், கிருமியளித்தல் மூலம் அல்லது ஏனையவொரு முறையில் சுத்தப்படுத்தப்பட்ட பின்பு உபயோகிக்கக்கூடிய கழிவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"ஏற்றிச் செல்லல்" என்பது மனித, விலங்கு அல்லது பொறியொன்றின் சக்தியைப் பயன்படுத்தி ஏதாவதொரு கொண்டு செல்லும் முறையை உபயோகித்து கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் இடத்திலிருந்து அவற்றை ஒழுங்கு செய்வதற்காக, செப்பமிடுவதற்காக அல்லது நீக்கம் செய்வதற்காக குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டு செல்வதைப் பொருட்படுத்தும்.

"தொட்டி/பாத்திரங்கள் அல்லது ஏனைய கொள்கலன்கள்" என்பது இத்துணைவிதியில் காட்டப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்கும் வகையில் கழிவுப்பொருட்களை களஞ்சியப்படுத்தல், நீக்கம் செய்தல், சேகரித்தல், ஏற்றிச் செல்லல் ஆகிய பணிகளுக்காக உபயோகிக்கும் ஏதாவதொரு தொட்டியை, பாத்திரத்தை, உறையை, பையொன்றை அல்லது ஏனையவொரு கொள்கலனைப் பொருட்படுத்தும்.

"அதிகாரம்பெற்ற சேகரிப்பாளர்" என்பது கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்காக அல்லது அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக செயலாளரிடமிருந்து அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொண்டுள்ள நபரொருவரைப் பொருட்படுத்தும்.

"அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்" இத்துணைவிதியின் கீழான அரச பணிகளை நிறைவேற்றுவதற்காக அல்லது நடத்திச் செல்வதற்காக செயலாளரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவரைப் பொருட்படுத்தும்.

"நீக்கம் செய்தல்" என்பது மீள உபயோகிக்கப்படாத, மீள்சுழற்சி செய்யப்படாத, ஒழுங்கு செய்யப்படாத, செப்பமிடப்படாத அனைத்து கழிவுப்பொருட்களும் நிரந்தரமாக வைத்திருப்பதற்குக் கருதப்படும் காணியொன்றின் மேற்பரப்பில் அல்லது உட்பரப்பில் வைத்தலைப் பொருட்படுத்தும்.

"மாற்றும் இடம்" என்பது சபையினால் இப்பணிக்காக விதித்துரைக்கப்படும் இடமொன்றைப் பொருட்படுத்துவதுடன் அவ்விடத்திலிருந்து மீள்சுழற்சி செய்யப்படுகின்ற ஒழுங்கு செய்யப்படுகின்ற செப்பமிடப்படுகின்ற அல்லது நீக்கம் செய்யப்படுகின்ற ஏதாவதொரு வசதியைக் கொண்ட இடத்திற்குக் கழிவுப்பொருட்களைக் கொண்டு செல்லும் வினைத்திறனை மேம்படுத்தும் பணிக்காக கழிவுப்பொருட்களை மிகச்சிறிய வாகனங்களிலிருந்து மிகப்பெரிய வாகனங்களுக்கு மாற்றம் செய்தலும் அங்கு நடைபெறும்.

"நபர்" என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத கம்பனியொன்றை அல்லது ஆட்கள் சங்கமொன்றை அல்லது ஆட்கள் குழுவொன்றைப் பொருட்படுத்தும்.

"நகர சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர்" என்பது தொட்டிகளிலிருந்தும் கொள்கலன்களிலிருந்தும் கழிவுப்பொருட்களை கூட்டித் துடைத்துவிடுதல், சேகரித்தல், பெற்றுக்கொள்ளல் அல்லது நீக்கம் செய்தல் ஆகிய பணிகளுக்காக சபையினால் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஓர் ஊழியரை அல்லது இப்பணியை நிறைவேற்றுவதற்காகச் சபையுடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள ஒருவரைப் பொருட்படுத்தும்.

"வெவ்வேறாக்குதல்" என்பது இத்துணைவிதியில் பிரயோகித்துள்ள வர்க்கங்களின்படி கழிவுப்பொருட்களை வெவ்வேறாகத் தேர்ந்தெடுத்தலைப் பொருட்படுத்தும்.

"ஒழுங்குபடுத்தல்" என்பது கழிவுப்பொருட்களை பிரயோசனமானவொரு உற்பத்திப் பொருளாக மாற்றும் செயற்பாட்டைப் பொருட்படுத்தும்.

"சபை" என்பது ............................ நகர சபையைப் பொருட்படுத்தும்.

"நகர சபையின் அதிகாரப் பிரதேசம்" என்பது மா நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 255) அதிகாரத்தின்கீழ் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசத்தைப் பொருட்படுத்தும்.

"சுகாதாரப் பாதுகாப்பான நில நிரப்பல்" அதனுடன் சார்ந்த சமூக, சுகாதார மற்றும் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைவடையச் செய்வதற்காக இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கு இணங்கும் வகையில் கழிவுப்பொருட்களை இறுதியாக நிலப்பரப்பொன்றிற்கு நீக்கம் செய்தலைப் பொருட்படுத்தும்.

"உரிமையாளர் அல்லது வசிப்பாளர்" என்பது மனையிடத்தின் உரிமையாளர் அல்லது உரிமையாளருக்குப் பதிலாக அட்டோர்னி அதிகாரம் பெற்றவொருவரை அல்லது உரிமையாளரால் தமது தொழிலை அல்லது தொழிற்சாலையை அல்லது தோட்டத்தை முகாமைத்துவம் செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதியொருவரை அல்லது பொறுப்பாளரை அல்லது கூலி அடிப்படையில் பெற்றுக்கொண்ட ஒருவரைப் பொருட்படுத்துவதுடன் ஏனையவொரு நபரின் பணிப்புகளின்கீழ் செயல்புரியும் முகாமையாளர் ஒருவரையும் பொருட்படுத்தும்.

*6-771*

---

**பிரதேச சபை அதிகாரப் பிரதேசங்களில் திண்மக் கழிவுப் பொருட்களை முகாமை செய்தல் தொடர்பான துணை விதி**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சிமன்ற (அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் என்ற வகையில் என்னால் ஒழுங்குசெய்யப்பட்ட கீழ்க்காட்டப்பட்டுள்ள வரைவுத் துணை விதிகள் மேற்கூறிய பிரிவின் கீழ் இவ்வாறு பிரகடனம் செய்யப்படுகிறது.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122 ஆம் பிரிவுடன் வாசிக்க வேண்டிய அச்சட்டத்தின் 93 ஆம் பிரிவு மற்றும் 126 ஆம் பிரிவின் 9 ஆம் உட்பிரிவின் (அ), (இ) ஆகிய பந்திகளின் மூலம் திண்மக் கழிவுப்பொருட்களை முகாமை செய்தல் தொடர்பான விதிகளை விதிப்பதற்கு பிரதேச சபைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகளை ஏற்றுக்கொள்வதற்காக சப்பிரகமுவ மாகாணத்தின் பிரதேச சபைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

மஹீபால ஹேரத்,
உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்,
சப்பிரகமுவ மாகாணம்.

2013.06.06.

**பொது**

1. இத்துணைவிதி திண்மக் கழிவுப்பொருட்களை முகாமை செய்தல் தொடர்பான துணைவிதி என அறிமுகப்படுத்தப்படும்.

2. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள பிரசித்திபெற்ற இடங்கள், பிரத்தியேக மனையிடங்கள் வீதிகள், பாதைகள், ஆகிய இடங்களில் சேரும் திண்மக் கழிவுப்பொருட்களைப் பிரித்தெடுத்தல், களஞ்சியப்படுத்தல், சேகரித்தல் கொண்டு செல்லல் அத்துடன் அவற்றை மாற்றும் இடங்களைச் செயற்படுத்தல் மற்றும் அவ்விடங்களை நடாத்திச் செல்லல், ஒழுங்கு செய்தல், செப்பமிடுதல் மற்றும் நீக்கம் செய்தல் ஆகிய செயல்கள் தொடர்பிலான ஒழுங்குமுறைகள், மேற்பார்வை சோதனை மற்றும் நிருவாகம் ஆகிய பணிகளுக்காக இத்துணை விதிகள் விதிக்கப்படுகின்றன.

3. பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள ஏதாவதொரு மனையிடத்தின் ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது அதில் வசிப்பவராலும் தமது சுற்றாடல் குப்பைக்கூளங்களற்ற சுகாதாரப் பாதுகாப்பான சிறந்த நிலையில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

4. பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள ஏதாவதொரு மனையிடத்தின் உரிமையாளரால் அல்லது அதில் வசிப்பவரால் தமது மனையிடத்தில் உண்டாகும் கழிவுப் பொருட்களைச் சேகரித்தல், பிரித்தெடுத்தல், களஞ்சியப்படுத்தல், எடுத்துச் செல்லல் மற்றும் நீக்கம் செய்தல் ஆகிய பணிகள் செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்யப்படாவிட்டால் இத்துணைவிதியின் ஏற்பாடுகளுக்கிணங்க அப்பணிகளைச் செய்விப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5. (i) மனையிடமொன்றின் ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது வசிப்பாளராலும் அவரது மனையிடத்தில் உண்டாகின்ற திண்மக் கழிவுப் பொருட்களை கூட்டித் துடைத்து அல்லது ஏனையவொரு முறையை உபயோகித்து தினந்தோறும் அல்லது அதனிலும் குறைந்த காலஎல்லையொன்றுக்குள் ஒன்றுசேர்க்கப்படல் வேண்டும்.

(ii) ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது வசிப்பாளராலும் மேற்கூறிய உட்பிரிவின்படி ஒன்றுசேர்க்கப்பட்ட கழிவுப்பொருட்கள் இலக்கம் 08 தொடக்கம் 20 வரையுள்ள துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க வெவ்வேறாகப் பிரிக்கப்படல் வேண்டும். இல்லாவிட்டால் அவ்வாறு செய்விப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(iii) உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் கழிவுப் பொருட்கள் களஞ்சியப்படுத்துவதற்காக உபயோகிக்கப்படும் ஏதாவதொரு பை உறை, பாத்திரம், அல்லது ஏனையவொரு கொள்கலன் இலக்கம் 08 தொடக்கம் 20 வரையுள்ள ஏற்பாடுகளின்கீழ் ஒன்றுசேர்க்கப்படுவதற்காக சிறந்த முறையில் பேணிச் செல்லப்படல் வேண்டும். அவை கிழிந்து துவாரமேற்பட்டு உடைந்து அல்லது தொடர்ந்து ஈரலிப்பான நிலையில் இருப்பதன் காரணமாக நெகிழ்வடைந்து அல்லது வேறு ஏதாவதொரு காரணத்தினால் உடைந்து விழுந்துவிடக்கூடிய அல்லது பழுதடையக்கூடிய நிலையில் இருக்குமாயின் அது கழிவுப் பொருட்களைச் சேகரிப்பதற்கு உபயோகிக்கப்படாதிருத்தல் வேண்டும். நியாயமான முறையில் அதை உபயோகிக்கும்போது அவ்வாறு ஏற்பட்டிருந்தால் அதேபோன்று உரிமையாளர் அல்லது வசிப்பாளர் எதிர்பார்ப்பவர்களாக இருப்பார்களாயின் சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் ஒரு பகுதி சலுகையாக அல்லது முழுமையாக சலுகை அடிப்படையில் அத்தகைய கொள்கலன்கள் சபையினாலேயே வழங்கப்படலாம்.

(iv) 1 ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஒன்றுசேர்க்கப்பட்ட கழிவுப்பொருட்கள் சபையினால் காலத்துக்குக் காலம் அறிவித்தல் வெளியிடப்படும் வகையில் சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் செயற்படுகின்ற கழிவுப் பொருட்களைச் சேகரிக்கும் முறைப்படிக்கும் நேரசூசிக்கும் இணங்கும் வகையில் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் கழிவுப் பொருட்கள் அகற்றப்படுதல் வேண்டும்.

(v) உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் வீட்டுவாசிகளின் விருந்தினர்களினதும் அயலவர்களினதும் சுகாதாரத்திற்கு அல்லது அப்பிரதேசத்தின் சுகாதாரப் பாதுகாப்பிற்குப் பங்கமேற்படும் வகையில் அல்லது அபாயகரமான முறையில் கழிவுப் பொருட்கள் ஒன்றுசேர்க்கப்படுதலோ களஞ்சியப்படுத்தப்படுதலோ அல்லது நீக்கம் செய்யப்படுதலோ கூடாது.

6.(i) எந்தவொருவராலும் வீதியொன்றுக்கு, தெருவொன்றுக்கு, பாதையொன்றுக்கு, ஒடுக்கமான பாதையொன்றுக்கு அல்லது ஏனையவொரு பொது இடத்துக்கு அல்லது மனையிடமொன்றுக்கு அல்லது வடிகாலொன்றுக்கு அல்லது நீர்ப்பாதையொன்றுக்கு அல்லது நீர்தேக்கமொன்றுக்க அல்லது கடலுக்கு கழிவுப் பொருட்கள் போடப்படாதிருத்தல் வேண்டும்.

(ii) எந்தவொருவராலும் சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் திறந்த நிலப்பரப்பொன்றில் வைத்து சுற்றாடலுக்குப் பங்கமேற்படும் வகையில் கழிவுப் பொருட்கள் எரிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(iii) எந்தவொரு உரிமையாளரும் அல்லது வசிப்பாளரும் 7ஆம் இலக்கத் துணைவிதியின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏதாவதொரு கழிவுப்பொருள் வர்க்கத்தை விடுவித்தல், செப்பமிடல், ஒழுங்குபடுத்தல் அல்லது நீக்கம் செய்தல் ஆகிய பணிகளுக்காக அனுமதியைப் பெற்றுக்கொள்ள நேரிடும் சந்தர்ப்பமொன்றில் அவ்வாறு அனுமதியைப்பெற இயலாதிருக்கும் போது அவர் அந்தக் கழிவுப் பொருட்களை உத்தரவுபெற்ற கழிவுப்பொருள் சேகரிக்கும் நபரொருவரிடம் கையளிக்கலாம்.

(iv) 7ஆம் இலக்கத் துணைவிதியின்கீழ் ஒழுங்கு செய்தல், செப்பமிடுதல் அல்லது நீக்கம் செய்தல் என்பன செய்யப்படாத கழிவுப் பொருட்கள் மேலே (III) இன் ஏற்பாடுகளின்கீழ் எவரேனுமொரு உத்தரவுபெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பவரொருவரால் சேகரிக்கப்பட்ட ஏதாவதொரு கழிவுப்பொருள் வர்க்கத்தை 08 தொடக்கம் 20 வரையிலான இலக்கங்களைக் கொண்ட துணைவிதிகளின் ஏற்பாடுகளுக்கிணங்க நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

7. (i) ஏதாவதொரு மனையிடத்தின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் தொடர்பிலேயே தவிர கழிவுப்பொருட்களை அந்த மனையிடத்திலேயே நீக்கம் செய்யப்படலாம்.:-

(அ) சபையினால் அத்தகைய கழிவுப்பொருட்கள் நீக்கம் செய்தலைத் தடைசெய்யப்பட்டுள்ள பிரதேசங்களில்
(ஆ) சபையினால் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள சில கழிவுப்பொருள் வர்க்கங்கள்

(ii) மனையிடமொன்றின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்குச் செயலாளரால் அனுமதியளிக்கப்பட்ட திட்டமொன்றிற்கும் தரத்திற்கும் இணங்க அமைக்கப்பட்ட தகன நிலையமொன்றில் அல்லது சூளையொன்றில் கழிவுப்பொருட்கள் எரிக்கப்படலாம். இல்லாவிட்டால் செயலாளரால் அனுமதியளிக்கப்பட்ட வகையில் கழிவுப் பொருட்களை செப்பமிடல், ஒழுங்கு செய்தல் அல்லது புதைத்து விடுதல் என்பன செய்யப்படலாம்.

(iii) எவரேனுமொரு உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் "கொம்போஸ்ட் பாத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக செயலாளரிடம் விண்ணப்பிக்கப்பட்டால் அந்த உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு அந்தக் கொம்போஸ் பாத்திரங்களைப் பேணிச் செல்வதற்கு போதியளவு இடவசதிகள் இருககுமாயின் செயலாளரால் அந்த கொம்போஸ்ட் பாத்திரங்களுக்கான மொத்தச் செலவின் ஒருபகுதியை அல்லது முழுமையான சலுகை அடிப்படையில் அந்த கொம்போஸ் பாத்திரங்கள் உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு வழங்கப்படும்.

(iv) உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் தமது மனையிடத்தில் சேரும் வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்கள் இயன்றளவு தூரத்திற்கு செயலாளரால் அங்கீகரிக்கப்படக்கூடிய வகையில் ஒழுங்கு செய்வதற்கான அல்லது செப்பமிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதேபோன்று மேற்கூறிய கழிவுப்பொருட்களுள் ஏதும் எஞ்சியிருப்பின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் கழிவுப்பொருட்களின் தன்மையைக் கவனத்திற்கொண்டு சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் குறிப்பிட்ட கட்டணத்தைச் செலுத்தி பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிப்பவரொருவருக்கு கையளிக்கப்படுதல் வேண்டும்.

(v) வீதியொன்றுக்கு அல்லது பாதையொன்றுக்கு அண்மையில் அமைந்துள்ள ஏதாவதொரு மரத்தை அல்லது அம்மரத்தின் ஒருபகுதியை வெட்டும் நபரொருவர் அதை வெட்டிய உடனே நீக்கம் செய்தல் வேண்டும். இல்லாவிட்டால் அதனை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் அவ்வாறு இல்லாவிட்டால் பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் கட்டணமொன்றைச் செலுத்தி பிரதேச சபையின் பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும்.

(vi) எந்தவொருவரும் அவரது கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும் ஏதாவதொரு விலங்கு, வீதியொன்றில் அல்லது பாதையொன்றில் அல்லது பொது இடமொன்றில் மலம் கழிப்பதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் அவ்வாறு மலம் கழித்தால் 08 தொடக்கம் 20 வரையிலான இலக்கங்களைக்கொண்ட துணைவிதிகளின்படி அதைச் சுத்தப்படுத்தி மலக்கழிவுகளை அகற்றுவது அந்நபரின் பொறுப்பாகும்.

(vii) எந்தவொருவராலும் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் எந்தவொரு வகையிலான கழிவுப்பொருளும் வாகனமொன்றிலிருந்து வீதியொன்றில் அல்லது பாதையொன்றில் அல்லது பொது இடமொன்றில் போடப்படாதிருத்தல் வேண்டும்.

(viii) வீடொன்றை அல்லது ஏதாவதொரு மனையிடத்தை நிர்மாணிப்பதற்காக அல்லது பழுதுபார்ப்பதற்காக விண்ணப்பிக்கும் ஒருவர் அவரது மனையிடத்தில் சேரும் திண்மக் கழிவுப்பொருட்கள் மற்றும் நீக்கம் செய்யும் கழிவுப்பொருட்கள் என்பனவற்றை செப்பமிடுகின்ற, ஒழுங்கு செய்கின்ற முறைகள் பற்றிய விபரங்களை அவரது விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

**வீட்டுச் சூழல்கள்**

8. (i) ஒவ்வொரு உரிமையாளரும் அல்லது வசிப்பாளரும் கூட்டித்துடைப்பதன் மூலம் அல்லது ஏனையவொரு முறையில் சேகரிக்கும் கழிவுப்பொருட்களைப் பின்வருமாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும் :-

(அ) உணவுக் கழிவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) விலங்குகளின் சடலங்கள், சடலங்களின் பகுதிகள் மற்றும் மலம் ;
(உ) மனையிடத்தைக் கூட்டித்துடைக்கும்போது சேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்

(ii) ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது வசிப்பாளராலும் மேற்கூறியவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் வெவ்வேறாகப் பைகளிலும் பாத்திரங்களிலும் அல்லது ஏனைய கொள்கலன்களிலும் இடப்படுதல் வேண்டும். அத்துடன் அவற்றை நீக்கம் செய்யப்படும்வரை அதற்கென ஒதுக்கப்பட்டுள்ளவொரு இடத்தில் வைக்கப்படுதலும் வேண்டும். உணவுக்கழிவுப் பொருட்கள் மற்றும் நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் என்பன ஈரலிப்பு ஒழுகாத மூலப்பொருட்களைக்கொண்டு தயாரிக்கப்பட்ட அத்துடன் எலிகள், கிருமிகள் மற்றும் ஏனைய பிராணிகள் உட்செல்லாதவாறு முறைப்படி மூடக்கூடிய கொள்கலன்களில் வைக்கப்படுதல் வேண்டும். விலங்குகளின் அழுகிய சடலப்பகுதிகள் அல்லது மலம் போன்ற கழிவுப்பொருட்கள் நீக்கப்படவேண்டிய கழிவுப் பொருட்கள் என்பனவற்றின் தன்மையைக் கவனத்திற்கொண்டு பிரதேச சபையின் அதிகாரப்பிரதேசத்திற்காக காலத்துக்குக் காலம் சபையினால தீர்மானிக்கப்படக்கூடிய கட்டணமொன்று செயலாளரிடம் செலுத்தப்படுவதன்மூலம் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிப்பவரொருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு உரிமையாளராலும் அல்லது வசிப்பாளராலும் (1) ஆம் பந்தியின் அ மற்றும் ஆ ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் உத்தரவுபெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரொருவரிடம் கையளிக்கப்படலாம். உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அவ்வாறு செய்யத் தவறும் சந்தர்ப்பத்தில் அவர் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்து ஏற்புடைய கழிவுப்பொருட்கள் பிரதேச சபையின் அதிகாரப் பிரசேதத்தில் கழவுப்பொருள் சேகரிக்கும் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும். இல்லாவிட்டால் ஒவ்வொரு வகையிலான கழிவுப்பொருட்களுக்காகவும் பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுள்ள தொட்டிகளில் அல்லது அத்தகைய கழிவுப்பொருட்களுக்காக சபையினால் வழங்கப்பட்டுள்ள தொட்டிகளில் அல்லது கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும்.

9. (i) வாடகை செலுத்திப் பல எண்ணிக்கையானோர்கள் வசிக்கும் பல்மாடிக் கட்டிடமொன்றின் ஒவ்வொரு உரிமையாளராலும் வசிப்பாளராலும் அவர்களது கழிவுப்பொட்கள் பின்வருமாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) விலங்குகளின் சடலங்கள், சடலங்களின் பகுதிகள் மற்றும் மலம் ;
(உ) மனையிடத்தைக் கூட்டித்துடைக்கும்போது சேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்

(ii) (i) ஆம் பந்தியில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடமொன்றின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் தவிசாளரால் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கும் அமைப்புக்களுக்கும் இணங்கும் வகையில் மூன்று வகைகளிலான பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன் அவற்றைச் சுத்தமாகவும் சுகாதாரப் பாதுகாப்பான நிலையிலும் பேணுதல் வேண்டும்.

(iii) (i) ஆம் உட்பிரிவில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடமொன்றின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் (ii) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்கத் தவறும் சந்தர்ப்பமொன்றில் செயலாளரால் அறிவிக்கப்படும் தினமொன்றில் அல்லது அதற்கு முன் ஏற்புடைய பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் வழங்குமாறு உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு பணிப்பிடுவதற்கான அதிகாரம் தவிசாளருக்கு இருக்கும். செயலாளரின் பணிப்புகளின்படி செயல்புரிவது உரிமையாளரின் அல்லது வசிப்பாளரின் கடமையாகும்.

(iv) கட்டிடத் தரையொன்றின் அல்லது மாடியொன்றின் உரிமையாளரால் வசிப்பாளரால் தேர்ந்தெடுத்துப் பிரிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் அவற்றிற்காக வைக்கப்பட்டுள்ள பாத்திரமொன்றுக்கு அல்லது கொள்கலனொன்றுக்கு இடப்படுதல் வேண்டும்.

(v) இத்துணை விதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் நீக்கம் செய்யப்படுவது அதிகாரம்பெற்ற சேகரிப்பாளரொருவரின் பணியாகும். அவ்வாறு நீக்கம் செய்யப்படாத ஏதாவதொரு கழிவுப்பொருள் (இ) மற்றும் (ஈ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளும் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிக்கும் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும்.

10. (i) பிரதேச சபையின் முன் அனுமதியைப் பெற்றுக்கொண்டு சேரிவாசிகளின் உபயோகத்திற்காக செயலாளரால் கழிவுப்பொருட் பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் இலவசமாக வழங்கப்படுவது சட்டரீதியானதாகும்.

(ii) ஒவ்வொரு சேரிவீட்டினதும் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் அவரது வசிப்பிடத்தில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வகையில் வெவ்வேறாகத் தேர்ந்தெடுத்து அவரது வசிப்பிடத்துக்குச் சமீபமாக வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப் பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்.

(iii) இத்துணைவிதியின் (ii) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை நீக்கம் செய்வதற்காக கழிவுப்பொருள் சேகரிக்கும் ஒருவருக்கு அனுமதியளிக்கும் அதிகாரம் செயலாளருக்கு இருக்கும்.

**சாப்புகள் மற்றும் அலுவலகங்கள்**

11. (i) சாப்பொன்றின் அல்லது அலுவலகமொன்றின் ஒவ்வொரு உரிமையாளராலும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களைப் பின்வருமாறு தேர்ந்து பிரித்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) விலங்குகளின் சடலங்கள், சடலங்களின் பகுதிகள் மற்றும் மலம் ;
(உ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) தேர்ந்தெடுத்து வேறாக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் நீக்கம் செய்யப்படும்வரை வெவ்வேறாகப் பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இட்டுத் தகுந்த இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படுதல் வேண்டும்.

(iii) சாப்பொன்றில் அல்லது அலுவலகமொன்றில் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் இத்துணைவிதியின் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம்.

(iv) மாடிகள் சிலவற்றைக் கொண்ட அல்லது மாடித்தரைகள் சிலவற்றைக்கொண்ட சாப்புகளின் அல்லது அலுவலகத் தொகுதியொன்றின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால், செயலாளரால் அங்கீகரிக்கப்படும் தரங்களுக்கு ஏற்புடையதாக அந்தச் சாப்பிலிருந்து அல்லது அலுவலகத்திலிருந்து தேர்ந்தெடுத்து வெவ்வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் சேகரிப்பதற்காக அல்லது சேர்த்து வைப்பதற்காக ஒவ்வொரு சாப்புக்காகவும் அல்லது அலுவலகத்துக்காகவும் தேவைக்கேற்ற எண்ணிக்கையான கழிவுப்பொருட் பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

(v) இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள சாப்பொன்றின் அல்லது அலுவலகமொன்றின் உரிமையாளரால் தேர்ந்து வெவ்வேறாகப் பிரிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும். இத்துணைவிதியின் (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிப்பதற்கான உரிமை அனைத்து உரிமையாளர்களுக்கும் வசிப்பாளர்களுக்கும் இருக்கும்.

(vi) அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரால் சேகரிக்கப்படாத, இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளும் (ii) ஆம் உட்பிரிவில் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகையொன்று, சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடிய வகையில் கட்டணமொன்று தவிசாளருக்குச் செலுத்துவதன் மூலம் ஏற்புடையவாறு உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் பிரதேச சபையின் அதிகாரப்பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம்.

(vii) அயலவர்களுக்கு அல்லது மேற்கூறிய சாப்பில் அல்லது அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் சுகாதாரத்திற்கு அல்லது சுகாதாரப் பாதுகாப்பிற்கு எவ்வித பங்கமும் ஏற்படாதவாறு கழிவுப்பொருள் அகற்றுதலும் இத்துணைவிதியில் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்டுள்ள கழிவுப்பொருட் பாத்திரங்கள் மற்றும் கொள்கலன்களைப் பேணுதலும் குறிப்பிடப்பட்ட சாப்பின் அல்லது அலுவலகத்தின் அனைத்து உரிமையாளர்களினதும் பொறுப்பாகும்.

(viii) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி,

"அலுவலகம்" என்பதற்கு 1954 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க சாப்புக்கள் மற்றும் அலுவலகச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் தொடர்பான சட்டத்தில் (129 ஆம் அத்தியாயம்) கொடுக்கப்பட்டுள்ள பொருளே உள்ளது.

"வசிப்பாளர்" என்னும் சொல் சாப்பொன்றின் உரிமையாளரை அல்லது வசிப்பாளரை அல்லது வியாபாரமொன்றின் அல்லது அலுவலகமொன்றின் பொறுப்பாளரைப் பொருட்படுத்தும்.

"சாப்பு" என்னும் சொல் தொகையாக அல்லது சில்லறையாக விற்பனை செய்வதற்காக பொருட்களை வைத்துள்ள இடமொன்றைப் பொருட்படுத்துவதுடன் உணவுப் பொருட்களை விற்பனைக்காக வைத்துள்ள இடமொன்றையும் முடிதிருத்துமிடமொன்றை அல்லது உடலழகூட்டும் சலூன் ஒன்றை நடாத்திச்செல்லும் இடமொன்றையும் பொருட்படுத்தும்.

**ஹோட்டல்கள்**

12. எவரேனுமொரு ஹோட்டல்காரரால் அல்லது அவரால் எழுத்துமூலமாக அதிகாரமளிக்கப்பட்ட நபரொருவரால் தமது சுற்றாடலில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுத்து வெவ்வேறாக வைக்கப்படல் வேண்டும். அல்லது அவ்வாறு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) ஒவ்வொரு ஹோட்டல்காரராலும் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒருவராலும் தேர்ந்து வெவ்வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் நீக்கம் செய்யப்படும்வரை வெவ்வேறாகப் பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இட்டு தகுந்த இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படல் வேண்டும்.

(iii) ஒவ்வொரு ஹோட்டல்காரராலும் அல்லது அவரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரால், ஈக்கள், எலிகள் அல்லது ஏனைய பிராணிகள் உட்செல்லாதவாறு அனைத்து உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் பிளாஸ்டிக் அல்லது உலோகப் பொருட்களால் அமைக்கப்பட்ட அத்துடன் மூடியொன்றினால் பாதுகாப்பாக மூடப்பட்ட பாத்திரமொன்றில் அல்லது ஏனையவொரு கொள்கலனில் வைக்கப்படுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரமளிக்கப்பட்ட கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம்.

(v) இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவின்கீழ் கையளிக்கப்படாத எவையேனும் கழிவுப்பொருட்கள் மற்றும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் என்பனவற்றின் தன்மைகளைக் கவனத்திற்கொண்டு பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் கட்டணமொன்று உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் செயலாளருக்குச் செலுத்தப்படுவதன் மூலம் பிரதேச சபையின் அதிகாரப்பிரதேசத்தில் கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் ஒருவரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

(vi) இத்துணைவிதிகளின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி, ஹோட்டல் என்பது நித்திரைகொள்ளும் வசதிகளுடனான அத்துடன் அத்தகைய வசதிகளின்றி பணம் செலுத்துவதன் மூலம் உபயோகத்திற்காக உணவுப்பொருட்கள் மற்றும் மதுபான வகைகளை வழங்கும் இடமொன்றைப் பொருட்படுத்தும். அதற்கு சிற்றுண்டிச்சாலை, விருந்தினர் விடுதி தங்குமிடம் வாடிவீடு யாத்திரிகளுக்கான ஓய்வு மண்டபம் சோற்றுக்கடை அல்லது ஹோட்டல் என்பனவற்றுள் ஒன்றுக்குச் சமனான வகையில் வியாபாரமொன்றை நடத்திச் செல்லும் ஏனைய ஏதாவதொரு நிறுவனமொன்றையும் பொருட்படுத்தும்.

**மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகள் விற்பனை நிலையங்கள்**

*13.* (i) மரக்கறி அல்லது பழவகைகளை விற்பனை செய்யும் ஒவ்வொரு விற்பனை நிலையத்தினதும் உரிமையாளரால் அல்லது அந்த விற்பனை நிலையத்தின் பொறுப்பாளரால் தனது மனையிடத்தில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுக்கப்பட்டு வெவ்வேறாக்கப்படுதல் வேண்டும்.

(அ) மனித உபயோகத்திற்கு உகந்த நிலையில் இல்லாத பழங்கள் மற்றும் ஏனைய கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் ஈரலிப்புப் பொசியாமல் இருக்கும் வகையில் பிளாஸ்டிக் அல்லது உலோகத்தினால் அமைக்கப்பட்ட வேறானவொரு கொள்கலனில் வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது ஏனைய பிராணிகள் அந்த கொள்கலனிற்குள் உட்செல்லாதவாறு அடைத்துப் பாதுகாப்பாக வைக்கப்படுதல் வேண்டும். ஏனைய கழிவுப்பொருட்கள் ஏதாவதொரு தகுந்த பாத்திரமொன்றில் அல்லது கொள்கலனொன்றில் இடப்படுதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படல் வேண்டும். அவ்வாறு கையளிக்கப்படாத எவையேனும் கழிவுப்பொருள் இருப்பின் இத்துணைவிதியின். (i) ஆம் உட்பிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் சேர்த்து பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் கட்டணமொன்றை செயலாளருக்குச் செலுத்தி பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி மரக்கறி மற்றும் பழவகை விற்பனை நிலையம் என்பது மரக்கறி வகைகள் மற்றும் பழ வகைகளை களஞ்சியப்படுத்தியுள்ள அல்லது விற்பனைக்காக வைத்துள்ள இடமொன்றைப் பொருட்படுத்தும்.

**இறைச்சி, மீன், கோழியிறைச்சி அல்லது முட்டை வியாபாரக் குடில்கள்**

*14.* (i) இப்பணிக்காக செயலாளரால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரமொன்றின் பிரகாரம் அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கசாப்புக் கடைகள் சட்டத்தின்கீழ் அனுமதியளிக்கப்பட்டுள்ள விலங்குகள், பறவைகள் தவிர்ந்த ஏனையவொரு விலங்கையோ அல்லது பறவையையோ கொல்லப்படாதிருத்தல் வேண்டும்.

(ii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு அனுமதிப்பத்திரத்திலும் கொலைசெய்யப்படக்கூடிய விலங்கின் அல்லது பறவையின் வர்க்கம், கொலைக்களம் அமைக்கப்படவேண்டிய முறை, சுத்தப்படுத்துவதற்கான அத்துடன் மனித உபயோகத்திற்கு எடுக்கப்படாத இரத்தம் குடல் நடுமடிப்புகள் மற்றும் ஏனைய பகுதிகளை நீக்கம் செய்வதற்கான ஏற்புடைய நிபந்தனைகளும் பிரதேச சபையினால் தகுந்ததெனக் கருதப்படும் ஏனைய நிபந்தனைகளும் விசேடமாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்காக பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையில் கட்டணமொன்று செயலாளரால் அறவிடப்படுவதுடன் அக்கட்டணத்தை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் சந்தர்ப்பத்திலேயே செலுத்தல் வேண்டும்.

(iv) இறைச்சி கோழியிறைச்சி மீன் முட்டை என்பன விற்பனை செய்வதற்காகவுள்ள குடிலொன்றின் உரிமையாளர் அல்லது அவ்வியாபாரத்தை நடத்திச் செல்பவர்கள் அவர்களது கழிவுப்பொருட்களை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுத்து வெவ்வேறாக்குதல் வேண்டும்.

(அ) மனித உபயோகத்திற்கு உகந்த நிலையில் இல்லாத விலங்கு சடலங்கள் சடலப் பகுதிகள் அல்லது முட்டைகள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(v) வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது ஏனைய கொள்கலன்களில் வைக்கப்படுதல் வேண்டும். இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவின் (அ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்கள் ஈரலிப்பு கசியாதிருக்கும்படி கொள்கலனொன்றினுள் வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அக்கொள்கலனை ஈக்கள், எலிகள், கிருமிகள் அல்லது ஏனைய பிராணிகள் உட்செல்லாதவாறு நன்றாக மூடி பாதுகாப்பாக வைத்தல் வேண்டும்.

(vi) இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவின்கீழ் (அ), (ஆ) மற்றும் (இ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம். அவ்வாறு கையளிக்கப்படாத ஏதாவதொரு கழிவுப்பொருள் வகையொன்று இருப்பின் இத்துணைவிதியின் (iv) ஆம் உட்பிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளுடன் சேர்த்து பிரதேச சபையினால் காலத்துக்காலம் தீர்மானிக்கப்படக்கூடிய கட்டணமொன்று செலுத்துவதன் மூலம் துர்நாற்றம் பரவுவதற்குமுன் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

(vii) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி இறைச்சி, மீன், கோழியிறைச்சி, முட்டை என்பனவற்றை விற்பனை செய்யும் வியாபாரக் குடில் என்பது இப்பொருட்களை விற்பனை செய்வதற்காக களஞ்சியப்படுத்தியுள்ள அல்லது விற்பனை செய்வதற்காக வைத்துள்ள அல்லது திறந்து வைத்துள்ள இடமொன்றைப் பொருட்படுத்தும்.

**நடைப்பாதை வியாபாரம்**

15. (i) கழிவுப்பொருட்கள் ஒன்றுசேரும் வியாபாரமொன்றை நடத்திச் செல்லும் வியாபாரியொருவர், செயலாளரால் அங்கீகரிக்கப்படும் தரங்களுக்கு ஏற்புடையதாக கழிவுப்பொருட்களை வைப்பதற்காக பாத்திரமொன்றை அல்லது கொள்கலனொன்றை வைத்திருத்தல் வேண்டும். அத்தகைய எந்தவொரு வகையிலான கழிவுப்பொருளும் நடைப்பாதையில் அல்லது பெருந்தெருவில் அல்லது பொது இடமொன்றில் போடப்படாதிருத்தல் வேண்டும் :-

(ii) நடைபாதை வியாபாரியொருவரால், வாகனங்கள் மற்றும் பாதசாரிகளின் போக்குவரத்துக்குத் தடைகள் ஏற்படும் வகையில் பாத்திரமொன்று அல்லது கொள்கலனொன்று வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(iii) நடைபாதை வியாபாரிகள் ஒவ்வொருவராலும் அவர்களது வியாபாரத்தின் காரணமாக ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளவாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) உணவுக்கழிவுப்பொருட்கள் மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப் பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோகிக்கத்தக்க மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள்.

(iv) வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் வெவ்வேறான பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடப்படுதல் வேண்டும். இத்துணைவிதியின் (ii) ஆம் உட்பிரிவின் (அ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கிருமிகள், எலிகள் அல்லது ஏனைய பிராணிகள் உண்ணக்கூடிய கழிவுப்பொருட்கள் பாதுகாப்பான கொள்கலனொன்றினுள் வைக்கப்படுதல் வேண்டும். மேலதிகக் கழிவுப்பொருட்களைப் போடுவதற்குத் தேவையாகும் சந்தர்ப்பங்களைத் தவிர ஏனைய சந்தர்ப்பங்களில் அவற்றை மூடி வைத்தல் வேண்டும்.

(v) நடைப்பாதை வியாபாரிகள் ஒவ்வொருவராலும் இத்துணைவிதியின் (iii) ஆம் உட்பிரிவின்கீழ் (அ), (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் அல்லது இத்துணைவிதியின் (iii) ஆம் உட்பிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் சேர்த்து பிரதேச கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் தினந்தோறும் கையளிக்கப்படுதல் வேண்டும். வியாபாரம் நடத்தப்படாத சந்தர்ப்பங்களில் கழிவுப்பொருட் பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் நடைப்பாதையொன்றின் ஓரத்தில் அல்லது வீதியோரத்தில் வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(vi) ஒவ்வொரு நடைப்பாதை வியாபாரியும் கழிவுப்பொருட் பாத்திரங்களை அல்லது கழிவுப்பொருள் கொள்கலன்களை பிரதேச கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிப்பதற்குமுன் பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(vii) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி "நடைபாதை வியாபாரி" என்னும் சொற்கள் நடைபாதையில் அல்லது வீதியோரத்தில் பொருட்களை விற்பனை செய்கின்ற அல்லது சேவைகளை வழங்குகின்ற ஒருவரைப் பொருட்படுத்தும்.

**தொழிற்சாலைகள்**

16. ஒவ்வொரு தொழிற்சாலையினதும் உரிமையாளராலும் அல்லது உற்பத்தியாளராலும் தொழிற்சாலையின் சூழலில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களைச் சேகரித்து கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின்கீழ் (அ), (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படலாம். அவ்வாறு கையளிக்கப்படாத எவையேனும் கழிவுப்பொருள் இருப்பின் அவற்றை பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடிய கட்டணமொன்று செயலாளருக்குச் செலுத்தப்படுவதன் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iii) 1980 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின்கீழ் அவ்வியாபாரத்திற்காக வழங்கப்படும் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரப் பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்களை நீக்குதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி ''தொழிற்சாலை'' என்பதற்கு 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொருளே ஏற்புடையதாக இருக்கும்.

**தோண்டுதல், அமைத்தல் மற்றும் உடைத்தல் என்பன**

17. (i) ஏதாவதொரு வீதியை, பாதையை அல்லது பொது இடத்தைத் தோண்டும்போது உருவாக்கும் கழிவுப்பொருட்களைத் தகுந்தவாறு அச்சுற்றாடலிலிருந்து நீக்கும்வரை அச்சுற்றாடலுக்குள் அல்லது செயலாளரால் அங்கீகரிக்கப்படும் இடமொன்றில் களஞ்சியப்படுத்தல் வேண்டும்.

(ii) இத் துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்படுகின்ற கழிவுப்பொருட்கள் பிரதேச சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற வகையில் கட்டணமொன்றைச் செயலாளருக்குச் செலுத்துவதன் மூலம் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iii) சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி ;

''இத்துணைவிதியின் பணிகளுக்காக தோண்டுதல், அமைத்தல் மற்றும் உடைத்தல் ஆகிய செயல்களில் ஈடுபட்டுள்ள அனைத்து நபர்களும்'' என்பதற்கு தொழில் வழங்குபவரால் அந்தச் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள நபர்கள் எனப் பொருள்படும்.

''கழிவுப்பொருட்கள்'' என்பது கட்டிடங்களை அமைக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கான மூலப்பொருட்களை உபயோகிக்கும்போது உண்டாகும் மண், சேறு, தூசு மற்றும் கட்டிடமொன்றை உடைத்துவிடும்போது உண்டாகும் கழிவுப்பொருட்கள் என்பனவற்றையும் பொருட்படுத்தும்.

18. (i) வாயு, மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி வசதிகள் அல்லது ஏனைய பொதுவசதிகளை வழங்குவதற்காக ஏதாவதொரு வீதியை பாதையை அல்லது பொது இடமொன்றைத் தோண்டும்போது அப்பணியுடன் தொடர்புடைய எந்தவொரு நபரும் அப்பணிக்காக முன் அனுமதியைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(ii) மேலே (i) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதியளிப்பதற்குமுன் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக விண்ணப்பதாரியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் உத்தேச பணிமுடிவடைந்த பின்பு பாதையில் அல்லது பொது இடமென்றில் தற்காலிகமாக வைப்பதற்கு நேரிடப்படக்கூடிய கழிவுப்பொருட்கள் அத்துடன் விண்ணப்பதாரி அக்கழிவுப் பொருட்களை அகற்றுவதைத் தாமதம் செய்தால் அவற்றை அகற்றுவதற்காகத் தேவைப்படும் செலவினங்கள் என்பன தொடர்பில் செயலாளர் கவனத்திற் கொள்ளல் வேண்டும். அனுமதியளிப்பதற்கு முன் விண்ணப்பதாரி மதிப்பீட்டுச் செலவினங்களுக்குச் சமனான பணத்தொகையை வைப்புப் பணமாக செலுத்துதல் வேண்டும்.

(iii) எவரேனுமொருவர் கழிவுப்பொருட்கள் முழு அளவையையும் அல்லது அதன் ஒருபகுதியை அகற்றுவதற்குத் தவறினால் அல்லது நீக்கம் செய்தலைத் தாமதப்படுத்தினால் செயலாளரால் தீர்மானிக்கப்படும் வகையில் மேற்கூறிய கழிவுப்பொருட்கள் நீக்கம் செய்யப்படுதல் வேண்டும். அத்துடன் அப்பணிக்காக ஏற்படும் செலவினத்தை (ii) ஆம் உட்பிரிவின்கீழ் வைப்புச் செய்யப்படும் பணத்திற்குப் பிரதியீடு செய்தல் வேண்டும்.

**வைத்தியசாலைகள்**

19. (i) வைத்தியசாலையொன்றின் உரிமையாளரால் சுற்றாடலில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு வெவ்வேறாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இவ்வுட்பிரிவின் (இ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வர்க்கங்கள் தவிர்ந்த ஏனைய கழிவுப்பொருட்கள்;
(ஈ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள் ;
(உ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆம் உட்பிரிவின்கீழ் (அ) மற்றும் (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை வெவ்வேறான கொள்கலன்களில் இட்டு அவற்றை நீக்கம் செய்யும்வரை தகுந்த இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்தல் வேண்டும். (i) ஆம் உட்பிரிவின்கீழ் (இ) மற்றும் (ஈ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளுக்காக விசேடமாக அமைக்கப்பட்டுள்ள பாத்திரமொன்றில் அல்லது கொள்கலனொன்றில் அக்கழிவுப்பொருட்கள் இடப்படுதல் வேண்டும். அத்துடன் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஓர் இடத்தில் வைக்கப்படுதலும் வேண்டும். 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் இந்த வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரப்பத்திரத்தில் காட்டப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கும் வகையில் அத்தகைய கழிவுப்பொருட்களை நீக்கம்செய்தல் வேண்டும்.

(iii) (i) ஆம் உட்பிரிவில் (அ) மற்றும் (ஆ) ஆகிய பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம் பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் அல்லது பிரதேச சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படும் வகையிலான கட்டணமொன்று செலுத்தப்படுவதன் மூலம் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிக்கும் ஒருவரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியில் சொற்கள் தொடர்பில் வேறுபொருள் தேவைப்பட்டாலன்றி ;

"வைத்தியசாலை" என்பது ஏதாவதொரு நோயினால் அல்லது பலவீனம் காரணமாக பீடிக்கப்பட்ட நபர்கள் அல்லத விலங்குகள் பொறுப்பேற்கப்பட்டு அந்நபர்களை அல்லது விலங்குகளை பேணிப்பராமரித்து சிகிச்சைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக உபயோகிக்கும் அல்லது உபயோகிப்பதற்கு எதிர்பார்க்கும் ஏதாவதொரு மனையிடத்தை (எவ்வகையில் விபரிக்கப்பட்டபோதிலும்) பொருட்படுத்துவதுடன் கவனிப்பு இல்லம், சிகிச்சை நிலையம் மகப்பேற்று இல்லமும் மற்றும் விலங்கு வைத்தியசாலை/விலங்கு சிகிச்சை நிலையம் என்பனவற்றையும் பொருட்படுத்தும்.

"இடையூறு விளைவிக்கக்கூடிய பாதுகாப்புக் கழிவுப்பொருட்கள்" சிகிச்சை நிலையக் கழிவுப்பொருட்கள், உடல் உறுப்புப் பகுதிகள் தொப்புல்கொடிகள் பரவக்கூடிய மற்றும் மிகவும் பரவக்கூடிய கழிவுப்பொருட்கள் மற்றும் கூர்மையான முட்கள் என்பனவற்றைப் பொருட்படுத்தும்.

**ஏனைய மனையிடங்கள்**

20. (i) இல. 8 தொடக்கம் 19 வரையிலான துணைவிதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்படாத வியாபாரமொன்றை நடத்திச் செல்லுமொருவர் அல்லது பொதுமக்களின் ஒத்துழைப்புடன் பொது சமூக கலாசார அல்லது கல்விச் செயற்பாடொன்றை ஒழுங்கு செய்யும் அத்துடன் செயற்படுத்தும் எவரேனுமொரு நபர் அச்செயற்பாடு காரணமாக அல்லது அத்தகைய நிறுவனமொன்றை நடத்திச் செல்வதன் காரணமாக உண்டாகும் கழிவுப்பொருட்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுத்து வெவ்வேறாக வைக்கப்படுதல் வேண்டும்.

(அ) உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள் ;
(இ) இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள் ;
(ஈ) மனையிடத்தைக் கூட்டித் துடைக்கும்போது ஒன்றுசேரும் தூசு மற்றும் ஏனைய உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) (i) ஆம் உட்பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு செயற்பாட்டை ஒழுங்கு செய்யும் ஒருவர் அச்செயற்பாடு காரணமாக ஒன்றுசேரும் கழிவுப்பொட்களைச் சேகரிப்பதற்கு விசேடமாக வேலைத்திட்டமொன்றை மேற்கொள்வதற்காக அது தொடர்பில் நேரங்காலத்தோடு பிரதேச சபைக்கு அறிவித்தல் வேண்டும் ;

(iii) தேர்ந்தெடுத்து வெவ்வேறாக வைக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் நீக்கம் செய்யப்படும்வரை வெவ்வேறாகக் கொள்கலன்களில் இட்டு தகுந்த இடமொன்றில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும் ;

(iv) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) பகுதிகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் அல்லது (i) ஆம் உட்பிரிவின் (இ) பகுதியில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களுடன் சேர்த்து பிரதேச சபையினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படுகின்ற வகையில் கட்டணமொன்று செலுத்துவதன் மூலம் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும்.

**வீதிகள் மற்றும் பொது இடங்கள்**

21. (i) செயலாளரால் தவிசாளருடன் கலந்தாலோசிக்கப்பட்டு சபையின் அனுமதிக்கு இணங்கும் வகையில் பின்வரும் பணிகளைச் செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் நிருவகிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(அ) பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீதிகள், பொது இடங்கள் பாதைகள், பொது வடிகால்கள் நீர்ப்பாதைகள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பனவற்றைச் சுத்தமாகவும் சுகாதாரத்திற்கு பங்கமேற்படாதவாறும் நடத்திச்செல்லல்.

(ஆ) வீதிகள் மற்றும் பாதைகளின் இருபக்கங்களிலும் பொது இடங்களிலும் போதியளவு எண்ணிக்கையான தொட்டிகளை வழங்கி பொருத்துதல் மற்றும் பேணுதல்.

(இ) விழாக்கள் மற்றும் விசேட நிகழ்வுகள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அல்லது சபையினால் தீர்மானிக்கப்படும் நிகழ்வுச் சந்தர்ப்பங்களில் சபையினால் தீர்மானிக்கப்படும்போது அல்லது மேற்கூறிய விழாக்கள் அல்லது விசேட நிகழ்வுகள் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அமைப்பாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க பொது இடங்களில் பாவனைக்காக நடமாடும் கழிவுப்பொருட் தொட்டிகளை வழங்குதல் வேண்டும்.

(ஈ) வதிவிடப் பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ள பொதுக் கழிவுப்பொருட் தொட்டிகள் அல்லது கொள்கலன்கள் சுகாதாரத்திற்குப் பங்கமேற்படாத வகையில் பேணுதல் மற்றும் அவற்றின் அருகில் வசிப்பவர்களுக்கு அத்தொட்டிகள் காரணமாக இடையூறு ஏற்படுவதற்குமுன் அந்தத் தொட்டிகளிலும் கொள்கலன்களிலும் உள்ள கழிவுப்பொருட்களை நீக்கம் செய்தல் வேண்டும்.

(உ) முன்கூறிய பிரிவுகளில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பில் கிடைக்கப்பெறும் ஏதாவதொரு முறைப்பாட்டை எவ்வித தாமதமுமின்றி விசாரணை செய்து ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(ii) சபையினால் விசேடமாக கழிவுப்பொருட்களுக்காக வழங்கப்படும் ஏதாவதொரு தொட்டியில் ஈரலிப்பான, வியாபார, நிறுவன, தொழில்நுட்ப மற்றும் ஏனைய கழிவுப்பொருட்கள் எந்தவொருவராலும் இடப்படாதிருத்தல் வேண்டும்.

**பிரதேச சபையின் கடமைகள்**

22. (i) செயலாளரால் தவிசாளருடன் கலந்தாலோசிக்கப்பட்டு சபையின் அனுமதிக்கிணங்க பின்வரும் பணிகளைத் திட்டமிடல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிருவகித்தல் என்பன செய்யப்படலாம்.

(அ) கழிவுப்பொருட்களை மீள உபயோகிப்பதற்கும் மீள்சுழற்சி செய்வதற்கும் பொதுமக்களை ஊக்குவித்தல்.

(ஆ) கழிவுப்பொருட்களை வெவ்வேறாகத் தேர்ந்தெடுத்தல், சேகரித்தல், களஞ்சியப்படுத்தல், விடுவித்தல் மற்றும் நீக்கம் செய்தல் என்பன தொடர்பில் அறிவுறுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் அல்லது தொடர்பு ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்தல்.

(இ) மீள் உபயோக மற்றும் மீள்சுழற்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் சிறு தொழில் முயற்சியாளர்களுக்கும் வசதிகளை வழங்குதல்.

(ஈ) கழிவுப்பொருட்களைக் குறைக்கும், மீள, உபயோகிக்கும் அத்துடன் மீள்சுழற்சி செய்யும் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களுக்கு ஊக்கமளித்தல்.

(உ) கழிவுப்பொருட்களை நீக்கம் செய்யும் முறைகள் தொடர்பில் வித்தியாசமான படிவங்களை ஒழுங்கு செய்தல்.

(ஊ) பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அந்தந்தப் பிரதேசங்களில் சேரும் அந்தந்த வகையிலான கழிவுப்பொருட்களுக்காக சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் நாட்கள், நேரங்கள், முறைகள் மற்றும் கட்டணங்கள் என்பனவற்றைக் குறிப்பிட்டு கழிவுப்பொருள் சேகரிப்புப் பணித்திட்டக் குறிப்பொன்றை ஒழுங்கு செய்து அதில் அரசாங்க விடுமுறை நாட்களில் கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கான நிபந்தனைகளையும் அதில் குறிப்பிடுதல் வேண்டும்.

(எ) அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் வேறாகக் கையளிக்கப்படாத எவையேனும் ஒதுக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் இருப்பின் அவற்றை பணித்திட்டக் குறிப்பிற்கிணங்க குறிப்பிட்ட நேரத்தில் சேகரித்தல்.

(ஏ) அதிகாரம்பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளரிடம் கையளிக்கப்படாத அபாயகரமான கழிவுப்பொருட்களும் ஏனைய ஏதாவதொரு கழிவுப்பொருளும் இருப்பின் அவற்றை சுகாதாரப் பாதுகாப்பு முறைகளுக்கிணங்கும் வகையில் எடுத்துச் செல்லல்.

(ஐ) அபாயகரமான கழிவுப்பொருள் அல்லது செயலாளரால் தீர்மானிக்கப்படும் ஏனைய எவையேனும் கழிவுப்பொருட்கள் தவிர்ந்த வீதிகளைக் கூட்டித்துடைப்பதன் மூலமும் வடிகால்கள் மற்றும் பொது இடங்களைச் சுத்தம் செய்வதன் மூலமும் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்களும் பொதுத் தொட்டிகளில் ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள் மற்றும் சபையின் தொழிலாளர்களால் சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களும் அதிகாரம் பெற்ற கழிவுப்பொருள் சேகரிப்பாளர் ஒருவரிடம் கையளித்தல்.

(ஒ) உணவு மற்றும் ஏனைய நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள், மீள்உபயோகிக்கத்தக்க கழிவுப்பொருட்கள் என்பவற்றைச் செயல்முறையில் இயன்றளவு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஒழுங்கு செய்வதற்கும் செப்பமிடுவதற்கும் வேலைத்திட்டமொன்று உட்பட சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கழிவுப்பொருள் சேகரிப்பாளர்களால் சேகரிக்கப்படுகின்ற அத்துடன் வெவ்வேறாக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அந்த நடவடிக்கைகளிலிருந்து நிராகரிக்கப்படுகின்ற அத்துடன் அக்கழிவுப்பொருள் வகைகளின் ஏனைய மீதிக் கழிவுப்பொருட்கள் என்பன செயலாளரால் அங்கீகரிக்கப்படும் வகையில் நீக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

(ஓ) மத்திய சுற்றாடல் அதிகாரசபையுடன் கலந்துரையாடி செயலாளரால் அங்கீகரிக்கப்படும் வகையில் அபாயகரமான அனைத்துக் கழிவுப்பொருட்களையும் நீக்கம் செய்தல்.

(ஔ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரமொன்றை அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொள்ளல் மற்றும் அந்த அனுமதிப்பத்திரத்தில் அல்லது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் கழிவுப்பொருட்களை எரித்தல் அல்லது சுகாதாரப் பாதுகாப்பான நில நிரப்பிடமொன்றை நடத்திச்செல்லல்.

(க) கழிவுப்பொருட்களை கூட்டித்துடைத்தல், சேகரித்தல், தேர்ந்தெடுத்து வகைப்படுத்தல், எடுத்துச்செல்லல், மாற்றுதல் மற்றும் நீக்கம் செய்தல் ஆகிய பணிகளில் ஈடுபடும் ஒவ்வொரு ஊழியருக்கும் தகுந்த உடைகள், கைப்பாதுகாப்பு உறைகள், வாயுறை மற்றும் பாதணிகள் என்பனவற்றை வழங்குதல்.

(ங) வீடொன்றை அல்லது ஏனைய மனையிடமொன்றை நிர்மாணிப்பதற்காக அல்லது சீர்த்திருத்துவதற்காக சபையிடம் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்துள்ள சந்தர்ப்பமொன்றில் அந்த நிர்மாணிப்பு அல்லது சீர்திருத்தம் காரணமாக உண்டாகும் திண்மக் கழிவுப்பொருட்களை நீக்கம் செய்யும் முறையையும், குறிப்பிட்ட வேலையைத் தொடங்கும் கட்டத்திலும் அவ்வேலையைச் செய்கையிலும் அவ்வேலை முடிவடையும் போதும் அத்துடன் துண்டுக் கற்களை களஞ்சியப்படுத்துகின்ற, ஒழுங்கு செய்கின்ற மற்றும் நீக்கம் செய்கின்ற முறைகள் தொடர்பில் சோதனை செய்தல் மற்றும் அங்கீகரித்தல்.

(ச) சபையின் மனையிடத்திற்காக உள்ளக கழிவுப்பொருள் முகாமைத் திட்டமொன்றை அமைத்தல்.

(ஞ) 2000 ஆம் ஆண்டின் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பான தேசிய உபாயமுறை மற்றும் ஏற்புடைய சட்டத்திற்கிணங்க விபரமாக ஆகக்குறைந்தது ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டும் அடங்குகின்ற அத்துடன் இறுதியாக நீக்கம் செய்தல் தொடர்பில் எதிர்காலத்தில் 03 ஆண்டுகள் அடங்கும் வகையில் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவத் திட்டமொன்றை ஒழுங்கு செய்தல் மற்றும் செயற்படுத்தல், அத்திட்டம் செயற்படும் கால எல்லைக்கிணங்க நிரந்தர அடிப்படையில் சபையினால் வருடாந்தம் அங்கீகரிக்கப்படும்.

(ட) (அ) தொடக்கம் (ஞ) வரை காட்டப்பட்டுள்ள பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் பாதிப்பொன்று தொடர்பில் ஏதாவதொரு முறைப்பாடு கிடைப்பின் அதை மூன்று நாட்களுக்குள்ளும் அந்த முறைப்பாடு ஏனையவொரு காரணம் தொடர்பிலாயின் பதினான்கு நாட்களுக்குள்ளும் விசாரணை செய்தல் மற்றும் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**அனுமதிப்பத்திரங்கள்**

23. (i) கழிவுப்பொருட்களை மீள உபயோகிக்கின்ற அத்துடன் மீள்சுழற்சி செய்கின்ற எவரேனுமொரு நபர் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்வாராயின் அவருக்கு சபையினால் அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்படும்.

(அ) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகளின் பிரகாரம் பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அல்லது ஏனைய உள்ளூராட்சி நிறுவனப் பிரதேசமொன்றில் வியாபாரமொன்றை நடத்திச் செல்லல்.

(ஆ) 1980ம் ஆண்டின் 47ம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி வழங்கப்படும் சுற்றாடல் அனுமதிப்பத்திரமொன்று வைத்திருத்தல்.

(இ) சேகரிக்கப்படும் கழிவுப்பொருட்களுக்காக சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கு ஏற்ற வகையில் அமைக்கப்படும் கழிவுப்பொருள் சேகரிப்பு நிலையங்களை வழங்குதல்.

(ஈ) சேகரிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் செயலாளரால் அங்கீகரிக்கப்படும் வகையிலும் பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் சுகாதாரத்திற்குப் பங்கமேற்படாதவாறும் ஏற்றிச் செல்வதற்கான வாகனங்களை வழங்குதல்.

(உ) தொடர்புடைய பிரதேச சபையின் எல்லைக்குள் நடத்திச் செல்லப்படும் சந்தர்ப்பமொன்றில் சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடிய வகையில் மேற்கூறிய கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்கான கட்டணமொன்றை செயலாளருக்குச் செலுத்துவதன் மூலம் கழிவுப்பொருட்களை ஒழுங்குபடுத்தும்போது அல்லது செப்பனிடும்போது எஞ்சுகின்ற அல்லது நிராகரிக்கப்படுகின்ற அல்லது துணை உற்பத்திகளாக உருவாக்கப்படும் கழிவுப்பொருட்கள் சபையினால் அங்கீகரிக்கப்படும் வகையில் சபையிடம் பொறுப்பளிப்பதற்கு இணக்கம் தெரிவித்தல்.

(ii) சபையினால் அனுமதிப் பத்திரமொன்று வழங்குதலை நிராகரிக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் அல்லது மறுக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் விண்ணப்பதாரியினால் அதற்கான காரணங்கள் கேட்கப்பட்டால், அவ்வாறு நிராகரிக்கப்படுவதற்கான அல்லது மறுக்கப்படுவதற்கான காரணங்களை அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பம் கிடைத்து 30 நாட்களுக்குள் எழுத்துமூலமாக விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

(iii) அனுமதிப் பத்திரம் செல்லுபடியாகும் கால எல்லைக்குள் சேகரிப்பதற்கு அனுமதியளிக்கப்படும் கழிவுப் பொருள்வகை அல்லது வகைகள் சேகரிப்பதற்கு அனுமதியளிக்கப்படும் பிரதேசங்களும் ஏனைய தகுந்த நிபந்தனைகளும் செயலாளரால் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(iv) இத்துணைவிதியின் (i) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்படி செயல்புரியாத சந்தர்ப்பமொன்றில் இத்துணைவிதியின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுதல் வேண்டும்.

(v) (iv) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிப்பத்திரமொன்று இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பமொன்றில் எந்தவொரு நபரினாலும் கழிவுப்பொருட்கள் சேகரிக்கப்படுதலோ அல்லது பெற்றுக்கொள்ளப்படுதலோ கூடாது. அத்தகைய சந்தர்ப்பமொன்றில் அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டதை பொதுமக்களுக்கு அறிந்து கொள்வதற்காக செயலாளரால் தொடர்பு ஊடகங்கள் மூலம் போதியளவு விளம்பரம் செய்யப்படல் வேண்டும்.

**கழிவுப்பொருள் நீக்கம் செய்யப்படும் பிரதேசங்கள்**

24. சபையினால் கழிவுப்பொருட்களை நீக்கம் செய்யும் பணிக்காக ஒதுக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அனுமதி பெறாத நபர்கள் செல்லாமலும் அங்கு அலைந்து திரியாமலும் இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பிரதேசத்தில் ஏதாவதொரு பொருளை அல்லது நீக்கம் செய்யும் எதனையும் வைத்தல் குழப்புதல் நீக்கம் செய்தல் என்பன செய்யப்படாதிருத்தல் வேண்டும். விசேடமாக விதிக்கப்படும் நிபந்தனைகளின் கீழ் எந்தவொருவராலும் சபையினால் அனுமதியளிக்கப்பட்டாலன்றி சபையினால் காலத்துக்குக் காலம் தடையென விதிக்கப்படக்கூடிய ஏதாவதொரு கழிவுப்பொருள் வைக்கப்படாதிருத்தல் வேண்டும்.

25. அங்கீகரிக்கப்படும் எவையேனும் நிபந்தனைகளுக்கிணங்க தவிசாளரினதும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினதும் எழுத்துமூலமான முன் அனுமதி பெற்றிருந்தால் மாத்திரமேயன்றி எந்தவொருவரும் பிரதேச சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள ஏதாவதொரு காணியை அல்லது வசதியை, அதற்கு வெளியிடமொன்றில் உருவாகும் கழிவுப்பொருட்களை வைத்திருப்பதற்காக வழங்குதலோ அல்லது உபயோகித்தலோ கூடாது.

**ஏனைய**

26. (i) செயலாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவருக்கு நியாயமான அனைத்து நேரங்களிலும் ஏதாவதொரு மனையிடத்திற்கு உட்பிரவேசிப்பதற்கும் அதன் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அத்துணைவிதியின் ஏற்பாடுகளின்படி செயல்புரிகின்றாரா என்பதைப் பரிசோதிப்பதற்கு அதிகாரமிருக்கும்.

(ii) அந்த மனையிடத்தின் உரிமையாளரால், பொறுப்பாளரால், முகாமையாளரால் அல்லது அதில் வசிப்பவர்களால் அல்லது அதில் சேவையாற்றுகின்ற ஒருவரால் செயலாளரிடம் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடம் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iii) இத்துணைவிதியின் கீழ் செயலாளருக்கு அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு தமது அதிகாரங்களை பிரயோகிக்கும்போது எந்தவொருவராலும் தடைகள் ஏற்படுத்தப்படாதிருத்தல் வேண்டும்.

27. சபையினால் காலத்துக்குக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களின்படி இத்துணைவிதிகளைச் செயற்படுத்தும் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவருக்கு ஊக்குவிப்புப் படிகள் கொடுக்கப்படலாம்.

28. இத்துணைவிதியின் ஏதாவதொரு ஏற்பாட்டை மீறும் ஒருவர் பிரதேச சபைகள் சட்டத்தின்கீழ் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாவார்.

**பொருள் கூறல்**

26. இத்துணைவிதியின் பணிகளுக்காக சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி ;

"கழிவுப்பொருட்கள் அல்லது திண்மக் கழிவுப்பொருட்கள்" என்பது அவற்றை நீக்கம் செய்த நபருக்கு உபயோக மதிப்பற்ற பொருளொன்றைப் பொருட்படுத்துவதுடன் சருகுகள், குப்பைகள், பாதைகளைச் சுத்தப்படுத்தும்போது ஒன்றுசேரும் கழிவுப்பொருட்கள், தூசு, மண், சேறு மற்றும் சாம்பல் ஆகியவற்றைப் பொருட்படுத்தும்.

"உணவுக் கழிவுப்பொருட்கள்" என்பது மனித உபயோகத்திற்குத் தகாத இறைச்சி, மீன், கோழியிறைச்சி, முட்டை, மரக்கறி, பழங்கள் மற்றும் ஏனைய உணவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"இடையூறு விளைவிக்கக்கூடிய கழிவுப்பொருட்கள்" என்பது பொதுமக்களின் சுகாதாரத்திற்கு அல்லது சுற்றாடலுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய, விஷமுள்ள, எரியக்கூடிய, மீள்தாக்கம் ஏற்படுத்தக்கூடிய, நோய்களைப் பரப்பக்கூடிய, கதிர்வீச்சுத் தன்மை கொண்ட கழிவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"சேகரித்தல்" என்பது அதிகாரம் பெற்ற சேகரிப்பாளர் ஒருவரால் அல்லது பிரதேச சபையின் அதிகாரப் பிரசேத்தில் கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் ஒருவரால் மீள்சுழற்சி செய்யப்படுதல், ஒழுங்கு செய்யப்படுதல், செப்பனிடப்படுதல் அல்லது நீக்கம் செய்யப்படும் வசதிகளுக்காக கொண்டு செல்வதற்கு கழிவுப்பொருட்களைச் சேகரித்தலைப் பொருட்படுத்தும்.

"கொம்போஸ்ட்" என்பது சேதனக் கழிவுப்பொருட்கள் நுண்ணுயிர்களின் சீரணிப்பிற்கு இலக்கான பின்பு கிடைக்கப்பெறும் இறுதி உற்பத்தியைப் பொருட்படுத்தும். அது மண்ணின் தரக்காப்பொன்றாக செயற்படக்கூடிய ஹியுமஸ் வகையொன்றாகும்.

"செயலாளர்" என்பது பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசம் தொடர்பிலாகும்போது பிரதேச சபைகள் சட்டத்தின்கீழ் அந்த பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்காக ஸ்தாபிக்கப்பட்ட பிரதேச சபையின் செயலாளரைப் பொருட்படுத்துவதுடன் அந்த பிரதேச சபையின் செயலாளர் தொடர்பில் பதில் கடமை புரிவதற்காக நியமனம் செய்யப்பட்ட நபரொருவரையும் பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் செயலாளரின் அதிகாரங்கள், கடமைகள் அல்லது பணிகளைச் செயற்படுத்துவதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட மேற்கூறிய சபையின் எவரேனுமொரு உத்தியோகத்தரைப் பொருட்படுத்துவதுடன் அந்த உத்தியோகத்தருக்கு அந்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அளவுக்கு எனவும் பொருட்படுத்தும்.

"களஞ்சியப்படுத்தல்" ஓர் உரிமையாளரின் அல்லது வசிப்பாளரின் மனையிடத்திற்குள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பொதுச்சேகரிப்பு நிலையமொன்றில் கழிவுப்பொருட்களை வைத்தல் சேமித்து வைத்தல் என்பனவற்றைப் பொருட்படுத்தும்.

"கட்டணம்" என்பது சபையினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஏதாவதொரு கட்டணத்தைப் பொருட்படுத்தும்.

"வீட்டுத்தோட்டக் கழிவுப்பொருட்கள்" வீட்டுத் தோட்டமொன்றில் அமைந்துள்ள மரங்கள் செடி கொடிகளிலிருந்து நீங்கும் தாவரப் பகுதிகள் மற்றும் வீட்டுத் தோட்டத்திலிருந்து நீக்கம் செய்யப்படும் கல், மண் என்பனவற்றைப் பொருட்படுத்தும்.

"நுண்ணுயிர் சீரணிப்புக் கழிவுப்பொருட்கள்" என்பது நுண்ணுயிர்களால் உக்குவிக்கப்படக்கூடிய கழிவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"பொது இடம்" என்பது மைதானம், பொதுக் காணி, வீதியோரப் பாதுகாப்புக் காணி, விளையாட்டு மைதானம், பொதுக் கட்டிடம், மயானம் பஸ்நிலையம், புகையிரத நிலையம், ஆறு, ஓடை, சிறு குளம், நீர்த்தேக்கம், வாவி, தடாகம், கடலேரி, கிளையாறு, நீர்ப்பாதை, கடல் கடற்கரை அல்லது பொதுமக்களால் பொதுவில் உபயோகிக்கப்படுகின்ற இடமொன்றைப் பொருட்படுத்தும்.

"மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருட்கள்" மேலும் கழிவுப்பொருளாக அறிமுகப்படுத்திக்கொள்ள இயலாதவாறு அதன் உருவத்தை மாற்றியமைத்து புதிய உபயோகப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கு உபயோகிக்கக்கூடிய கழிவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"மீள் உபயோகிக்கூடிய கழிவுப்பொருட்கள்" என்பது கழுவுதல் மூலம், கிருமியளித்தல் மூலம் அல்லது ஏனையவொரு முறையில் சுத்தப்படுத்தப்பட்ட பின்பு உபயோகிக்கக்கூடிய கழிவுப்பொருட்களைப் பொருட்படுத்தும்.

"ஏற்றிச் செல்லல்" என்பது மனித, விலங்கு அல்லது பொறியொன்றின் சக்தியைப் பயன்படுத்தி ஏதாவதொரு கொண்டு செல்லும் முறையை உபயோகித்து கழிவுப்பொருட்களைச் சேகரிக்கும் இடத்திலிருந்து அவற்றை ஒழுங்கு செய்வதற்காக, செப்பமிடுவதற்காக அல்லது நீக்கம் செய்வதற்காக குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டு செல்வதைப் பொருட்படுத்தும்.

"தொட்டி/பாத்திரங்கள் அல்லது ஏனைய கொள்கலன்கள்" என்பது இத்துணைவிதியில் காட்டப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்கும் வகையில் கழிவுப்பொருட்களை களஞ்சியப்படுத்தல், நீக்கம் செய்தல், சேகரித்தல், ஏற்றிச் செல்லல் ஆகிய பணிகளுக்காக உபயோகிக்கும் ஏதாவதொரு தொட்டியை, பாத்திரத்தை, உறையை, பையொன்றை அல்லது ஏனையவொரு கொள்கலனைப் பொருட்படுத்தும்.

"அதிகாரம்பெற்ற சேகரிப்பாளர்" என்பது கழிவுப்பொருட்களைச் சேகரிப்பதற்காக அல்லது அவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக செயலாளரிடமிருந்து அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொண்டுள்ள நபரொருவரைப் பொருட்படுத்தும்.

"அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர்" இத்துணைவிதியின் கீழான அரச பணிகளை நிறைவேற்றுவதற்காக அல்லது நடத்திச் செல்வதற்காக செயலாளரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவரைப் பொருட்படுத்தும்.

"நீக்கம் செய்தல்" என்பது மீள உபயோகிக்கப்படாத, மீள்சுழற்சி செய்யப்படாத, ஒழுங்கு செய்யப்படாத, செப்பமிடப்படாத அனைத்து கழிவுப்பொருட்களும் நிரந்தரமாக வைத்திருப்பதற்குக் கருதப்படும் காணியொன்றின் மேற்பரப்பில் அல்லது உட்பரப்பில் வைத்தலைப் பொருட்படுத்தும்.

"மாற்று இடம்" என்பது சபையினால் இப்பணிக்காக விதித்துரைக்கப்படும் இடமொன்றைப் பொருட்படுத்துவதுடன் அவ்விடத்திலிருந்து மீள்சுழற்சி செய்யப்படுகின்ற ஒழுங்கு செய்யப்படுகின்ற செப்பமிடப்படுகின்ற அல்லது நீக்கம் செய்யப்படுகின்ற ஏதாவதொரு வசதியைக் கொண்ட இடத்திற்குக் கழிவுப்பொருட்களைக் கொண்டு செல்லும் வினைதிறனை மேம்படுத்தும் பணிக்காக கழிவுப்பொருட்களை மிகச்சிறிய வாகனங்களிலிருந்து மிகப்பெரிய வாகனங்களுக்கு மாற்றம் செய்தலும் அங்கு நடைபெறும்.

"நபர்" என்பது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத கம்பனியொன்றை அல்லது ஆட்கள் சங்கமொன்றை அல்லது ஆட்கள் குழுவொன்றைப் பொருட்படுத்தும்.

"பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கழிவுப்பொருள் சேகரிப்பாளர்" என்பது தொட்டிகளிலிருந்தும் கொள்கலன்களிலிருந்தும் கழிவுப்பொருட்களை கூட்டித் துடைத்துவிடுதல், சேகரித்தல், பெற்றுக்கொள்ளல் அல்லது நீக்கம் செய்தல் ஆகிய பணிகளுக்காக சபையினால் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஓர் ஊழியரை அல்லது இப்பணியை நிறைவேற்றுவதற்காகச் சபையுடன் ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டுள்ள ஒருவரைப் பொருட்படுத்தும்.

"வெவ்வேறாக்குதல்" என்பது இத்துணைவிதியில் பிரயோகித்துள்ள வர்க்கங்களின்படி கழிவுப்பொருட்களை வெவ்வேறாகத் தேர்ந்தெடுத்தலைப் பொருட்படுத்தும்.

"ஒழுங்குபடுத்தல்" என்பது கழிவுப்பொருட்களை பிரயோசனமானவொரு உற்பத்திப் பொருளாக மாற்றும் செயற்பாட்டைப் பொருட்படுத்தும்.

"சபை" என்பது ............................ பிரதேச சபையைப் பொருட்படுத்தும்.

"பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசம்" என்பது பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) அதிகாரத்தின்கீழ் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசத்தைப் பொருட்படுத்தும்.

"சுகாதாரப் பாதுகாப்பான நில நிரப்பல்" அதனுடன் சார்ந்த சமூக, சுகாதார மற்றும் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைவடையச் செய்வதற்காக இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட தரங்களுக்கு இணங்கும் வகையில் கழிவுப்பொருட்களை இறுதியாக நிலப்பரப்பொன்றிற்கு நீக்கம் செய்தலைப் பொருட்படுத்தும்.

"உரிமையாளர் அல்லது வசிப்பாளர்" என்பது மனையிடத்தின் உரிமையாளர் அல்லது உரிமையாளருக்குப் பதிலாக அட்டோர்னி அதிகாரம் பெற்றவொருவரை அல்லது உரிமையாளரால் தமது தொழிலை அல்லது தொழிற்சாலையை அல்லது தோட்டத்தை முகாமைத்துவம் செய்வதற்காக நியமனம் செய்யப்பட்ட பிரதிநிதியொருவரை அல்லது பொறுப்பாளரை அல்லது கூலி அடிப்படையில் பெற்றுக்கொண்ட ஒருவரைப் பொருட்படுத்துவதுடன் ஏனையவொரு நபரின் பணிப்புகளின்கீழ் செயல்புரியும் முகாமையாளர் ஒருவரையும் பொருட்படுத்தும்.

*6-773*

---

# பதவிகள் - வெற்றிடம்

**தென் மாகாண மாகாண சபை**

தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

**சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்றுத் தரம் III) பதவிக்கான ஆட்சேர்ப்பு (திறந்த)**

தென் மாகாண மாகாண சபையில் வெற்றிடமாக உள்ள சட்ட அலுவலர் பதவிக்கு இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்பதற்கு தெரிவுசெய்யும் முறை**.- இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களுள் தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் கூடுதலான புள்ளிகளைப் பெறுபவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். அதன்போது தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்ட (இல. 06 இல் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கல் நிபந்தனைகளின் பிரகாரம் நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும்.

02. **தேவையான தகைமைகள்**.- (i) உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்ட சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

(ii) **அனுபவம்**.- உயர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்தபின்னர் 03 வருடங்களுக்கு குறையாத சட்டத்தரணியாக செயல் திறனுடன் தொழில்புரிந்த அனுபவம் இருக்கவேண்டும்.

(iii) **ஏனைய தகைமைகள்**.-

* விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும். விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதியில் தென்மாகாணசபையின் அதிகாரப் பிரதேசத்தில் அண்ணளவாக உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக நிரந்தரவசதியுடையவராக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும் ;
* விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று இப்பதவியில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை சம்பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

(சகல விண்ணப்பதாரிகளும் தென் மாகாணத்தில் எந்தப்பாகத்திற்கும் சென்று சேவையாற்றக்கூடிய உடல் நலமும் உளநலமும் பெற்றிருத்தல் வேண்டும்.)

03. **சேவையில் நியமிப்பதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்**.-

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உரித்துடையது. விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய சம்பள நிதியத்துக்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும் ;

(ii) இப்பதவி மூன்று (03) வருடங்கள் தகுதிகாண்காலத்தைக் கொண்டது ;

(iii) அரச நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2007 க்கு அமைய மற்றும் அதனுடன் தொடர்பான சுற்றறிக்கைகளுக்கு அமைவாகவும் சேவையில் இணைந்து 05 வருட காலத்திற்குள் பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட மொழிக்கு மற்றைய அரசகரும மொழியில் உரிய சித்தியடைதல் வேண்டும் ;

(iv) மூன்று (03) வருடங்களுக்குள் முதலாவது வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சைக்கு தோற்றவேண்டும். இவ் நியமனம் அரசசேவை ஆணைக்குழுவின் சேவை நியமன ஒழுங்குவிதி மற்றும் நிதிப் பிரமாணம், தாபனக் கோவை என்பவற்றின் சட்டதிட்டங்களுக்கு அமைவானதாகும்.

04. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று விண்ணப்பதாரி 22 வயதுக்கு குறையாதவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

05. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவி ரூபா 22,935-10×645-8×790-17×1,050-53,555 மாதாந்த சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்துடையது. (SL 1-2006).

06. ஒழுங்கமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பின்வரும் புள்ளி வழங்கல் திட்டத்தின் அடிப்படையில் இடம்பெறும் :-

| | | |
|---|---|---|
| 1. | மேலதிக கல்வித் தகைமைகள் | 25 |
| 2. | மேலதிக தொழில்சார் தகைமைகள் | 15 |
| 3. | மேலதிக அனுபவம் | 15 |
| 4. | மொழித் தேர்ச்சி | 15 |
| 5. | கணனி திறமை | 15 |
| 6. | நேர்முகப் பரீட்சையின்போது வெளிக்காட்டும் திறமை | 15 |
| | மொத்தப்புள்ளி | 100 |

07. விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம் :-

விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அனைத்தையும் பூர்த்தி செய்து அனுப்பிய விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப்பரீட்சையின் போது அனைத்து சான்றிதழ்களினதும் மற்றும் சேவைச் சான்றிதழ் என்பவற்றின் மூலப் பிரதிகள் சமர்ப்பிக்கவேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது ஆளை அடையாளப்படுத்துவதற்காக கீழ்வரம் ஆவணங்களில் ஏதாவது சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(1) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

08. (அ) விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலின் மூலம் 2013.07.29 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரியில் கிடைக்கப்பெறுமாறு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அத்திகதிக்குப் பின் கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் :-

செயலாளர்,
தென்மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
6 ஆவது மாடி,
"மாவட்ட செயலாளர் கட்டிடம்",
காலி.

(ஆ) ஏ4 தாளில் விண்ணப்பங்கள் இரண்டு பக்கங்களிலும் கொண்டதாகவும் 1 தொடக்கம் 8 வரையும் முன்பக்கத்திலும், மீதி இரண்டாம் பக்கமாகவும் வருமாறு படிவதத்தில் நிரப்பப்படுதல் வேண்டும்.

(இ) கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், சட்ட அலுவலர் பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், நீதிபதி, பிரசித்த நொத்தாரிஸ், முப்படைகளிலுள்ள அதிகாரம்பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையின் வர்த்தமானி அறிவித்தல் செய்த பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 273,060 வருடாந்த அடிப்படைச் சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரசாங்க அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(உ) விண்ணப்பதாரி அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருப்பின் விண்ணப்பம் சேவை செய்யும் திணைக்களத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டவரினால் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

(ஊ) இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்துபோதல் அல்லது தாமதித்துக் கிடைத்தல் போன்ற எந்தமுறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

09. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் வேறு தகைமைகளை கவனமாகவும் சரியாகவும் உள்ளடக்கப்படல் வேண்டும். நியமனத்தின் போதோ நியமனத்தின் பின்போ அல்லது எந்நேரமும் தகைமைகள் பிழையானவை என அறிந்துகொள்ளும் போது அவரது பரீட்சார்த்தி தன்மை இரத்துச் செய்யப்படும். சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டபின் தகவல்கள் பிழையென அறியுமிடத்து சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

இந்த அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் ஏதாவது வேறுபாடுகள் இருந்தால் சிங்கள அறிவித்தலே சரியென எடுத்துக்கொள்ளப்படும்.

தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கிணங்க,

சமன் தர்ஷக பாண்டிகோரல,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
தென் மாகாண மாகாண சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தென் மாகாண மாகாண சபை**

**சட்ட அலுவலர் (நிறைவேற்று தரம் III) பதவிக்காக ஆட்சேர்த்தல்**

1. 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) உதா : திரு. /திருமதி/செல்வி SILVA A. B.
1.2 முழுப்பெயர் :----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
1.3 முழுப் பெயர் :----.
(சிங்களத்தில்/தமிழில்)
2. 2.1 முகவரி (பிரத்தியேக) :----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
2.2 முகவரி (பிரத்தியேக) :----.
(சிங்களத்தில்/தமிழில்)
2.3 முகவரி (அலுவலக) :----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
2.4 முகவரி (அலுவலக) :----.
(சிங்களத்தில்/தமிழில்)
(அரசாங்க சேவையில், மாகாண அரசாங்க சேவையில், கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் தமது அலுவலக முகவரியினை சமர்ப்பிக்கவும். முகவரியில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அதனை உடன் அறிவித்தல் வேண்டும்)
3. 3.1 பிறந்த திகதி :- ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]
3.2 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
4. தேசிய ஆளடையாள அட்டை இல. :----.
5. பால் (ஆண்/பெண்) :----.
6. தகைமைகள் :-
(அறிவித்தலில் 06 ஆம் பந்தியின் அடிப்படையிலான தகைமைகள்)
கல்வித் தகைமைகள்/தொழில்சார் தகைமைகள் :----.
அனுபவம் :----.

7. **விண்ணப்பதாரியின் உறுதிமொழி** :-

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும், உண்மையானவை எனவும் உறுதிமொழிகிறேன். இங்குதரப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் பிழையானவை அல்லது பொய்யானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவந்தால் நான் இப்பதவிக்குத் தெரிவு செய்யும் தகுதியை இழப்பேன் எனவும், தெரிவுசெய்யப்பட்ட பின்னர் தெரியவரின் எவ்வித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ................................................................. என்பவரை தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரியும் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................ ஆந் திகதியில் இட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் கையொப்பம்.

முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*9.* ***திணைக்கள/நிறுவன தலைவரின் விதப்புரை*** *(அரசாங்க அல்லது மாகாண அரச சேவையிலிருப்பவர்களுக்கு மாத்திரம்)*

*1. இவ்விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ள திரு./திருமதி/செல்வி ......................................... என்பவர் இத்திணைக்களத்தில், மாகாண சபையில் நிறுவனத்தில் ............................ ஆந் திகதி முதல் சேவையாற்றுகின்றார். அவர் நிரந்தர ஓய்வூதியம் பெறும், தற்காலிக பதவியில் உள்ளார். இவரின் வேலை மற்றும் நடத்தை திருப்திகரமானது எனவும், அவரது சேவைக்காலத்தினுள் (எச்சரிக்கை தவிர்ந்த) வேறு எவ்வித ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் ஆளாகவில்லை எனவும், அவர் மேற்குறிப்பிட்ட விபரங்கள் யாவும் சரியானவை என பரீட்சித்துப் பார்த்ததாகவும், அவை சரியானவை எனவும், இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் ................ ஆந் திகதி தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் இட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

-----,
*திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.*

*பெயர் :----.*
*பதவி :----.*
*திகதி :----.*
*திணைக்களம்/நிறுவனம் :----.*
*(உத்தியோகப்பூர்வ முத்திரையைப் பதிக்கவும்)*

*6-617*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.